**இராணுவ மனப்பாங்குடையவர் ஜனாதிபதியாவதற்குப் பொருத்தமில்லை** 06



**தேர்தல் மூலம் ஜனநாயகத்தை உறுதிசெய்வோம்** 05



**கொமைனியும் ட்ரம்பும் வளைகுடாவில்** 09









# மீள்பார்வை

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

சமூக மாற்றத்தி

இதழ் - 426 • 08 நவம்பர் 2019 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1441 •









# தேசிய பாதுகாப்பு என்பது கோதா உருவாக்கிய மாயை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோதா பய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பை முன்வைத்து மக்களிடம் வாக்குக் கேட்டு வரும் நிலையில், தேசிய பாதுகாப்பை தேர்தலுக்காக வேண்டி அவர் தான் பிரச்சினையாக மாற்றினார் என்ற கருத்துக்கள் தேர்தல் மேடைகளில் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. தம்புள்ளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார, அன்று ஸஹ்ரான்களைப் போசித்து வளர்த்தது மட்டுமன்றி அந்தப் பயங்கரவாத அமைப்புக்கு சம்பளம் வழங்கியர்கள் இந்த ராஜபக்ஷாக்கள் தான். பயங்கரவாதிகளை போசித்து (பக். 10)



# தேசிய மக்கள் சக்தியே குறைந்த செலவில் தேர்தல் பிரச்சாரம்

தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒக்டோபர் 14 முதல் 31 வரையான 17 நாட்களில் பிரதான வேட்பாளர்கள் மூவரும் தேர்தல் பிரச்சாரத்துக்கென செலவழித்துள்ள தொகை 100 கோடி ரூபா என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் மதிப்பிட்டுள்ளது.

மொத்தமான 100 கோடி ரூபாவில் கோதாபய ராஜபக்ஷ போட்டியிடுகின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே அதிக அளவில் செலவழித்துள்ளது. அந்தக் கட்சி முதல் 17 நாட்களிலும் 57 கோடி ரூபாவை (ஒரு நாளைக்கு 3 கோடி 35 இலட்சம்) தேர்தல் பிரச்சாரங்களுக்காகச் செலவழித்துள்ளது.

(பக். 10)



# கோதாவின் ஆட்சியில் ஹக்கீமுக்கு இடமில்லை

மஹிந்தவையும் கோதாவையும் இனவாதிகள் என பிரச்சாரம் செய்து வரும் ரவூப் ஹக்கீம் 16 ஆம் திகதி தேர்தல் முடிந்ததும் அமைச்சர் பதவி எடுப்பதற்கு வருவார். நாம் அவரை எமது பக்கத்துக்கே எடுக்க விட மாட்டோம். இந்தப் பக்கமே வர வேண்டாம் எனச் சொல்லுவோம் என ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷவை ஆதரித்து நீர்கொழும்பு பெரியமுல்லையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்தவிடமோ கோத்தாவிடமோ இனவாதம் இல்லை. மலேசியாவின் 70 வீத மலே இனத்தவர்களுடன் 30 வீத சீனர்கள் இணைந்து மலே இனத்தவரான மஹாதிர் முஹம்மதை ஜனாதிபதியாக்க முடியுமென்றிருந்தால் 70 வீத சிங்களவர்களுடன் ஏன் எமக்கு இணைந்து செல்ல முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

## தேர்தலில் போட்டியிடும் 13 போலி வேட்பாளர்களுக்கும் எதிராக நடவடிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர் களில் 13 பேர் பினாமிகள் என இனங்காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இரு பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவு பெற்றுக் கொடுப்பதற்காகவே



இவர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளதாகவும், இந்தப் 13 பேரில் ஒரு பிரதான வேட்பாளருக்கு 7 பேரும் அடுத்த பிரதான வேட்பாளருக்கு 06 பேரும் ஆதரவளிப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இவர்களது பிரதிநிதிகள் பிரதான வேட்பாளர்களின் பிரசார மேடைகளில் (பக். 10)

## சாய்ந்தமருது பள்ளிவாசலின் அரசியல் தொடர்பில் விசனம்



சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபைக் கோரிக்கையை முன்வைத்து சாய்ந்தமருது பள்ளிவாசல் பொதுஜன பெரமுன வேட்பாளர் கோதாபய ராஜபக்ஷவை ஆதரிக்க முடிவெடுத்ததில் இருந்து அந்தப் பள்ளிவாசல் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பாவிக்கப்பட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசல்களில் நடைபெறும் குத்பாக்கள், உரைகள் எதுவும் மத வழிபாட்டுத் தலங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற தேர்தல் விதியை மீறும் வகையில் அமைதல் கூடாது. ஆனாலும் சாய்ந்தமருது பள்ளிவாசல் எடுத்துள்ள அரசியல் நிலைப்பாட்டைத் தொடர்ந்து இங்கு தேர்தல் விதிகள் மீறப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபைக் கோரிக்கையை நல்லாட்சி அரசாங்கத்திடம் கோரிய போதும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலையீட்டினால் அது கிடைக்காமல் போனதாகத் தெரிவித்திருந்த சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் வை.எம். ஹனிபா, இதனால் தமது இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வதற்காக கோத்தாபய ராஜபக்ஷவை ஆதரிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

## வாக்களிப்பு நிலையத்தினுள் புர்காவைத் தவிர்ந்து கொள்க



முஸ்லிம் பெண்கள் வாக்களிக்க வரும்போது புர்கா அல்லது நிகாப் அணிந்து கொண்டு வர முடியும். வாக்களிப்பு நிலையத்தினுள் நுழையும் போது அவர்கள் தங்களது முகமூடியை நீக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். அவர்களிடம் வாக்குச் சீட்டை வழங்கும் போது அவர்களை அடையாளம் காணுவதற்காகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையில் இருப்பவர் தான் வாக்களிக்க வந்திருக்கிறாரா என்பதனை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது. தேர்தல் அதிகாரிகளுக்கு மட்டுமன்றி கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களை அடையாளம் காண வேண்டிய தேவை இருக்கிறது. புர்காவோ நிகாபோ ஒருவரது கலாச்சாரமாக இருக்கும் நிலையில் நாங்கள் அதனைத் தடுக்க முடியாது. ஆனாலும் உரிய வாக்காளருக்குத் தான் வாக்குச் சீட்டைக் கொடுக்கிறேனா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை தேர்தல் அதிகாரிகளுக்கு இருக்கிறது. இந்த நிலையில் யாராவது தங்களது முகமூடியை நீக்குவதற்கு மறுத்தால் அவர் வாக்களிப்பதில் இருந்து தவிர்க்கப்பட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டுக் கடனில் 15 வீதம் சீனாவிடமிருந்து

இலங்கையின் மத்திய அரசினதும் அரச நிறுவனங்களினதும் கடன்களைக் கூட்டிப் பார்க்கையில் இலங்கையின் மொத்த வெளி நாட்டுப் பொதுக் கடனில் 15 வீதம் சீனாவுக் குக் கொடுக்கப்பட வேண்டியது என சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. (பக். 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் வாக்கு எண்ணிக்கை குழப்பம்

## 50% இற்கு மேல் முதற் சுற்றில் தேவை என்பது ஏன்?

• வை.எல்.எஸ். ஹமீட்

அண்மையில் நடந்த அதிர்வு நிகழ்ச்சியில், குறித்த சுயேட்சை வேட்பாளர், இத்தேர்தலில் முதற்சுற்றில் யாரும் 50% மேல் பெறமாட்டார்கள். ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பவர்களும் இரண்டாம் வாக்கைப் பாவிக்க மாட்டார்கள். ஜே.வி.பி.யிற்கு வாக்களிப்பவர்கள் கூட, பெரிதாக இரண்டாம் வாக்கை அளிக்க மாட்டார்கள். எனவே, தனது இரண்டாம் வாக்கே வெற்றி வேட்பாளரைத் தீர்மானிக்கும் என்ற கருத்தை முன்வைத்தார்.

அப்போது நிகழ்ச்சியை நடாத்தியவர்களில் ஒருவர் ஒரு கேள்வியைத் தொடுத்திருந்தார். அதாவது:

வாக்குகள் 100
அ 48
ஆ 40
ஏனையோர் 12 அதில் உங்களுடைய வாக்குகள் 3



இப்பொழுது இரண்டாம் சுற்று எண்ணிக்கைக்கு செல்ல வேண்டும். இரண்டாம் சுற்றில் உங்களது இரண்டாவது வாக்குகள் அ யின் வெற்றியைத் தீர்மானிக்க அவசியமில்லை. ஆ யிற்கு அளித்தாலும் அவர் வெற்றிபெற போதாது. எனவே, நீங்கள் எவ்வாறு ஜனாதிபதியைத் தீர்மானிப்பீர்கள்? என்ற கேள்வியை எழுப்பினார்.

அதற்கு வேட்பாளரின் பதில் பலவாறாகவெல்லாம் அமைந்திருந்தது. ஒன்று, முதல் சுற்றில் அ, ஆ இருவரும் தோற்று இரண்டாம் சுற்றில் அவர்களில் ஒருவரை நாம் வெல்லவைப்போம்; என்பதாகும்.

நிகழ்ச்சி நடத்துனர் மீண்டும் கணக்கைச் சொல்லி, அ யின் வெற்றிக்கு உங்கள் வாக்கு தேவையில்லை; ஆ உங்கள் வாக்கு கிடைத்தும் வெற்றி பெற முடியாதே!, என்றபோது அது முதலாவது சுற்றில் பயன்படுமே என்றார்.

இரண்டாவது வாக்கு முதற் சுற்றில் எவ்வாறு பயன்படும்?

அதன்பின், நாம் வெற்றிபெறும் வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவோம் என்றார்.

அவர் வெற்றி பெறும் வேட்பாளர் என்றால் நீங்கள் எவ்வாறு ஜனாதிபதியைத் தீர்மானிப்பது?

நீங்கள் தீர்மானிப்பதாக இருந்தால் உங்களது இரண்டாம் வாக்கு கிடைக்காதபோது அவர் தோல்வியடையக் கூடிய வேட்பாளராக அல்லவா இருக்க வேண்டும்.

அதாவது முதலாம் சுற்று எண்ணிக்கையில் யார் இரண்டாவதாக வருவார்; என நீங்கள் கணிக்கின்றீர்களோ, அவருக்கு உங்கள் இரண்டாம் வாக்குகளை வழங்கி வெற்றி பெறச் செய்ய வேண்டும்?

சுருங்கக்கூறின், நீங்கள்/ உங்களது சிவில் அமைப்பு யாருக்கு இரண்டாம் வாக்கை வழங்கச் சொல்கிறீர்களோ அவர் முதல் சுற்று எண்ணிக்கையில் இரண்டாம் இடத்திற்கே வருவார் என பிரகடனப்படுத்துகிறீர்கள் என்பது பொருளாகும்.

### முதல் சுற்றில் 50% மேல் என்பது என்ன?

அளிக்கப்படுகின்ற செல்லுபடியான வாக்குகள் 100 எனக் கொள்வோம்.

முதல் சுற்று எண்ணிக்கையில்
அ 51 வாக்குகள்
ஆ 30 வாக்குகள்
ஏனையோர் 19 வாக்குகள் எனக் கொள்வோம்.

முதல் சுற்றில் 50% மேல் எடுத்தாலும் இரண்டாம் சுற்று எண்ணத்தான் வேண்டும் என சட்டம் சொல்கிறது என கற்பனை செய்வோம்.

இப்பொழுது இரண்டாம் சுற்றில் ஏனைய 19 பேரும் தமது இரண்டாம் வாக்கை ஆ யிற்கே அளிக்கிறார்கள் எனக் கொள்வோம். இப்பொழுது ஆ யின் கூட்டுத்தொகை என்ன? 49 ஆகும். இப்பொழுதும் அ தான் வெற்றியாளர்.

இப்படிப் பார்ப்போம்

எஞ்சிய 19 பேரில் 10 பேர் தமது இரண்டாம் வாக்கை ஆ யிற்கு அளிக்கின்றனர். ஏனைய 9 பேரும் அ, ஆ தவிர்ந்த ஏனையோருக்கு தமது இரண்டாம் வாக்கை அளிக்கின்றனர்.

இப்பொழுது அந்த 9 பேரும் தமது மூன்றாம் வாக்கை ஆ யிற்கே அளிக்கின்றனர். இப்பொழுது ஆயின் கூட்டுத்தொகை என்ன? இப்பொழுதும் 49 தான். எனவே, வெற்றியாளர் இப்பொழுதும் அ தான்.

உண்மையில் அந்த 19 பேரும் ஆ யிற்கே இரண்டாம் வாக்கை வழங்குவார்கள் என்று கூறமுடியாது. அவ்வாறு வழங்கினாலும் கூட அவரால் 49 ஐத் தாண்ட முடியாது.

எனவே, சிந்தித்துப் பாருங்கள். முதல் சுற்றில் ஒருவர் 50% மேல் பெற்றுவிட்டால் இரண்டாம் சுற்று எண்ணுவதில் ஏதாவது பிரயோசனம் உண்டா? இல்லை. காலநேரம்தான் வீணாகும். எனவேதான் முதல் சுற்றில் ஒருவர் 50% ஐத் தாண்டினால் அவர்தான் வெற்றியாளர். தாண்டாவிட்டால் இரண்டாம் சுற்று எண்ண வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது.



சிலர் இதனைப் புரிந்துகொள்ளாமல் முதல் சுற்றில் 50% இற்குமேல் என்பது 'கட்டாயம்'. அவ்வாறு பெறாவிட்டால் அவர்கள் முதல் சுற்றில் தோல்வியடைகிறார்கள். அதன்பின் இரண்டாம் சுற்றில், இரண்டாம் மூன்றாம் வாக்குகள் மூலம்தான் வெற்றி பெறுகிறார்கள் என்று கற்பனை செய்துகொண்டு பகிரங்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கூறுகிறார்கள்.

இன்னும் சில சகோதரர்கள் இரண்டாம் சுற்றில் 50% இல் மேல் கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்றெல்லாம் கேட்கின்றார்கள்.

எனவே, புரிந்துகொள்ளுங்கள், எந்தவொரு சுற்றிலும் ''50% இற்குமேல்'' என்பது கட்டாயம் இல்லை. அது வெறும் எண்கணிதம் மாத்திரமே!

### தேர்தல் விஞ்ஞாபனம்

தேர்தல் விஞ்ஞாபனம் என்பது 'தான் தெரிவுசெய்யப்பட்டால் செய்வதற்கு உத்தரவாதமளிக்கின்ற வேலைத்திட்டங்களும் அவற்றிற்கு வழிகாட்டுகின்ற கொள்கைத் திட்டங்களுமாகும்.

நீங்கள் ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்ற வேட்பாளர்தானே! உங்களுக்கேன் விஞ்ஞாபனம்? என்ற கேள்வியை நடுவர் தொடுத்தபோது அநுர, மகேஷ் சேனாநாயக்கா போன்றவர்களும் வெளியிட்டுத்தானே இருக்கிறார்கள் என்பது அவரின் பதிலாக இருந்தது.

தேர்தல் முறையில்தான் அவருக்குத் தெளிவில்லை குழப்பம் என்று விட்டுவிடுவோம். அவர் நீண்ட அனுபவமுள்ள அனுபவசாலி. தான் அரசியல் துறையில் உயர்கல்வி கற்றிருப்பதாகக் கூறுகின்ற ஒருவர். ஒரு சராசரி மனிதன்கூட கூற முடியாத பதிலை எவ்வாறு கூறினார்?

அவர்கள் தம்மை வெற்றியடையச் செய்யுங்கள். இவற்றையெல்லாம் செய்வோம் என்று விஞ்ஞாபனம் வெளியிட்டிருக்கின்றார்கள். இவரும் என்னையும் ஜனாதிபதியாக்குங்கள், நான் இவற்றைச் செய்கிறேன்; என்றா விஞ்ஞாபனம் வெளியிட்டிருக்கின்றார்? அவர்களை ஒப்பிட்டு இவர் ஏன் அந்தப் பதிலைக் கூறினார்?

இவரது விஞ்ஞாபனத்தை அடுத்த வேட்பாளரிடம் கொடுத்து அவர்கள் அமுல் படுத்த வேண்டுமாம். ஆனால் அவை கோரிக்கைகளும் இல்லையாம். demand உம் இல்லை. request உம் இல்லை என்கின்றார்.

சமூகத்தின் சார்பில் போட்டியிடுகிறேன் எனக் கூறிக் கொண்டு இவ்வாறு சொல்வது தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் கேலிக்குரியதாக்காதா?

இந்த விஞ்ஞாபனம் வெளியிடல் முஸ்லிம்களுக்கு கிடைத்த பொன்னான சந்தர்ப்பம் என்பதுபோல் கூறுகிறார். தமிழ்க்கட்சிகளின் 13 அம்ச கோரிக்கைகளுக்கு தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களில் கிடைத்த விளம்பரத்தில் 100 இல் ஒரு பங்கு விளம்பரமாவது இதற்குக் கிடைத்ததா? ஐந்து லட்சம் முஸ்லிம் குடும்பங்களுக்கு அனுப்பி அவர்கள் என்ன செய்வது?

இதைவிட இவற்றை முஸ்லிம்களின் கோரிக்கையாக முன்வைத்து நேரடியாக ஒரு வேட்பாளருக்கு ஏன் ஆதரவு வழங்க முடியாது? ஏன் வேட்பாளர் வேடம்?

இந்த சமுதாயத்தை எத்தனை பேர் எத்தனை பக்கம் ஏமாற்றுகிறீர்கள். பாவம் இந்த சமுதாயம்.

அரசியல்வாதிகளின் சுயநலத்திற்கு நான் எதிரானவன் அல்ல. அரசியல்வாதி சுயநலமே இல்லாத பொதுநலவாதியாக இருக்க வேண்டுமென்ற வரட்டுத் தத்துவம் நான் பேசுவதில்லை. ஏனெனில் அது நடைமுறைச் சாத்தியமல்ல.

இது கலீபா உமர் ( ரலி) அவர்களின் காலமல்ல. இங்கு அரசியலில் யாரும் அவ்வாறு இல்லை. அவ்வாறு யாராவது இருக்க முற்பட்டால் அவர்களுக்கு இந்த அரசியலோ, இந்த சமூகமோ இடம் கொடுக்காது. ஆனால் உங்கள் சுயநலம் பொது நலத்தை மேவாததாக இருக்கட்டும்.

சமூகத்திற்கு தீங்கு இல்லாதவரையில் எதை வேண்டுமானாலும் அனுபவித்துக் கொண்டு செல்லுங்கள்.

இந்தத் தேர்தல் இந்த சமூகத்திற்கு இக்கட்டான ஒருதேர்தல். இதைப் புரியாமல் வேதாந்தம் பேசிக்கொண்டு ஒரு கூட்டம் அலைகிறது. அதற்குள் நீங்களும் குளிர்காயாதீர்கள்.

## 2019 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேசிய ஷூரா சபையின் பொதுவான வழிகாட்டல்கள்

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி, சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணிவரை நடைபெறவுள்ள ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் வாக்களிப்பில் 15,992,096 பேர் பங்கேற்கத் தகைமை பெற்றுள்ளனர்.

வாக்களிப்பின் போது, அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டையை அல்லது தேர்தல் ஆணைக்குழு அங்கீகாரத்துடனான தற்காலிக அடையாள அட்டையை சமர்ப்பிப்பதுடன், உரிய அதிகாரிகள் முன்னிலையில் ஆள் அடையாளம் (முக அடையாளம்) உறுதிசெய்யப்படல் வேண்டும்.

கட்சிகள் சார்பாகவும், சுயாதீன உறுப்பினர்களாகவும் 35 போட்டியாளர்கள் களமிறங்கியுள்ள இந்தத் தேர்தலில் செல்லுபடியாகும் மொத்த வாக்குகளில் 50% த்திலும் கூடிய (சுமார் 65 இலட்சம்) வாக்குகளைப் பெறுபவரே ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார்.

எந்தவொரு வேட்பாளரும் முதலாம் கணிப்பீட்டில் 50% வாக்குகளைப் பெறாத விடத்து மாத்திரம், அதிகூடிய வாக்குகளைப் பெற்ற முதல் இரு வேட்பாளர்களும் இரண்டாம் சுற்றுக் கணிப்பீட்டுக்குத் தகைமை பெற்றவர்களாகக் கருதப்பட்டு, ஏனைய 33 வேட்பாளர்களும் இரண்டாம் சுற்றுலிருந்து (தேர்தலிலிருந்து) நீக்கப்படுவார்கள்.

இருப்பினும் நீக்கக்கப்பட்ட 33 வேட்பாளர்களுக்கும் கிடைக்கப் பெற்ற வாக்குகளில், இரண்டாம் சுற்றுக்குத் தகைமை பெற்ற இரு வேட்பாளர்களுக்குமான விருப்பு வாக்குகள் ஏதும் இடப்பட்டிருப்பின் அவை பிரத்தியேகமாக (முறையே 2ஆம், 3ஆம் விருப்பு வாக்குகள்) எண்ணப்பட்டு தகைமைபெற்ற இரு முதன்மை வேட்பாளர்களினதும் ஆரம்ப வாக்குகளுடன் சேர்க்கப்பட்ட பின்னர் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற போட்டியாளர் வெற்றிபெற்றவராகக் கருதப்படுவார்.

ஆகவே, மொத்த வாக்காளர்களில் சுமார் 10 வீதமான வாக்குகளைக் கொண்ட இலங்கை முஸ்லிம்களாகிய நாம் தேசத்தின் நலன் கருதி, தேசிய ஒற்றுமைக்கும் இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுத்து, மனித உரிமைகளையும் சமய உரிமைகளையும் மதித்து, நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் ஒரு ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதில் ஒரு பொதுவான புரிந்துணர்வுடன் எமது அனைத்து வாக்குகளும் வீணடிக்கப்படாமல் பிரயோகிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆட்சியாளர்கள் தெரிவுசெய்யப்படலாம், மக்கள் தெரிவுகளும் காலத்துக்குக் காலம் மாறலாம். ஆனால் சமூக ஒற்றுமை பாதிப்படையக் கூடாது. இந்தத் தேர்தல் களம் இன மத நல்லுறவுக்கான ஒரு ஆரம்ப தளமாகப் பிரயோகிக்கப்படல் வேண்டும். எனவே தேசத்தின் நலன் கருதி பொருத்தமானதொரு வேட்பாளருக்கு வாக்களிப்பதில் ஒற்றுமையாகவும், தூரநோக்குடனும், உளத்தூய்மையுடனும் செயற்படுவது சமூகக் கடமையென தேசிய ஷூரா சபை கருதுகின்றது.

முஸ்லிம் சமூகம் மற்றும் தேசம்சார் கரிசனைகளை ஆராய்ந்து அவ்வப்பொழுது உரிய தரப்புகளின் கவனத்திற்குக் கொண்டுவரும் தேசிய ஷூரா சபை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கான முன்மொழிவுகளை ஆராய்ந்து ஆவணமாகத் தயாரித்து உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வர ஆவன செய்துள்ளது என்பதனையும் அறியத் தருகிறோம்.

**தாரிக் மஹ்மூத்**
தலைவர், தேசிய ஷூரா சபை

## பொய் மூட்டைகள்

மிருகம் செத்த
துர்வாடை வீசியது
அவர்களின்
பொய் மூட்டைகளில்

அவர்கள்
கதைவிட்டார்கள்
இவர்களும்
கைதட்டினார்கள்

அலங்கரிக்கப்பட்ட
மேடைக்கு முன்னாலுள்ள
மரங்களின்
காதுகளுக்குள்ளும்
சுவர்களின்
உடலுக்குள்ளும்
புக மறுத்த
அவர்களின்
புழுகல்கள்
பாமரனின்
அறியாமைக்குள்
மெல்ல நுழைந்து
கொண்டிருந்தது

இரவை பகலாக்குவதாகவும்
பகலை இரவாக்குவதாகவும்
அவர்கள்
மீண்டுமொரு
கதை சொன்னார்கள்
இவர்களும்
சந்தோசக் களிப்பில்
மிதந்தார்கள்



எல்லா
தேர்தல் மேடைகளும்
மக்களை
மடையர்களாக
மந்திரிப்பதில்
வெற்றி
கண்டுகொண்டுதானிருக்கின்றன

அமாவாசை இரவில்
நட்சத்திரங்களை
எண்ணியதாக

இரசாத் இமாமுத்தீன்

## வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தபால் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம்

( மினுவாங்கொடை நிருபர் )

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் 2192 தபால் அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் 75 வீதம் நிறைவடைந்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்காளர்கள் அட்டைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் என, பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க கூறியுள்ளார். இதற்காக 8000 ஊழியர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள், அருகிலுள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என, பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கோத்தாபய ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தும் யாராக இருந்தாலும் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள்"



ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி

**கடந்த 21/4 தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம் சமூகம் ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கு முகம்கொடுக்கிறது. இவ்வாறான கட்டத்தில் முஸ்லிம் சமூகம் எவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?**

பெரும்பான்மைச் சமூகத்துடன் சேராமல் உலகில் எங்கும் முன்னேற்றம் நிகழ்ந்தது கிடையாது. பெரும்பான்மைச் சமூகத்தைப் புறந்தள்ளி விட்டு சிறுபான்மைச் சமூகம் சேர்ந்து ஒரு கிராமத்தை முன்னேற்றியதாக வரலாறுகள் இல்லை. நாம் பெரும்பான்மைச் சமூகத்துடன் சேர்ந்து நடக்க வேண்டும். நாம் இந்நாட்டில் 10 வீதமாகவும், தமிழர்கள் 15 வீதமாகவும் இருந்துகொண்டு இனவாதக் கட்சிகளை உருவாக்கி பெரும்பான்மைக் கட்சிகளின் பின்னால் செல்லும் போது 75 வீதமான சிங்களவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். பத்துப் பதினைந்து வீதங்களை வைத்து ஜனாதிபதியை உருவாக்கப் பார்க்கிறீர்கள் என்றால் 75 வீதத்தை வைத்துக்கொண்டு நாங்கள் சும்மா இருப்பதா என்று அவர்கள் யோசிப்பார்கள். இப்படி மனிதர்கள் இனவாத முறையில் பிரியும் நிலை ஏற்படுகிறது. இது ஜனநாயகத்துக்கு சரியானதல்ல. நாம் இனவாத அடிப்படையில் அல்லாமல் கொள்கை அடிப்படையில் பிரதான கட்சிகளுடன் நிற்க வேண்டும்.

இன்று பெரும்பான்மை முஸ்லிம்கள் கோத்தாபயவுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். கடந்த முறை 95 வீதமான முஸ்லிம்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கி ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடித்தனர். ஆனால் நாம் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்தோமா? இலங்கை முஸ்லிம்களாகிய எமக்கு முக்கியமாக நிம்மதி, பாதுகாப்பு, அடுத்தவர்களுக்குத் தொந்தரவு இல்லாத வகையில் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான சுதந்திரம் மற்றும் வியாபாரத்தை நன்றாகச் செய்யக் கூடிய நிலைமைகள் காணப்பட வேண்டும். இவையெல்லாம் சரிவடைந்தன.

சஹ்ரானுக்கு எதிராக 97 உளவுத்துறை அறிக்கைகள் காணப்பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் எம்மை பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றனர். ஏன் இப்படி நடந்தது? இவ்வாட்சியாளர்கள் சஹ்ரானுக்குத் தேவையான முறையில் செயற்பட வைத்தமையே இதற்குரிய காரணமாகும். உறுதியான தலைமைத்துவம் இல்லாவிட்டால் இப்படித்தான் நடக்கும். ஒரு கொள்கைப் பிடிப்புள்ள, இந்நாட்டை கட்டியெழுப்ப முடியுமான, ஏற்கனவே தன்னால் செய்ய முடியும் என நிரூபித்துக் காட்டிய ஒருவருக்கே நாட்டின் தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டும்.

தற்பொழுது பிரதான இரு வேட்பாளர்களினதும் பிரச்சாரத்தை எடுத்துப் பாருங்கள். ஒருவர் நகைப்புக்கிடமான கதைகளைக் கூறுகின்றார். மற்றவர் நாட்டை முன்னேற்றும் கதைகளை கூறுகின்றார். இதனாலேயே கோத்தாபயவுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கில் நான் செயற்படுகின்றேன்.

**நீங்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கான காரணங்கள் என்ன?**

2005இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட போது 3 வீதமான பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. முஸ்லிம்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலிருந்து துரத்தப்பட்டிருந்தார்கள். வடபுல முஸ்லிம்கள் தங்களுக்குச் சொந்தமான 100,000 சதுர கிலோ மீற்றர் விவசாய நிலம், வீடு, பாடசாலை மற்றும் பள்ளிகளை இழந்த நிலையிலேயே அகதிகளாக வந்தார்கள். அம்மக்கள் அகதி முகாம்களில் கஷ்டத்துடன் வாழ்ந்தார்கள். கிழக்கிலும் முஸ்லிம்கள் சதாம் ஹுஸைன் கிராமத்தில் தாக்கப்பட்டார்கள், அதனைத் தொடர்ந்து ஏறாவூர் பள்ளிவாசலுக்கு தாக்குதல் நடத்தப்பட்டது. காத்தான்குடி பள்ளி

(பக்.15)

## "சிங்கப்பூரின் லீ குவான் யூ மற்றும் கனடாவின் இளம் பிரதமரான ஜஸ்டின் புரோடோவிற்கும் ஒப்பான ஒருவராக நான் சஜித்தை காண்கிறேன்"



முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

**நீங்கள் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான காரணங்கள் என்ன?**

இந்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாரம்பரியமாகவே உரித்தான விடயங்களுக்கு பொருத்தமான தலைவராகவும் ஐ.தே.க.வின் அபிவிருத்திக் கொள்கைகளை மிக வேகமாக கொண்டுசெல்லக் கூடிய ஒரு தலைவராகவும் நான் சஜித்தை காண்கிறேன். சமூக ஜனநாயகம் என்பது ஐ.தே.க.வின் கொள்கையில் ஊறிப்போயுள்ள விடயம். இந்நாட்டில் ஜனநாயகத்தை போற்றும் மக்களுக்கு அவ்வரையறைக்குள் சமூக ரீதியில் கூடுதல் அனுகூலங்களை ஐ.தே.க.வே வழங்கியிருக்கின்றது.

மாறுபட்ட இன்றைய உலகில் நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குப் பொருத்தமான வகையில் 5ஆம் தொழில்நுட்ப புரட்சிக்கு உலகம் சுழன்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் அதற்கு பொருத்தமான வகையில் நாட்டு மக்களுக்கு தலைமைத்துவம் வழங்க முடியுமான ஜனநாயக முகாமில் உள்ள மிகவும் பலம் பொருந்திய தகைமை படைத்தவராக நான் சஜித்தை காண்கிறேன்.

**இன்று நாட்டின் தலைவர்கள் குறித்தும், அரசியல்வாதிகள் குறித்தும் மக்கள் நம்பிக்கையிழந்திருக்கும் ஒரு கட்டத்திலேயே நாடு மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம்கொடுக்கப் போகின்றது. இதனை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

முக்கியமாக நாட்டின் இளம் தலைமுறையினர் அரசியல்வாதிகள் தொடர்பில் நம்பிக்கையிழந்து போயுள்ளனர். நடைமுறை ரீதியில் தம்மை வெற்றிகரமாக்கிக் கொண்ட அல்லது வெற்றியை நிரூபித்துக் கொண்ட தலைவரை மாத்திரமே மக்கள் நம்புகின்றனர். இவ்விடயத்தில் சஜித் பிரேமதாச என்பவர் நம்பிக்கையிழந்துபோன மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்கும் தலைவராகக் காணப்படுகின்றார்.

சிங்கப்பூரின் லீ குவான் யூ மற்றும் கனடாவின் இளம் பிரதமரான ஜஸ்டின் புரோடோவிற்கும் ஒப்பான ஒருவராக நான் சஜித்தை காண்கிறேன். ஜஸ்டின் புரூடோ அந்நாட்டின் சகல மக்களதும் ஆதரவைப் பெற்ற ஒருவர். சஜித் பிரேமதாச நடைமுறை ரீதியாக தன்னை அடையாளப்படுத்திய பல்வேறு நிகழ்வுகளை சுட்டிக்காட்ட முடியும். சஜித் பிரேமதாசவுக்கு தனது தந்தையாரின் காலத்திலேயே அரசியல் பிரவேசம் பெற்றிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. தந்தையின் இழப்பைத் தொடர்ந்து 1994 இலேயே அவர் அரசியல் பிரவேசம் பெற்றார்.

இவருக்கு இலகுவாக தனது தந்தையாரின் தொகுதியான மத்திய கொழும்பில் போட்டியிட்டு பாராளுமன்றம் வந்திருக்க முடியும். ஆனால் அவர் அப்போது வறுமைக் கோட்டின் கீழிருந்த தனது ஊரான ஹம்பாந்தோட்டைக்கு சென்று வாக்குக் கேட்டு வெற்றிபெற்றார். வீடமைப்பு நிர்மாண அமைச்சுப் பதவியை பெற்று இந்நாட்டின் வறிய மக்களுக்கு பல ஆயிரக்கணக்கிலான வீடுகளை கட்டிக் கொடுத்தார். அதனை இன்றும் செய்து வருகின்றார். இப்பேர்ப்பட்ட ஒரு மனிதர் தொடர்பில் மக்கள் நம்பிக்கையிழக்க மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

**கிராமிய மக்களது மனங்களை வென்ற சஜித் பிரேமதாசவினால் நகர்ப்புற புத்திஜீவிகளது நம்பிக்கையை வெல்ல முடியாமல் போயிருப்பதாக ஒரு கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து...**

இது முற்றிலும் பொய்யான வாதம். இவர் அதிகமாக பொதுமக்கள் மத்தியில் நடமாடுவது வேறு விடயம். எனினும் இந்த ஜனாதிபதித் தேர்தல் அவர் எப்படிப்பட்ட கதாபாத்திரம் என்பதை மக்களுக்கு விளங்கிக்கொள்ளும் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது.

(பக்.15)

## எதிரியை தோற்கடிப்பதற்காக துரோகிக்கு வாக்களிக்க முடியுமா?



நஜா முஹம்மத் -
பொதுச் செயலாளர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆதரிப்பதன் நோக்கம் என்ன?**

ஜேவிபி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஐக்கிய இடதுசாரி முன்னணி போன்ற அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக இன்னும் 30 இற்கும் மேற்பட்ட சிவில், இடதுசாரி சக்திகள் ஒன்றிணைந்து தேசிய மக்கள் சக்தி என்றொரு பலமான கூட்டணியை உருவாக்கியுள்ளது. இதன் வேட்பாளராக நாம் அநுர குமார திசாநாயக்கவை தெரிவுசெய்தோம்.

கடந்த 71 வருடங்களாக இந்நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்து வரும் ஐ.தே.க. மற்றும் சு.க. ஆகிய கட்சிகள் தேர்தல்களின் போது மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை மறந்தே செயற்பட்டு வந்துள்ளன. குறிப்பாக கடந்த 2015 இல் ஆட்சி மாற்றத்துக்காக மைத்திரிபால சிறிசேனவுக்கு NFGG ஆதரவு வழங்கியது. நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்தல், அரசியலமைப்புச் சீர்திருத்தம், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட பல அடிப்படையான மாற்றங்களை முன்னிறுத்தி எமது கட்சி கடந்த ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு நல்கியது. என்றாலும் துரதிஷ்டவசமாக எதிர்பார்த்த விடயங்கள் போதியளவு நடைபெறாததன் காரணமாக தொடர்ந்தும் இப்பிரதான சக்திகள் இரண்டிற்கும் ஆட்சியதிகாரத்தை வழங்குவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதால் இவற்றுக்கு மாற்றமாக ஒரு மாற்றுச் சக்தியை கட்டியழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்நாட்டைப் பற்றி உண்மையான சிந்தனையுடன் இந்நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை முன்னிறுத்தி தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அதன் வெற்றிக்காக அதனுடைய வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம்.

**தற்பொழுது தேசிய மக்கள் சக்தி களத்தில் இறங்கி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. உங்களது அவதானத்தின் படி இம்முறை தேர்தலில் கூடுதலான வாக்குகளை பெறக்கூடிய அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றதா?**

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஒரு விஷேடமான தேர்தல். கடந்த எல்லாத் தேர்தல்களும் பிரதான இரண்டு கட்சிகளின் வேட்பாளர்களுக்கிடையிலான போட்டியாகவே காணப்பட்டு வந்தது. 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறும் ஒருவர் இலகுவாக வெற்றிபெறக்கூடிய ஒரு சூழல் அப்போது காணப்பட்டது. ஆனால் இம்முறை தேர்தல் மும்முனை போட்டியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிரதான காரணம் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க.

கடந்த ஆகஸ்ட் 18ஆம் திகதி காலி முகத்திடலில் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் முன்னிலையில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுர குமார திசாநாயக்க அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்தே இந்தத் தேர்தலின் சமநிலை ஒரு மும்முனைப் போட்டியாக மாறிவிட்டது. அன்றிலிருந்து நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற பிரச்சார நடவடிக்கைகள் ஒரு உத்வேகமாகவும் மூன்றாவது சக்தி பலம்பெறுகின்ற ஒரு தேர்தலாகவும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மாறியிருக்கின்றது.

எனவே மக்கள் இன்று மாற்றத்தை வேண்டி அநுர குமாரவை நோக்கி வருகின்ற வீதமும் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் ஆதரவுத் தளம் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கும் காணப்படுகிறது. இளைஞர்கள் குறிப்பாக புதிய வாக்காளர்கள் பிரதான இரண்டு சக்திகளையும் நிராகரித்து மூன்றாம் சக்தியை நாடி வருகின்ற வீதமும் அதிகரித்திருக்கிறது. இது மிகப்பெரும் திருப்பு முனையாகும்.

(பக்.14)

## "தேர்தலிலே போட்டியிடுவதனூடாக என்னை சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது"



ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் போட்டியிடத் தீர்மானித்தமைக்கான காரணங்கள் என்ன?**

இந்த நாட்டினுடைய ஜனாதிபதியை தீர்மானிக்கின்ற ஒரு ஜனாதிபதி வேட்பாளராகவே நான் போட்டியிடுகிறேன். எதிர்வரும் தேர்தலில் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் 50 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை பெற முடியாது. அந்த சூழ்நிலையிலேயே என்னுடைய வாக்குகள் இரண்டாவது தெரிவு வாக்கினூடாக இந்த நாட்டினுடைய ஜனாதிபதியை தீர்மானிக்கின்ற ஒரு சக்தியாக முஸ்லிம் சமூகத்தை மாற்ற முடியும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்காக வேண்டி தேர்தல் களத்தில் நான் குதித்திருக்கின்றேன்.

**நீங்கள் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையில் கிழக்கு மாகாணம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற முஸ்லிம்கள் உங்களுக்கு ஆதரவு வழங்குவார்கள் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா?**

நான் முழுமையாக எதிர்பார்க்கின்றேன். இந்நாட்டிலுள்ள மொத்த மாவட்டங்களில் கிட்டத்தட்ட 19 மாவட்டங்களுக்கான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை நான் ஆரம்பித்திருக்கின்றேன். நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம் சமூகம் பெரும்பான்மை மக்கள் எனக்கு வாக்களிப்பதற்கு தயாராகிக் கொண்டிருப்பதை அறிந்து நான் மிகவும் சந்தோசமடைகின்றேன்.

**நீங்கள் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள். ஆனால் சு.க. பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தாபயவை ஆதரிப்பதாக பகிரங்கமாக அறிவித்துள்ளது. அத்துடன் சு.க.விலிருந்து எந்தவொருவரும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவில்லை. இப்படியான சந்தர்ப்பத்தில் நீங்கள் எந்த அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறீர்கள்?**

நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்தவர் ஒருவராக இருந்தேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். அந்த அடிப்படையில் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். கட்சி இது தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுத்ததாக நான் அறியவில்லை. கட்சியினுடைய உறுப்பினர்கள் தற்பொழுது பல்வேறுபட்ட கட்சிகளில் சேர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கட்சி இது தொடர்பாக எவ்விதத் தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் உங்களது பெயரில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான குற்றச்சாட்டுக்களை நீக்கிக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்த ஜனாதிபதி வேட்பாளர் போட்டி அமையுமா?**

ஏற்கனவே பொலிஸ் திணைக்களம் CID, TID, NID, FCID இருக்கின்ற திணைக்களங்கள் அனைத்தும் விசாரித்து எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் இல்லை, எல்லாம் அப்பட்டமான பொய்யென்று எனக்கு சான்றிதழ் வழங்கியிருக்கின்றார்கள். பாராளுமன்றமும் இதனை அறிவித்துள்ளது. ஆகவே இன்னுமொரு தேர்தலிலே போட்டியிடுவதனூடாக என்னைச் சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. ஏற்கனவே பொலிஸ்மா அதிபர் இவர்களுக்கும் பயங்கரவாதத் துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென தெளிவாகவே அறிக்கை விட்டிருக்கிறார்.

**உங்களுக்குச் சொந்தமான பட்டிக்கலோ கம்பஸை பாதுகாப்பதற்கே இம்முறை தேர்தலில் போட்டியிடுவதாக ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறதே இது குறித்து...**

பட்டிக்கலோ கம்பஸை பாதுகாக்க நான் இந்தத் தேர்தலில் களமிறங்கவில்லை. பட்டிக்கலோ கம்பஸை பாதுகாக்க வேண்டிய எந்த அவசியமும் எனக்கில்லை. குறிப்பாக அந்தப் பல்கலைக்கழகம் ஏற்கனவே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் சட்டபூர்வமான அதனுடைய எல்லாப் பணிகளையும் செய்திருக்கின்றோம். அரசாங்கம் சாதாரண சட்டங்களின் கீழோ அல்லது அவசர கால

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## தூரநோக்குடன் வாக்களியுங்கள்

தம்மைத் தாமே ஆளக்கிடைத்த சுதந்திரத்துக்குப் பின்னரான 70 வருட காலத்தில் இலங்கை தனது 07 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யவிருக்கிறது. இந்த ஏழு தசாப்தங்களிலும் இலங்கையை முன்னேற்றுவதற்கான தூரநோக்கான திட்டங்கள் எதுவும் இன்றியே நாடு ஆளப்பட்டிருக்கிறது என்பது துரதிர்ஷ்டமே. அந்த வகையில் நாடு இன்னும் நாட்டுத் தலைவர் ஒருவரை அடைந்து கொள்ளவில்லை என்பது நாட்டு மக்களின் துர்ப்பாக்கியமே.

ஒவ்வொரு தேர்தல்களின் போதும் ஜனாதிபதியாகப் போட்டியிடுகின்றவர்கள் முன்வைக்கின்ற வாக்குறுதிகள் அவ்வப்போதைய குறுகிய தேவைகளை முன்வைத்தே வழங்கப்படுகின்றன. சில வேளை அன்றாடப் பசியைப் போக்குவதற்கான வாக்குறுதிகளாகவும் அவை அமைந்துள்ளன. அவை கூட பெரும்பாலான சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்படாமல் போயிருக்கின்றன.

இந்த வகையில் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளர் கோதாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பினை முன்னிறுத்தியிருக்கிறார். மறுபுறத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச பலமான நாடு என்ற கோட்பாட்டை முன்வைத்தி ருக்கிறார். மக்கள் சக்தியின் வேட்பாளர் நாட்டுக்கான எதிர்காலக் கனவுகளை திட்டமாக முன்வைத்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு என்பது நாட்டின் இருப்புக்கு முக்கியமானதாகும். அது நாட்டின் இறைமையைக் கூடப் பாதிப்பதாக அமைய முடியும். ஆனாலும் தற்போது சொல்லப்படுகின்ற தேசிய பாதுகாப்புக் கோஷம் உண்மையானது தானா? 2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது முதல் இம்முறைய தேர்தலுக்கு 06 மாதங்களுக்கு முன்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் வரை தேசிய பாதுகாப்பு முக்கிய பிரச்சினையாக இருக்கவில்லை. அந்த வகையில் தற்போதைய இந்த தேசிய பாதுகாப்புப் பிரச்சினை தேர்தலுக்காகப் படைக்கப்பட்டதொன்றா என்ற சந்தேகம் பரவலாக நிலவுகிறது.

விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார தம்புள்ளையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது, சஹ்ரான்களைப் போசித்து வளர்த்தது மட்டுமன்றி அந்தப் பயங்கரவாத அமைப்புக்களுக்கு வேதனம் வழங்கியவர்களும் இந்த ராஜபக்ஷாக்களே. அன்று பௌத்த பிக்குகளைக் குரூரமாகக் கொன்று குவித்த கருணா அம்மான், பிள்ளையான்களுக்கு புகலிடம் அளித்து, பின்னர் ஸஹ்ரான்களையும் போசித்து வளர்த்த இந்த ராஜபக்ஷாக்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கொக்கரிப்பது வேடிக்கையாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

இது தொடர்பில் இவர் மட்டுமன்றி கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். தேசியப் பாதுகாப்பு என்பது முக்கியமானது என்றாலும் தற்போது பேசப்படும் தேசிய பாதுகாப்பு என்பது தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட ஒரு வெற்றுக் கோஷம் என்பதை தேர்தல் பிரச்சார மேடைகள் நாளுக்கு நாள் புலப்படுத்தி வருகின்றன.

கடந்த எழுபது வருட காலங்களிலும் இலங்கை மக்கள் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டே வாக்களித்திருக்கிறார்கள். அதனால் ஒவ்வொரு தேர்தலின் போதும் மக்கள் தமது உண்மையான பிரச்சினைகளை மறந்து விடுகிறார்கள். விளைவாக நாடு இன்று மீளமுடியாத கடன்சுமைக்குள் சிக்குண்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் நடத்தப்பட்ட வியாபாரம் நாட்டை இந்த நிலைமைக்கு மாற்றியிருக்கிறது.

இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்திப் பாதையில் இலக்கு நோக்கி நாட்டை நடத்திச் செல்லக் கூடிய தலைவர்களை இனியாவது மக்கள் தூர நோக்குடன் தெரிவு செய்ய வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 5353635
பெக்ஸ் : 011 5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk


# அரசியல் பௌத்தம், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சிறுபான்மையினர்

• கலாநிதி அமீர் அலி

(மூலம்: கலம்பு டெலிகிராப்)

இலங்கையில் அரசியல் பௌத்தத்தின் தோற்றம் 19 ஆம் நூற்றாண்டுக்குச் சென்றாலும் 1950 களில் இது தேர்தல் வெற்றிக்கான கருவியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவனர் SWRD பண்டாரநாயக்க அவர்களால் பயன்படுத்தப்பட்டது. அவரிடமிருந்து தான், தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்க சக்தியை நிலைநிறுத்த சிஐஏ கூட பௌத்த மதத்தை அரசியல் மயமாக்கக் கற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. (Eugene Ford, Cold War Monks, Yale University Press, 2017). 1950 களில் இருந்து, அரசியல் பௌத்தம் இலங்கையின் இன - ஜனநாயகத்தில் ஒரு நிரந்தர அம்சமாக மாறியுள்ளது. ஒரு வகையில் பார்த்தால், அரசியல் பௌத்தம் 2005 இற்கும் 2009 இற்கும் இடையில் ஒரு ஆயுதமேந்திய தேசியவாத தமிழ்ப் போராளிகளை எதிர்கொண்ட போது ஒரு இராணுவ முகத்தை ஏற்றது. அந்த மோதலின் முழுமையான வெற்றி அரசியல் மயமாக்கப்பட்ட பௌத்தர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தது.

2009 இல் உள்நாட்டுப் போரில் கிடைத்த வெற்றி அரசியல் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளித்ததில் ஆச்சரியமில்லை. அந்த வெற்றியின் விளைவாக சிங்கள மனநிலையில் ஒரு பாரிய மாற்றம் உண்டாயிற்று. ஒருபுறம், அந்த வெற்றி இடைக்காலத்திலிருந்தே சிங்களவர்களை ஆட்டிப்படைத்து வந்த அச்சுறுத்தலை கிட்டத்தட்ட உடனடியாக அழித்துவிட்டது.



தேசிய ஹெல உறுமய, பொது பல சேனா, சிங்க லே, மஹசோன் பலகாய, இராவண பலகாய, சிங்கள ராவய மற்றும் பல தற்காலிக அழுத்தக் குழுக்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மூலமான மேலாதிக்க இயக்கம் அரசியல் ரீதியாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. இந்த இயக்கத்தை ஆதரிக்கச் சில சக்திவாய்ந்த ஊடகக் குழுக்கள் உள்ளன. எவ்வாறாயினும், இந்த இயக்கத்திற்கான உண்மையான சக்தி தளம் பௌத்த சங்கத்திற்குள் உள்ளது. உண்மையில், இரண்டு தேரர்கள், பௌத்த பொதுபலசேனாவின் செயலாளரான கலகொட அத்தே ஞானசாரதேரர் மற்றும் ஜாதிக ஹெல உறுமய அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான அதுரலியே ரதன தேரர் ஆகியோர் பௌத்த மேலாதிக்கத்திற்காக பலமாகக் குரல் கொடுக்கும் பிரச்சாரகர்கள் ஆவர்.

ஜூன் 7 ஆம் திகதி கண்டியில் நடந்த ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஞானசாரர் ஒரு அதிரடியான அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பை ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ அல்லது எதிர்க்கட்சித் தலைவரோ மறுதலிக்கவில்லை. சிறீலங்கா சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் அவர்கள்தான் இந்தத் தீவின் ஒரே உரிமையாளர்கள் எனவும் கூறினார். அவர் கூறியதன் ஆபத்தான தாக்கங்களைப் பற்றிச் சிந்திக்காமல், ஞானசாரார் நாட்டின் பிற சிறுபான்மையினரை ஏறக்குறைய குடியுரிமையற்றவர்கள் எனச் சொன்னார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், இஸ்லாமிய அடிப்படை வாத சித்தாந்தத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அரசாங்க அதிகாரிகள் முஸ்லிம்களை பௌத்த குருமாரிடம் விட்டுவிடும்படி கேட்டார். அப்படி விட்டால் அடிப்படைவாத சித்தாந்தத்தில் இருந்து அவர்களது மனதைச் சுத்தப்படுத்தி இஸ்லாமிய பயங்கரவாதத்தில் இருந்து நாட்டைக் பாதுகாப்பார்கள். ஒரு [illegible] கம் தற்போது [illegible] என்ன செய்து கொண்டி ருக்கிறது என்பதை அவர் நினைத்துக் கொண்டி ருக்கிறார் போலும்.

இந்தத் தேரரின் மிக அண்மைய மற்றும் அப்பட்டமான அடாவடித்தனம் முல்லைத் தீவில் உள்ள ஒரு இந்து கோவிலின் வளாகத்தில் அவரது சக தேரர் ஒருவரின் சடலத்தைத் தகனம் செய்தது. தனது நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தபோதும் அவர் அதைச் செய்தார். இந்தத் தேரர் முன்னர் நீதிமன்ற அவமதிப்புக்காக சிறைக்கு அனுப்பப்பட்டவர். ஆனால் இந்த ஆண்டு வெசாக் கொண்டாட்டங்களுக்கு முன்னதாக ஜனாதிபதி சிறிசேனா அவருக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட்டவர் என்பதை அவர் (ஞான சேரர்) கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோல், ரத்ன தேரர் இரண்டு ஆளுநர்களையும் ஒரு அமைச்சரையும் நீக்கக் கோரி தலதா மாளிகைக்கு முன் மிகவும் நாடகமயப் படுத்தப்பட்ட உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அந்த மூவரும் முஸ்லிம்கள். அவர்கள் தங்களை வளப்படுத்தத் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது. அவர்கள் மட்டும்தான் தங்களை வளப்படுத்த தங்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தினார்களா? எப்படியிருந்தாலும் அவர் தனது நோக்கத்தில் வெற்றி பெற்றார். அவரது உண்ணாவிரதம் அனைத்து முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் எல்லோரையும் அமைச்சரவையில் இருந்து கூண்டோடு பதவி விலக வைத்தது.

இந்தத் தேரர் சிங்கள பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நோக்கில், கர்ப்பிணிச் சிங்கள தாய்மார்களுக்கு சட்டவிரோத அறுவை மருத்துவம் செய்தார் எனக் குற்றம்சாட்டி ஒரு முஸ்லிம் மருத்துவ நிபுணருக்கு எதிரான பிரச்சாரத்துக்கு முன்னிலை வகித்தார். அந்தக் குற்றச்சாட்டை எண்பிக்க எந்தச் சான்றும் இல்லை எனக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் விசாரித்து அறிக்கை அளித்தபோதும் குறித்த தேரர் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் திறனற்றது என விமர்சித்தார். அவர் இப்போது நாட்டில் உள்ள அனைத்து திருமண மற்றும் விவாகரத்து சட்டங்களையும் ஒரே மாதிரியாக மாற்றுவதற்கான 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் திருத்தப்பட்டு சட்டமியற்றப்பட்டு வரும் நேரத்தில் அவர் இந்தப் பிரச்சாரத்தைத் தொடக்கினார் என்பது அவரது முஸ்லிம் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்துகிறது.

பௌத்த மேலாதிக்கத்தின் மிகவும் கவலையான அம்சம் என்னவென்றால் பௌத்த தேரர்கள் சட்டரீதியான தண்டனை எதுவுமின்றி செயற்பட அனுமதிக்கப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, குறிப்பாக 2014 முதல் தொடர்ச்சியான முஸ்லிம் விரோத கலவரங்கள் இடம்பெற்றன. இதன்போது குறைந்தது ஒரு முஸ்லிம் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தார்கள் மற்றும் பல பள்ளிவாசல்கள், முஸ்லிம் வணிகங்கள் மற்றும் முஸ்லிம் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இந்தக் கலவரங்களில் பெரும்பாலானவற்றில் காவல்துறையினர் பார்வையாளர்களாகவே இருந்தனர். கலகக்காரர்களையும் அவர்களை வெறுமனே பார்க்கும் பொலிஸ்காரர்களையும் அடையாளம் காட்ட காணொளி ஆதாரங்கள் உள்ளன. ஆயினும் கூட, இன்று வரை குற்றவாளிகள் யாரும் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து [illegible]மையான மௌனமே காணப்பட்டது. இந்தத் தலைவர்களிடம் இருந்து ஒரு கண்டனச் சொல் கூட வெளிவரவில்லை. இந்த மதவெறியர்களைச் சவாலாக்கத் துணிந்த ஒரு அமைச்சர் பௌத்த மதகுருக்களின் ஒரு பிரிவினரால் ஒதுக்கி வைக்கப்பட்டார். பௌத்த மேலாதிக்கவாதிகள் சட்டரீதியான தண்டனைக்கு அப்பால் மட்டுமல்லாமல் அரசியல் வாதிகளின் ஆதரவிலும் செயல்படுகிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில்தான் நாடு ஜனாதிபதித் தேர்தலின் பிடியில் உள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர்களில் உண்மையான போட்டி இருவருக்கு இடையில்தான் உள்ளது, அந்த இருவர் ஐக்கிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த சஜித் பிரேமதாச மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணியைச் சேர்ந்த கோத்தாபய ராஜபக்ஷ ஆவர். இன்னொருவரான தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் அனுர குமார திசாநாயக்க மூன்றாவது இடத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

இரண்டு முன்னணி வேட்பாளர்களில் இருவருமே தங்கள் ஆதரவைப் பற்றியோ அல்லது மேலாதிக்கவாத நிகழ்ச்சி நிரல் பற்றியோ தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை. அவர்களது மௌனத்துக்குரிய காரணம் வெளிப்படையானது. பௌத்த வாக்கு வங்கியின் மீது மேலாதிக்கவாதிகளின் செல்வாக்கிற்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவமே அவர்களின் மௌனத்திற்கான காரணம் ஆகும்.

இந்த மேலாதிக்கவாதிகள் இந்த நேரத்தில் மௌனமாக இருந்தாலும் அநேகமாகத் தங்களது 'ஹிட்லர் போன்ற' வேட்பாளர் கோத்தாவை வெற்றிபெற உதவும் ஒரு தந்திரோபாய சூழ்ச்சியாக (அஸ்கிரியா மதபீடத்தின் அனுநாயக்காவைச் சேர்ந்த வேதாருவே உபாலி தேரர், கோத்தா ஒரு ஹிட்லராக மாறி ஓர் இராணுவ ஆட்சியை நடத்துங்கள் எனக் கூறியிருந்தார்) இருக்கலாம். தேர்தல் முடிந்ததும் அவர்கள் தங்கள் பிரச்சாரத்தை மீண்டும் தொடங்குவது உறுதி. பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தைத் தருவதாக சஜித் உறுதியளித்துள்ளார்.

மேலும் 1000 சைத்தியங்களைக் கட்டுவதாக உறுதியளித்துள்ளார். மாகாண சபைகளுக்கு அதிகபட்ச அதிகாரப் பகிர்வு பற்றிய அவரது பகட்டுப் பேச்சு அனைத்தையும் மீறி, அவர் மேலாதிக்க அழுத்தத்தில் சிக்கிக் கொண்டுள்ளார் என்பதைக் காட்டுகிறது. தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கா மட்டுமே இதுவரை எந்தவொரு மத உறுதிப்பாட்டிலிருந்தும் தன்னைத் தூர விலக்கிக் கொண்டுள்ளார். அவர் முற்றிலும் மாறுபட்ட மேடைப் பிரச்சாரம் செய்து வருகிறார். இந்தப் போட்டியில் சிறுபான்மையினருக்கு என்ன விருப்பத் தேர்வுகள் உள்ளன?

முஸ்லிம் சமூகம் தமிழர்களை விட மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளது. ஏனெனில், அமைச்சரவை அந்தஸ்தையும் பதவிகளையும் தவிர்த்த தமிழ் தலைமையைப் போலல்லாமல், உயர்ந்த காரணத்திற்காக போராடும் ஆர்வத்தில் (அந்த காரணம் முறையானதா இல்லையா என்பது வேறு விஷயம்), இன்றைய முஸ்லிம் தலைமையின் தலைமுறை என்பது இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களது உரிமைகளுக்குப் போராடுகிறோம் என்ற போர்வையில் சுய செல்வாக்கை வளர்ப்பதில் அக்கறை கொண்டது. முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடுவது மற்றும் வெல்வது பற்றி மீண்டும் மீண்டும் கூச்சலிடுகிறார்கள். ஆனால் அந்த உரிமைகள் என்ன, அவர்கள் எவ்வாறு போராடப் போகிறார்கள் என்பதை ஒருபோதும் சொன்னது கிடையாது. ஒரு ஜனநாயகத்தில் முஸ்லிம்களுக்கு மட்டுமே சொந்தமான சிறப்பு உரிமைகள் உள்ளதா? முஸ்லிம்களுக்கு எதிரான அநீதியை அகற்றப் போராடுவதும், மற்றவர்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளைக் கோருவதும் முறையானது. அப்படியான போராட்டத்தில் நாட்டில் உள்ள ஒவ்வொரு ஜனநாயக மற்றும் நியாயமான எண்ணமுள்ள நபரும் சேருவர். அந்த நபர் முஸ்லிம், தமிழ் அல்லது சிங்களவர் எவராகவும் இருக்கலாம். இதைவிட முஸ்லிம்களுக்குச் சில தனித்துவமான உரிமைகள் இருந்தால், அந்த உரிமைகளின் நியாயத்தன்மை குறித்து மற்றவர்கள் முடிவெடுப்பதற்கு அவர்களின் தலைவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன என்பது உண்மை. ஆனால் அவற்றில் பல சுயமாக உருவாக்கப்பட்டவை. நேர்மையற்ற தலைமை காரணமாக அவற்றைத் தீர்க்கக் கடினமாக உள்ளது.

வழக்கம் போல, வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் தலைவர்கள் வெற்றியாளர் யாரென்பதில் சூதாடிக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட வெகுமதிகளையும் சுயகௌரவத்தையும் அனுபவிப்பதில் கண்ணாய் இருக்கிறார்கள். அவர்களின் தவறான மனிதர் இந்தப் போட்டியில் வென்றாலும், அவர்கள் தங்களைக் காப்பாற்ற யாருடைய காலடியில் எப்படி விழுவது என்பது அவர்களுக்குத் தெரியும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மூலம் ஜனநாயகத்தை உறுதிசெய்வோம்

**கடந்த காலத்தைக் கருத்திற் கொள்ளாமலும் எதிர்காலத்தைப் பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லாமலும் கோத்தாவுக்கு ஜால்ரா போடும் சிறுபான்மை ஆதரவாளர்களுக்கு வேண்டுமானால் சிறு சிறு பதவிகள் கிடைக்கலாம். அதுவே அவர்களது அதிகபட்ச எதிர்ப்பு. அதாஉல்லாஹ், ஹிஸ்புல்லாஹ், ஸுபைர், பஷீர் சேகுதாவூத் போன்றோர் வெல்லலாம். ஆனால், முஸ்லிம் சமூகம் தோற்றுப் போகும்.**

• ஃபயூமி அஹ்மத்

ஜனநாயகம் என்பது வந்து விட்ட ஒன்றல்ல. என்றைக்கும் வரக்கூடிய ஒன்றாகவே அது உள்ளது. அது அளிக்கப்பட்ட ஒரு வாக்குறுதி மட்டுமே. எதிர்காலம் சார்ந்த ஒன்றே அது.
**(ழாக் தெரிதா)**

மனித நாகரிக வளர்ச்சியின் படிக்கட்டுகள் அல்லது ஏணிப்படிகள் என சில முற்போக்குக் கூறுகள் உள்ளன. ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், மனித உரிமைக் காப்பீடு என்பவை அவற்றில் முதன்மையானவை. காட்டுமிராண்டி யுகம் கடந்து பண்பட்ட, நாகரிக முதிர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் கொண்ட இன்றைய யுகத்தில் ரூஸோவின் சமூக ஒப்பந்தக் கோட்பாடு முழுமையாகத் தோற்றுப் போகவில்லை.

ஒரு நாட்டின் குடிமக்களுக்கு ஆட்சியாளர்கள் வழங்கும் சலுகைகள் மலிவு விலைப் பொருட்கள் என்பவற்றைக் காட்டிலும் மக்கள் தமது கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமையும் கலாசாரச் சுதந்திரமும் முக்கியமானவை. சர்வதிகாரம், அரசியல் அடக்குமுறை, தான்தோன்றித்தனம், எதேச்சதிகாரம் என்பவற்றை மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லை. அத்தகைய தன்மை வாய்ந்த அதிகார வர்க்கத்தை மக்கள் தூக்கி எறிந்ததே நவீன வரலாறு.

இலங்கை ஒரு ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள இந்தத் தருணம் குடிமக்களின் கவனம் குவிய வேண்டிய முதல் விடயம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே. ஜனநாயகம் இல்லாத சமூக, பொருளாதார அபிவிருத்தியில், கலாசார சுதந்திரம் மறுக்கப்படும் ஒரு ஆட்சி இயந்திரத்தில் எந்தப் பயனும் இல்லை.

இலங்கையில் நவம்பர் 16 இல் ஜனாதிபதி வேட்பாளர்களாக களம் இறங்கியுள்ளவர்களில் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் அபேட்சகர் யார் என்பதை மக்கள் கவனமாகப் பார்க்க வேண்டியுள்ளது. பிரதான இரு வேட்பாளர்களின் கடந்த கால அரசியல் செயற்பாடுகளே இதற்கான அளவுகோலாகும். ஒரு ஜனநாயக ஆட்சியில் நீதித்துறை, நிருவாகத்துறை, சட்டவாக்கல் துறை மூன்றும் சுயாதீனமாக இருக்க /இயங்க அதிகாரத்தில் இருப்போர் இடமளிக்க வேண்டும். துரதிஷ்டமாக கடந்த கால இலங்கையில் அரசியல் கலாசாரம் எதேச்சதிகாரத்தினையே பிரதிபலித்து வந்துள்ளது.

1978 இல் முன்னாள் ஜனாதிபதி திரு ஜூனியர் ரிச்சட் ஜயவர்த்தன, If it is war, war; if it is peace, peace (யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்) எனப் பாராளுமன்றிலே முழங்கினார். அது தமிழர்களுக்கெதிரான இனவாத முழக்கம். தனது அமைச்சர்களிடம் வெற்றுத் தாளில் ஒப்பம் இட்டு வாங்கி வைத்த அவர், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் இயலுமை மட்டுமே தனக்கு இல்லை எனவும் ஏனைய எதையும் தன்னால் செய்ய முடியும் எனவும் வாதாடியவர். தெற்காசியாவிலேயே தன்னைப் பெரும் அறிவாளியாகக் கருதிய ஜேஆருக்கு அவர் கொண்டு வந்த நிறைவேற்று அதிகார முறைமையே இந்த சர்வதிகாரத்தை வழங்கியது. ஜேஆர் இலங்கை அரசியலில் ஏற்படுத்திய பெரும் சாபக்கேடே நிறைவேற்று அதிகார முறையாகும்.

ஜேஆருக்குப் பின்னர் வந்த ரணசிங்க பிரேமதாஸ நிறைவேற்று அதிகாரத்தின் தெவிட்டாத சுவையை ஆழமாக அனுபவித்தவர். அவரது 'பட்டலந்த வதை முகாம்' ஜனநாயகத்தின் முகத்தில் கரியைப் பூசியது. பின்னாளில் ''நான் சொல்வதே சட்டம், ஏனெனில் நானே ஜனாதிபதி'' என்று கர்ச்சித்தவர் சந்திரிகா.

இவர்கள் எல்லோரை விடவும் நிறைவேற்று அதிகாரத்தின் காய்களையும் கனிகளையும் தெவிட்டாமல் சுவைத்த முடியரசர் மஹிந்த ராஜபக்ஷ. அவர் ஜனநாயகத்தை (குடியரசு முறைமை) மெல்ல மெல்ல குழிதோண்டிப் புதைத்து முடியரசை (மன்னராட்சி) நிறுவியவர். மஹிந்தவின் 10 ஆண்டு கால இருண்ட யுகத்தை உன்னிப்பாக நோக்கினால் மஹிந்த ஒரு மன்னராட்சியையே நடத்தினார் என்பது புலனாகும்.

மஹிந்த இலங்கை அரசியலில் ஒரு Brand ஆக பதிக்கப்படும் அளவுக்கு அவரது தற்துணிவும் அரசியல் வெல்திறனும் தென்னிலங்கைச் சிங்களவர்களால் போற்றப்படுகின்றது. போரை முடித்தவர் என்பதும் வீதிகளை அபிவிருத்தி செய்தவர் எனவும் அவர் ஒரு தானைத் தளபதியாகப் பார்க்கப்படுகின்றார். ஆனால், இரண்டின் மூலமும் மஹிந்த ஆடிய அரசியல் அதிகார விளையாட்டும் எதேச்சதிகாரமும் மக்களின் கண்களில் படாமலேயே போய்விட்டன.



அதிவேகப் பாதை மஹிந்த யுகத்தின் மகத்தான அரசியல் சாதனை எனப் பீற்றிக் கொள்வோர், அதன் பின்னால் நிறைந்துள்ள ஊழல் மோசடிகள் குறித்து எந்தக் கவலையும் கொள்ளாதவர்கள். உலகில் மிகத் தரமான அதிவேகப் பாதை இத்தாலியில் உள்ளது என்பார்கள். அங்கு 1 கி.மீ. வீதிக்குச் செலவான தொகை இலங்கை ரூபாவில் 500 மில்லியன் ஆகும். ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் அதிவேகப் பாதை ஒரு கீ.மீட்டருக்கு செலவான தொகை 800 மில்லியன் ஆகும். இன்று அதிவேகப் பாதையின் சில இடங்களில் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. எனில், நமது அதிவேகப் பாதையின் தரத்தையும், அதற்கு செலவளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தொகையையும் நாம் கணிப்பிட்டுப் பார்க்கலாம். சீனா வழங்கிய கடனில் கணிசமான தொகை அரசியல்வாதிகளால் சுருட்டப்பட்டது. பெரும் ஊழல் பெருச்சாளிகள் நிறைந்த ஒரு யுகமாகவே அது நமக்குத் தோன்றுகிறது.

கடந்த கால ஊழல் மோசடிகளைப் பற்றிப் புலம்புவது இந்தக் கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. மாற்றமாக சென்ற ஆட்சியில் நடந்த ஜனநாயக விரோத, எதேச்சதிகார அரசியல் செயற்பாடுகளை ஒரு முறை மீட்டிப் பார்ப்பதே இந்தப் பத்தியின் நோக்கம்.

மஹிந்த யுகத்தில் நீதி, நிருவாகம், நிதி, பாதுகாப்பு அத்தனையும் மஹிந்தவின் கெடுபிடியிலேயே இருந்தது. அவரது விரல் நுனியின் அசைவில் அத்தனையும் நடந்தேறியது. தாம் எதிர்பார்க்கும் தீர்ப்பே நீதிமன்றங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் நீதிபதிகளையே விரட்டியடிப்போம் என்பதைப் போலவே மஹிந்தவின் ஆணவமும் திமிரும் செயற்பட்டது.

'கமநெகும' எனப்படும் ஒரு கொள்ளைத் திட்டத்திற்கு பஸில் ராஜபக்ஷவுக்குச் சார்பாக அதாவது அந்தத் திட்டத்திற்குச் சார்பாக தீர்ப்பளிக்கவில்லை என்பதற்காக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவிலிருந்து தூக்கி எறியப்பட்டார். அவர் மீது போலியான நிதி மோசடிக் குற்றச்சாட்டுகள் பல புனையப்பட்டன. நீதிபதிகள் அனைவரும் போல மஹிந்தவின் ஆணவ ஆட்டத் திற்கு அடங்கிப் போனார்கள். இதுவா ஜனநாயகம்? நீதித் துறை சுயாதீனம் என்பது ஜனநாயகத்தின் உயிர் மூச்சு.

மக்கள் இறுதியாக நம்பிக்கை வைக்கும் இரண்டு அரச நிறுவனங்களே உள்ளன. பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள். இரண்டும் ஒற்றை மனிதன் மஹிந்தவினதும் அவரது ராஜபக்ஷ குடும்ப பரிவாரத்தினதும் கட்டளைகளுக்கேற்ப ஆடியது. இதற்குப் பல உதாரணங்களைக் குவிக்கலாம்.

ஒரு நாட்டில் நீதித் துறை சுயாதீனம் இழக்கப் படுவது ஜனநாயகத்தின் மீது விழும் முதலாவது பேரிடியாகும்.

சிவில் ஜனநாயக ஆட்சி மரபின் மிக முன்னேற்றகரமான கூறு; மக்களுக்குள்ள அரசாங்கத்தின் மீதான விமர்சனமாகும். துரதிஷ்டமாக மாற்று அபிப்பிராயம் கொண்ட ஊடகவியலாளர்களும் அரசாங்கத்தின் எதேச்சதிகாரத்தை விமர்சித்தவர்களும் அச்சுறுத்தலையும் மரண பயத்தையும் எதிர்கொண்டனர்.

போர்க் கள செய்திகளை பட்டவர்த்தனமாகவும் நிதர்சனமாகவும் எழுதிய இக்பால் அத்தாஸ் போர் முடிந்த கையோடு நாட்டை விட்டுத் தப்பியோடினார். அவர் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் போர்க் கள இராணுவத் துறைப் பகுப்பாய்வாளர். இதே பணியை ராவய சிங்களப் பத்திரிகையில் செய்து வந்த மஞ்சுல கொடிகார இன்னும் நாட்டுக்குத் திரும்பவில்லை. வெளி நாடொன்றில் அடைக்கலம் பெற்று வாழ்கிறார்.

துணிச்சலோடும் நெஞ்சுரத்தோடும் மஹிந்தவினதும் இன்றைய வேட்பாளர் கோத்தாவினதும் அரசியல் இராணுவத் தவறுகளை காரசாரமாக கேள்விக்குள்ளாக்கிய பலர் அநியாயகமாகக் கொன்று தீர்க்கப்பட்டனர். அவர்களில் சண்டே லீடர் ஆசிரியரும் Good Morning Sri Lanka நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான புகழ்பெற்ற ஊடகவியலாளர் லசந்த, நடு வீதியில் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார் எக்னலிகொட எனப்படும் மற்றொரு ஊடகவியலாளர் காணாமல் ஆக்கப்பட்டார். நிமலன், தராக்கி சிவராம் போன்ற தமிழ் ஊடகவியலாளர்களையும் கோத்தாவின் கொலைவெறி உயிருடன் விட்டுவைக்கவில்லை.

இத்தகைய ஊடகவியலாளர் படுகொலை என்பது சாதாரணமானதல்ல. அது ஜனநாயகத்தின் மீதான படுகொலை, கருத்துச் சுதந்திரம் மற்றும் நம்பிக்கைச் சுதந்திரத்தின் மீதான படுகொலை. இராணுவ சர்வதிகாரம் ஒன்றை வாழ வைக்க மேற்கொள்ளப்பட்ட படுகொலை. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி எவரும் ஜனநாயகத் தன்மையுள்ளவராக இருந்ததில்லை. சமீபத்திய உலக வரலாறு இதற்குச் சிறந்த சான்று. லிபியாவின் கேர்ணல் கடாபி, எகிப்தின் ஸீஸி, அல்ஜீரியாவின் முன்னாள் ஆட்சியாளர் அப்துல் அஸீஸ் பூதப்லிகா, பாகிஸ்தானின் முஷர்ரப் என இதற்கு ஒரு நீண்ட பட்டடியலே உள்ளது.

இத்தகையவர்கள் துப்பாக்கியிலும் ரவைகளிலும் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள். ஜனநாயகம் அவர்களுக்குச் சூனியம். பாராளுமன்ற அரசியலிலோ ஜனநாயகத்திலோ அரசியல் பன்மைத்துவத்திலோ நம்பிக்கையற்றவர்கள். அதிகாரத் திமிரும் தம்மிடமுள்ள பலமுமே எல்லாவற்றையும் தீர்மானிக்க வேண்டும் என எண்ணுபவர்கள். விமர்சிப்பவர்களை எதிரிகளாய்ப் பார்ப்பவர்கள். அவர்களை அழித்தொழிக்க நினைப்பவர்கள்.

இதுதான் கோத்தா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில் நடந்தது. வஸீம் தாஜுதீன் உள்ளிட்டு பலர் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல கொழும்பிலும் இது நடந்தது. இத்தகைய ராணுவ மனோநிலையில் செயற்படுபவர்கள் ஒருபோதும் ஒரு துளியும் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்த வரலாறில்லை.



வெறும் 44% ஆன வாக்குளையே பெறுவார் என எதிர்பார்க்கப்படும் கோத்தா தப்பித் தவறி வென்றால் என்ன நேரிடும்? என்பதுதான் இப்போது சிறுபான்மை மக்களைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி. அவர் வென்றால் நிச்சயம் ஜனநாயகம் தோற்றுவிடும். கோத்தா வென்றால் மக்கள் தோற்றுவிடுவார்கள். பொருளாதாரம் சிம்பாவே போன்று சீர்குலையும். இனவாதிகள் குதித்தெழுவார்கள்.

ரத்ன தேரர், உதய கம்மன்பில, வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன, ஞானசாரர் போன்றோர் இனவாதத்தை உத்தியோகபூர்வமாக சந்தைப்படுத்துவர். மீளவும் எச்ச சொச்சமாகவுள்ள பொருளாதார வளங்களையும் அதிகபட்சம் சுரண்டுவார்கள். சிவில் ஜனநாயகம் கேலிக்கூத்தாகும். மஹிந்த குடும்பத்திலிருந்து அதிகாரத்தை மீளப் பெற இன்னும் 50 ஆண்டுகள் செல்லும். கடத்தல், கப்பம் பெறல் மற்றும் கலவரங்களுக்கு பஞ்சம் இருக்காது.

கடந்த காலத்தை கருத்திற் கொள்ளாமலும் எதிர்காலத்தைப் பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லாமலும் கோத்தாவுக்கு ஜால்ரா போடும் சிறுபான்மை ஆதரவாளர்களுக்கு வேண்டுமானால் சிறு சிறு பதவிகள் கிடைக்கலாம். அதுவே அவர்களது அதிகபட்ச எதிர்ப்பு. அதாஉல்லாஹ், ஹிஸ்புல்லாஹ், ஸுபைர், பஷீர் சேகுதாவூத் போன்றோர் வெல்லலாம். ஆனால், முஸ்லிம் சமூகம் தோற்றுப் போகும்.

கோத்தா தப்பித் தவறி வெற்றி பெற்றால் இலங்கை இராணுவ மயமாகும். விரிவுரையாளரர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கோத்தா செயலாளராக இருந்தபோதே இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டனர். சில அதிபர்கள் அதன்போது உயிர் துறந்ததும் எமக்கு மறக்கவில்லை. இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை என்ற பிரசாரத்தின் மூலம் நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் இராணுவப் பயிற்சி பெற வேண்டிய நிலை ஏற்படலாம். இஸ்ரேலைப் போன்று ஒவ்வொரு பிரஜையும் இராணுவத்தில் பணியாற்றும் நிலையும் தோன்றலாம்.

வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், அதிபர்கள், பல்கலை மாணவர்கள், தொழில்வான்மையாளர்கள் என எவரும் இதிலிருந்து தப்பிக்க முடியாமல் போகும். போர் இல்லாத காலத்திலேயே இராணுவச் செலவை இரு மடங்கு அதிகரித்த மஹிந்த அரசாங்கம் பாதீட்டின் முக்கால் பங்கை இராணுவச் செலவீனங்களுக்காகவே ஒதுக்கவும் விளையும். இதனால் கல்வியும் மக்கள் நலப் பணிகளும் பூச்சியத்திற்கு வரலாம். இப்படி எல்லாமே இராணுவம் எங்குமே இராணுவ மயம். எதிலும் இராணுவம் எங்கும் இராணுவம் என்ற நிலையே உருவாகும்.

மீளவும் இந்தப் பாதுகாப்பு மாயையை உருவாக்கவும் தேர்தலில் வெற்றி பெறவுமே ஸஹ்ரான் களத்தில் இறக்கப்பட்டானா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது. அப்போது இவை எல்லாவற்றினதும் இறுதி விளைவு, ஜனநாயகம் இல்லாத ஒரு கப்போடியாகவோ, எகிப்தாகவோ இலங்கை மாறலாம். இராணுவச் சர்வதிகாரமே நமக்கு மிஞ்சும். அல்லது அறபு நாடுகளிலுள்ள மன்னராட்சி போல ஒரு எதேச்சதிகார குடும்ப முடியரசு இங்கு நிலைபெறும் ஜனநாயகக் காற்றை சுவாசிக்கும் சந்தர்ப்பம் இல்லாது போகும். அப்போது கோத்தாவுக்கு வாக்களித்தவர்கள் புரிவார்கள் இவருக்கு வாக்களித்தது இமாலயத் தவறு என்று.

சஜித் போன்ற ஒருவரே மிகப் பொருத்தமானதும் மிகச் சிறந்ததுமான ஒரு தெரிவு என்ற எடுகோளிலிருந்து இதனை நான் கூறவில்லை. மாறாக, ஒப்பீட்டு ரீதியிலும் கடந்த கால ராஜபக்ஷ யுகத்தின் அரசியல் அடாவடித்தனங்களிலிருந்தும் உய்த்துணரப்பட்ட ஓர் உண்மையாகவே இதனை நான் முன்வைக்கிறேன். இந்த எதிர்வுகூறல் பிழைத்துப் போகலாம் என்று எண்ணுபவர்கள் இதனை எழுதி வையுங்கள். வரலாறு எப்போதோ ஒருநாள் நமக்கு இந்தக் கசப்பான உண்மையை உணர்த்தும் என்பதில் என்ன சந்தேகம் நமக்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இராணுவ மனப்பாங்குடையவர் ஜனாதிபதியாவதற்குப் பொருத்தமில்லை

• விக்டர் ஐவன்

2010 ஜனாதிபதித் தேர்தல் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் அந்த யுத்தத்தின் முன்னணி வீரர்களாகக் கருதப்படக் கூடிய இருவருக்கிடையில் நடைபெற்றது. யுத்தத்துக்கு இராணுவத் தலைமை வழங்கிய ஜெனரல் சரத் பொன்சேக்காவை யுத்தத்துக்கு அரசியல் தலைமை வகித்த மஹிந்த ராஜபக்ஷ தோற்கடித்தார். ஆனாலும் 2015 ஜனாதிபதித் தேர்தலில் தன்னுடன் இணைத்துப் பார்க்க முடியாத பொலன்னறுவையின் சாமான்ய மனிதரினால் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார்.

உள்நாட்டு யுத்தம் மூன்று முன்னணி வீரர்களை உருவாக்கியிருந்தது. அவர்கள் முறையே மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா, கோதாபய ராஜபக்ஷ ஆகியோராவர். ஜெனரல் பொன்சேகா மஹிந்த ராஜபக்ஷவினால் தோற்கடிக்கப்பட, மஹிந்த ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேனவினால் தோற்கடிக்கப்பட்டார். தற்போதைய தேர்தலில் மூன்றாவது வீரர் உரசிப் பார்க்கப்படவிருக்கிறார்.

ஜெனரல் பொன்சேக்கா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பிரதான பாத்திரம் ஏற்ற ஒருவர். இவர் தொடர்பில் எனக்குள் அதிகளவு மரியாதை இருந்த போதிலும், யுத்த களத்தில் இருந்து சூடு ஆறுவதற்கு முன்னரே அரசியல் களத்தில் குதித்து ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுவதை நான் சிறந்த தீர்மானமாகக் கருதவில்லை. இராணுவ மனப்பாங்கு யுத்த களத்துக்குத் தேவை என்றாலும் அரசை ஆள்வதற்குத் தேவையானது இராணுவ மனப்பாங்கன்றி சிவில் மனப்பாங்கே.



ஜெனரல் பொன்சேக்கா போன்ற ஒருவர் தலைவராக வருவதாக இருந்தால் சில காலம் சிவில் செயற்பாடுகளில் ஈடுபட்ட பின்னரே வந்திருக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். இந்தக் கருத்தை நான் பொதுவெளியில் தெரிவித்திருக்கிறேன். எனது கணிப்பின்படி நாட்டில் நிலவிய ஜனரஞ்சகக் கருத்தின் அடிப்படையில் இந்த இருவருக்கிடையிலான போட்டியில் மஹிந்த ராஜபக்ஷ இலகுவான வெற்றியைப் பெறுவார் என்பதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி 2010 தேர்தலில் போட்டியிடாமல் யுத்தத்தை வெற்றி கொண்ட நாயகனுக்கு போட்டியின்றி வெல்லுவதற்கு இடம்கொடுத்திருந்தால் அது நாட்டுக்கு நலன் பயப்பதாக அமைந்திருக்கும் என்பதோடு அந்தக் கட்சியின் நலனுக்கும் சிறந்ததாக இருந்திருக்கும். யுத்த வெற்றியின் ஊடாக அவர் பெற்றிருந்த ஜனரஞ்சகத்தின் அளவுக்கு அவரைத் தோற்கடிக்க முடியுமான் இயலுமை ஐ.தே.க.வுக்கு இருக்கவில்லை. அதனை உணர்ந்து கொண்டு மஹிந்த அடைந்த யுத்த வெற்றிக்கு உபகாரமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் இலகுவான வெற்றியொன்றை வழங்கி அதற்குப் பகரமாக அரசியல் சீர்திருத்தமொன்றை மஹிந்தவிடம் வேண்டியிருந்தால் சரிந்து செல்லும் ஐ.தே.க.வின் வாக்குகளைப் பலப்படுத்த முடியுமாக இருந்திருக்கலாம். அதே போல பலமானதொரு அணி யொன்றை பாராளுமன்றத்தில் அமைத்துக் கொள்வதற்கும் அது அவர்களுக்கு உதவியாக அமைந்திருக்கலாம்.

அப்படி நடந்திருந்தால் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான உறவு எதிரி மனப்பான்மையுடன் அமையாமல் எதிர்த் தரப்பு வேண்டி நிற்கும் அரசியல் மாற்றத்துக்கு இணங்க வேண்டிய நிலைக்கு மஹிந்தவை அது தள்ளி இருக்க முடியும். இதன் விளைவாக அழிவை விட மென்மையானதொரு ஆட்சியை நாங்கள் பெற்றிருக்க முடியும். ஐ.தே.க.வின் வாக்குளையும் அவர்களால் பாதுகாத்திருக்க முடியும். 2010 தேர்தலின் பின்னர் ஐ.தே.க.வின் தலைவருடனான சுமுகமான கலந்துரையாடல் ஒன்றின் போது நான் இந்தக் கருத்தை அவரிடம் சொன்னேன். திஸ்ஸ அத்தநாயக்கவும் உடனிருந்தார். என்னுடைய கருத்துக்களை நன்றாகக் கேட்டுவிட்டு, நாங்கள் அதைப் பற்றி அவ்வளவு தூரம் சிந்திக்கவில்லை என ரணில் விக்கிரமசிங்க சொன்னார்.

மஹிந்த ராஜபக்ஷ 2010 தேர்தலில் வெற்றியீட்டிய இரவிலேயே ஜெனரல் பொன்சேக்கா தங்கியிருந்த ஹோட்டல் முற்றுகைக்கு ஆளானது. இது தொடர்பில் நான் ஜனாதிபதி மஹிந்தவைத் தொடர்பு கொண்ட பொழுது இது அவரையும் மீறி அவருக்குத் தெரியாமல் நடந்திருப்பது விளங்கியது. அன்றைய தினம் அவர் கைது செய்யப்படாவிட்டாலும் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டார். இந்தத் தேர்தலில் ஜெனரல் பொன்சேக்கா வெற்றி பெற்றிருந்தாலும் அவர் ஜனாதிபதி மஹிந்த தொடர்பிலும் இவ்வாறு தான் நடந்து கொண்டிருப்பார் என்றே எனக்குத் தோன்றியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 2005 முதல் வெற்றி முதல் அவர் தோல்வியடைந்த 2015 வரையான 10 வருட காலங்களில் ஜனாதிபதிக்கு மட்டுமே இரண்டாம் பட்சமான அதிகாரத்தை கோதாபய ராஜபக்ஷ கொண்டிருந்தார். கோதாவின் யுத்தம் எனும் தலைப்பில் சீ.ஏ.சந்திரசேன எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களின்படி, கோதாபய இலங்கை இராணுவத்தில் பயிலுனராகவே 1971 இல் இணைந்துள்ளார். பயிற்சி முடிந்து 1972 மேயில் இரண்டாம் நிலை லெப்டினன்ட் ஆனார். வடமராட்சி ஒபரேஷனின் போது இரண்டு படை அணிகளின் கட்டளை அதிகாரிகளாக பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கேர்ணல் விஜயவிமலரத்ன ஆகியோர் பணியாற்றிய வேளையில் கேர்ணல் விஜயவிமலரத்னவின் படை அணியில் கட்டளைத் தளபதியாக கோதாபய கடமையாற்றினார்.

பின்னர் ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது மாத்தளை மாவட்டத்தின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அதிகாரியாக இவர் கடமையாற்றியுள்ளார். புலிகளுடனான யுத்தத்தில் இலங்கை இராணுவம் கடுமையான தோல்விக்கு முகம் கொடுக்கும் வேளையில் இவர் லெப்டினன்ட் கேர்ணலாக சேவையில் இருந்து ஓய்வு பெற்று அமெரிக்கா பயணமானார். அமெரிக்கா கலிபோனியா மாநிலத்தில் மவுன்ட் ரோயல் சட்டக் கல்லூரியில் கணினி முகாமையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் 2005 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற தனது சகோதரனின் உதவிக்காக மூன்று மாத கால விடுமுறையில் நாடு திரும்பினார். சகோதரன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட உடனேயே இவர் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அப்பொழுது இராணுவம் பலவீனமான நிலையில் இருந்தது. யுத்த களத்தில் பெற்ற தோல்விகள் அவர்களை மானசீகமாகப் பாதித்திருந்தது. ஆளணியும் இராணுவத் தளபாடங்களும் போதுமான அளவில் இராணுவத்திடம் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் இருந்து இராணுவத்தை மீட்டெடுத்து வெற்றிகரமான யுத்தமொன்றை முன்னெடுத்துச் சென்ற பெருமை கோதாவையே சாரும். இது போன்ற அழகிய பக்கமொன்று கோதாவுக்கு இருந்தாலும் அழுகிய பக்கமொன்றும் மறுபுறத்தில் இருந்தது.

பாதுகாப்பு தொடர்பில் அவருக்கு அதிகமான அதிகாரம் இருந்த [illegible]

நாட்டில் பயங்கரமானதும் கொடுமையானதுமான பல சம்பவங்கள் நடந்தேறின. யுத்த காலத்தில் யுத்த களத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவங்களை நான் இங்கு கூறவரவில்லை. ஆனாலும் யுத்தத்துடன் எந்தச் சம்பந்தமும் இல்லாத அப்பாவி மக்களைக் கொலை செய்தல், கடத்திச் சென்று காணாமலாக்கப்படுதல், தெரிவு செய்யப்பட்ட சிலரை கடுமையாகத் தாக்குதல் போன்ற சம்பவங்கள் பெருமளவில் நடந்த காலமாக இந்தக் காலப்பிரிவு அமைந்தது.



### கோதாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

1) கொழும்பு அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரபல ஊடகவியலாளர் தராகி எனப்படும் தர்மலிங்கம் சிவராம் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை (2005 ஏப்ரல் 08)

2) திருகோணமலை கடற்கரையில் உரையாடிக் கொண்டிருந்த 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்டமை (2006. ஜனவரி 02)

3) தமிழ்க் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான தியாகராஜா ரவிராஜ் கொழும்பு அதி உயர் பாதுகாப்பு வலயத் தில் சுட்டுக் கொல்லப்பட்டமை (2006 நவம்பர் 10)

4) நேஷன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கீத் நொயார் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானமை (2008 மே 22)

5) சிரச தொலைக்காட்சி நிறுவனம் தாக்கப்பட்டமை (2009 ஜனவரி 07)

6) ஸன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டமை (2009 ஜனவரி 08)

7) ஊடகவியலாளர் போத்தல ஜயந்த கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை (2010 ஜனவரி 24)

8) பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை (2010 ஜனவரி 24)

9) முற்போக்கு முன்னணியின் மாணவர் செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ், குகன் முருகநாதன் காணாமலாக்கப்பட்டமை

10) செல்லப் பிராணியான நாய்க் குட்டியை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக தனியான விமானத்தை அமர்த்தியமை தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடம் தொலைபேசியில் விசாரித்த ஊடகவியலாளர் பிரெட்ரிகா ஜான்ஸை மோசமான வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தியமை.

பிரெட்ரிகா விவகாரம் தொடர்பில் நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசியதன் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட சில பத்திரிகை ஆசிரியர்களுக்கென வழங்கப்பட்ட இராப் போசனமொன்றுக்கு அழைக்கப்பட்டதன் பேரில் நானும் அதில் கலந்து கொள்ள நேரிட்டது. அந்த நிகழ்வின் போது நான் சொல்ல வேண்டியது ஏதும் இருந்தால் சொல்லும்படி ஜனாதிபதி என்னிடம் வேண்டிக் கொண்டார். உங்களது தம்பி பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு மோசமான வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தும் அளவுக்கு அவருக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது என நான் ஜனாதிபதியிடம் கேட்டேன். முகம் கறுத்துப் போய் மௌனமாக அமர்ந்திருந்த கோதா சபையில் இருந்து வெளியேறிவிட்டு சில நேரங்களின் பின்னர் மீண்டும் வந்தார். அவர் வெளியேறிய வேளையில் இந்த விவகாரத்தில் கோதா தவறிழைத்து விட்டார் என டெய்லி மிரர் பத்திரிகை ஆசிரியரிடம் ஜனாதிபதி சொன்னதை நான் கேட்டேன்.

2014 ஜூனில் அளுத்கம முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோது கோதாவின் நிழல் எனும் தலைப்பில் நான் இதுபற்றி எழுதினேன். இந்தத் [illegible] சம்பவங்களுக்குப் பின்னால் கோதாவின் தொடர்பு [illegible]

வல்களின் அடிப்படையிலேயே நான் இதனை எழுதினேன். கோதாவின் வெறுப்பைச் சம்பாதிக்கின்ற இந்த இரு நிகழ்வுகளிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எனக்கு எந்த அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

கோதாவின் காலப்பிரிவில் நடந்த எல்லாச் சம்பவங்களுக்கும் அவர் பொறுப்புக் கூற வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனாலும் அரசியல் பக்கமொன்று இருப்பதாகத் தெரியும் மேலேயுள்ள பட்டியலில் உள்ள குற்றங்களுக்கு நேரடியாகவோ அன்றியோ அவர் பொறுப்புக் கூற வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவை பாதுகாப்பு அதிகாரிகளின் சுய தேவைக்காகச் செய்யப்பட்டவை என நான் கருதவில்லை. இவ்வாறான பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள ஒருவர் அவர் தனது குற்றச்சாட்டுக்களில் இருந்து பூரணமாக விடுவிக்கப்படும் வரை பெயரளவிலேனும் நாட்டின் தலைவராக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமானவரல்ல. இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் நிறைந்த ஒருவர் இந்தப் பதவிக்கு போட்டியிடுவதே பொருத்தமானதல்ல.

இந்த நிலையில் கோதாபய வெற்றி பெற்றால் தீவிர குற்றச் சாட்டுக்கள் இருக்கும் நிலையில் பெயரளவு ஜனாதிபதியாகவேனும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவராக கோதாபய உலக வரலாற்றில் பதிவாவார். இவ்வாறான குற்றச் சாட்டுகளுக்கு மேலதிகமாக கோதாவுடைய பிரஜாவுரிமைச் சர்ச்சை, அதனுடன் தொடர்புடைய கடவுச் சீட்டு மற்றும் அடையாள அட்டை பிரச்சினைகளும் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. மேலதிகமாக உள்ள இந்தப் பிரச்சினைகள் கூட அத்துடன் முடிந்ததாக இல்லை. அவரது கடவுச் சீட்டு தொடர்பான ஆவணங்கள் எதுவுமே குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் இல்லை. தேசிய அடையாள அட்டைக்குத் தேவையான எந்த ஆவணமும் திணைக்களத்தில் இல்லை. மிக் விமானக் கொள்வனவு தொடர்பில் அவர் அது இரு நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலாகக் குறிப்பிட்டாலும் அது அவ்வாறு இருக்கவில்லை.

எனவே, பிரச்சினைகளில் இருந்து விடுபடாத பிரச்சினைக்குரிய ஒருவரே இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் நிலை இருக்கிறது. சட்டப்படி அவர் அமெரிக்கராக இருந்தால், அமெரிக்கர் ஒருவர் இலங்கையின் ஜனாதிபதியாகும் முதல் சந்தரப்பமாக இது அமையும். அமெரிக்க மனைவியையும் அமெரிக்கப் பிள்ளைகளையும் உடைய ஜனாதிபதியாக அவர் மாறுவார். அவர் அதிகாரத்துக்கு வந்தால் அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்கு எதிராக இருக்கும் குற்றச்சாட்டுக்கள் அனைத்திலிருந்தும் விடுதலை பெறுவார். இதனைத் தொடர்ந்து ஏற்கனவே சரிந்து போயுள்ள சட்டவாட்சி முழுமையாகவே வீழ்ச்சி அடைந்து விடும்.

கோத்தாபய தொடர்பில் நான் எழுதிய நிலையில் ரொய்டர் சேவையின் வருண கருணாதிலகவுடன் இரண்டு தடவைகள் கோதாவைச் சந்தித்த போதும் நான் எழுதியவற்றை ஒரு பொருட்டாக அவர் கருதவில்லை. இரண்டாவது சந்திப்பின் போது அவர் மனம் திறந்து பேசினார். அவரிடம் நான் கேட்ட கேள்விகளுள், உங்களது சகோதரரும் அவரது ஆட்சியும் மக்களால் தோற்கடிக்கப்பட்டமைக்கு வகை தொகையின்றி அதிகரித்திருக்கும் மோசடிகள் தானே காரணம். இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் எனக் கேட்டதற்கு அவர் தனது சகோதரனின் ஆட்சியின் மோசடிகளை மறுக்கவில்லை, ஏற்றுக் கொண்டார். மக்கள் அவ்வாறு தோற்கடித்திரா விட்டால் இந்தத் தவறு நீண்டு செல்வதற்கு அது இடமளித்திருக்கும் என்பதனை அவர் ஒப்புக் கொண்டார். இந்த நேரத்தில் அவர் முரண்டு பிடிப்பவராக அன்றி குற்றத்தை ஒப்புக் கொள்ளும் மனப்பாங்குடன் காணப்பட்டார்.

கோதா தனது அனைத்து கும்மாளங்களையும் படையினருடன் இணைந்தே செய்தார். யுத்தத்தை மட்டுமன்றி யுத்தத்துக்குப் பின்னரான நகர அபிவிருத்திக்குக் கூட நகர சபை ஊழியர்களை வைத்துவிட்டு பாதுகாப்புப் படையினரையே பயன்படுத்தினார். கொழும்பு நகர அபிவிருத்திக்குத் தேவையான நிலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சேரிப்புற மக்களை அகற்றும் போதும், அந்த மக்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறி அவர்களது சம்மதத்துடன் அதனைச் செய்யாமல் பாதுகாப்புப் படையைப் பயன்படுத்தி பலாத்காரமாகவே அவர்களை வெளியேற்றினார்.

நகரத்தை துப்புரவாக்கும் செயற்பாட்டிலும் குப்பைப் பிரச்சினை பற்றி மக்களுக்குத் தெளிவூட்டிச் செயற்படுத்துவதை விட மக்களை அச்சுறுத்தும் பதாதைகளை காட்சிப்படுத்தியே அதனை நடைமுறைப் படுத்தினார். அதிபர்களையும் ஆசிரியர்களையும் இராணுவத்தினர்களாக மாற்றும் செயற்பாட்டினூடாக பாடசாலை முறைக்குள்ளால் இராணுவ இயல்பைக் கொண்டு வர முயற்சித்தார். பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக நுழையும் மாணவர்களுக்கு இராணுவத்தினூடாக பயிற்சி அளித்து இங்கும் இராணுவ மனப்பாங்கை நிறுவினார்.

கோதாபய பாதுகாப்புப் படைக்குரிய பதவிகளுக்குப் பொருத்தமானவராக இருந்தாலும், சிவில் மனப்பாங்கை அவர் தனக்குள் உருவாக்கிக் கொள்ளாதவரை அவரை நாட்டை ஆள்வதற்குப் பொருதமானவராகக் கருத முடியாது. கோதாபய ராஜபக்ஷ முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிட்ட அனாவசியமான பிரச்சினைகள் இல்லையென்றால் 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்றிருப்பார். இந்த வகையில் 2015 தேர்தலில் மஹிந்தவைத் தோற்கடித்த பிரதான நபர் கோத்தாதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



# மற்றுமொரு ஏமாற்றத்தை நோக்கி நகரும் சூழ்நிலைக் கைதிகள்

• பியாஸ் முஹம்மத்

தேர்தல் மேடைகள் வாக்குறுதிகளால் நிரம்பி வழிகின்றன. 90 வீதத்துக்கு மேல் கல்வி அறிவு பெற்றவர்களைக் கொண்ட நாட்டில் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் வாக்காளர்கள் இதனை எல்லாம் கேட்டு வாக்களித்து பின்னர் ஏமாந்து போவது இன்று நேற்று சமாச்சாரம் அல்ல. பொதுமக்கள் ஏன் தேர்தல் காலங்களில் மட்டும் பொதுமீக்குகள் ஆகின்றார்கள் என்பது தான் கல்வியறிவில் தெற்காசியாவிலேயே முதல் தரத்தில் இருக்கும் நாட்டு மக்களுக்கு முன்னால் உள்ள கேள்வி.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் அரசியல் தலைவர்கள் தேர்தலில் நிற்பதேயன்றி இதுநாள் வரை ஒரு நாட்டுத் தலைவர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்குக் கேட்டு நின்றதில்லை. அதனால் தான் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இதுவரையான காலம் வரை மக்கள் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளால் அறிமுகப்படுத்தப்படும் கோஷங்களில் மூழ்கிப் போகிறார்கள். தேர்தல் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தினால் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளுக்கும் மக்களின் வாக்களிப்புக்கும் இடையிலான ஒரு முரண்தொகை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தளவுக்கு தேர்தல் கோஷங்களால் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகள் அரசியல் சாக்கடைகளை நிரம்பச் செய்கின்றன.





J.R. Jayewardene

Ranasinghe Premadasa

D B Wijetunga

Chandrika Kumaratunga

Mahinda Rajapaksa

Maithripala Sirisena

இலங்கை மக்கள் இந்த வாக்குறுதிகளுக்கு கரட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கரட் ஒட்டகத்துக்கு விருப்பமான உணவு. பண்டைய அரேபியர் தமது குதிரையை தமக்கு வேண்டிய இடத்துக்கு வேகமாகச் செலுத்துவதற்கு குதிரைக்கு முன்னால் ஒரு கம்பில் கரட்டை மாட்டி வைத்துக் கொண்டு குதிரையை ஓட்டுவதனால் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளுக்கு இந்தப் பெயர் பொருத்தமாகத் தான் அமைகிறது.

இலங்கையின் அரசியல் களத்தில் சுயமாக இலங்கையை ஆளக் கிடைத்த காலத்தில் இருந்து சூழ்நிலைகளின் தேவைகளை வைத்தே வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதில் இருந்து எந்த அரசியல்வாதிக்கும் நாடு தொடர்பான தூரநோக்கு இருந்ததில்லை என்பது தெளிவாகிறது. 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியும் சமசமாஜக் கட்சியும் பிரதான கட்சிகளாகப் போட்டியிட்ட போது ஐக்கிய தேசியக் கட்சி அப்பொழுது மக்களுக்கு மிகவும் அவசியமாக இருந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதியளித்தது. மாட்டுக்குப் புல்லில்லை, குழந்தைக்குப் பாலில்லை, நாட்டுக்குச் சுதந்திரமில்லை என்ற கோஷத்தை முன்வைத்து மக்கள் முன் சென்ற டி.எஸ். சேனாநாயக்க, அதே காலப்பிரிவில் பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் கிடைத்தது போல பூரண சுதந்திரத்தைப் பெற்றுத் தராவிட்டாலும் தான் வழங்கிய வாக்குறுதிப்படி சுதந்திரத்தை வென்றெடுத்தார். 1915 சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது சிறைவாசம் அனுபவித்ததன்பின் 1918 முதல் இலங்கைத் தேசிய பேரவையூடாக சுதந்திரத்துக்காகப் போராடிய ஒருவர் என்பதனால் இவரால் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியுமாகியது.

1952 ஆம் ஆண்டு கோல்பேஸில் தனது வழமையான காலைநேரச் சவாரியில் ஈடுபட்டிருக்கும் போது குதிரையில் இருந்து விழுந்ததனால் டி.எஸ். கீழே விழுந்து காலமானதைத் தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட அவரது புதல்வர் டட்லி சேனாநாயக்கவுக்கு தேசபிதாவின் மரணத்தால் ஏற்பட்ட அனுதாப அலை சாதகமாக வீசியதால் தேர்தலில் வெல்வதற்காக வாக்குறுதிகள் வழங்க வேண்டிய தேவை இருக்க

இந்த வேளையில் உலக சந்தையில் அரிசியின் விலை அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் அரிசி விலை அதிகரிக்கும் என்ற மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் மக்களைக் கவரும் வாக்குறுதியொன்றை டட்லி சேனாநாயக்க தெரிவு செய்ய வேண்டி வந்தது.

ஆனால் அடுத்த வருடமே உலகில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தினால் இலங்கைக்கு அரிசி வழங்கிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, இந்திய நாடுகளிலும், கோதுமை மா வழங்கிய அமெரிக்கா, ரஷ்யா நாடுகளிலும் விளைச்சல் குறைந்ததால் நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகரித்தது. கொடுத்த வாக்குறுதியை அரசினால் காப்பாற்ற முடியவில்லை. அடுத்த வருடமே நிதி அமைச்சர் ஜேஆர் ஜயவர்தன அரிசி விலையை 75 சதமாக அதிகரித்தது மட்டுமன்றி இன்னும் பல பொருட்களினதும் விலையை அதிகரித்து இலவச பகலுணவையும் இல்லாமல் செய்தார். இதனால் மக்கள் கொதிப்படைந்து 1954 இல் நடத்திய மாபெரும் ஹர்த்தாலின் விளைவினால் நிதி அமைச்சர் பதவி விலக நேரிட்டது. இறுதியில் அரிசி விலை வாக்குறுதியினாலேயே டட்லி அரசாங்கம் பதவியில் இருந்து விலக நேரிட்டது.

அதனைத் தொடர்ந்து பதவியேற்ற ஜோன் கொதலாவல அரசாங்கத்தின் காலத்தில் பாஷைப் பிரச்சினை உக்கிரமடைந்தது. ஆங்கிலேயர் காலத்திலிருந்து ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கே அரச பதவிகள் வழங்கப்பட்டு வந்ததால் மக்கள் தமது சொந்த மொழியில் அரச பணிகளைப் பெறுவதில் பாரிய சிக்கலை எதிர்நோக்கினர். பொலிசில் முறைப்பாடு செய்வதிலும் நீதிமன்றச் செயற்பாடுகளிலும் சிங்களம் அல்லது தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதற்குப் பதிலாக சிங்களத்தையும் தமிழையும் உத்தியோகபூர்வ மொழியாக்கி இரு மொழிகளுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஐ.தே.க.வும், சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் கொண்டிருந்தன.

இந்தச் சூழலை அவதானித்த புதிதாக உருவாக்கப்பட்ட எஸ்.டப்.ஆர்டி. பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரச மொழியாக்குவதாக மக்களிடம் வாக்குறுதியளித்து தேர்தலில் [illegible] மக்களின்

வில்லை. இருந்த போதிலும் சூரியன், சந்திரன் இருக்கும் காலமெல்லாம் ஒரு கொத்து அரிசி 25 சதம் என்ற வாக்குறுதியை அவர் வழங்கினார்.

இவர் இந்த வாக்குறுதியை வழங்குவதில் அப்போதிருந்த சூழ்நிலை முக்கிய இடம் வகித்தது. காலனித்துவ காலத்தில் இலங்கையின் நெல் விவசாயம் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. அதனால் இலங்கை பர்மா, தாய்லாந்து, இந்திய நாடுகளில் இருந்து அரிசியைப் பெற்று வந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்தினால் கடல் போக்குவரத்தில் ஏற்பட்ட பாதிப்பு இந்த அரிசியை இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதை தாமதமாக்கியது. இதனால் நாட்டில் ஏற்பட்ட அரிசி விலை அதிகரிப்பையும் அரிசிப் பஞ்சத்தையும் தவிர்க்க மானிய அடிப்படையில் ஒருவருக்கு இரண்டு கொத்து அரிசி வழங்கப்பட்டு வந்தது. அப்பொழுது ஒரு கொத்து அரிசியின் விலை 25 சதமாக நிர்ணயம் செய்யப்பட்டது.

உணர்வினைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தக் கோஷத்துக்காக பிக்குமாரையும் களத்தில் இறக்கியதால் இந்த வாக்குறுதி அமோக வரவேற்பைப் பெற்றது. நிறைவேற்ற முடியாதது என்று பண்டாரநாயக்க தெரிந்திருந்தாலும் மக்களின் உணர்வுக்கு அவர் தீனி போட்டதனால் அவர் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரானார்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் என உருண்டோடினாலும் அவரால் சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமாக இருந்ததே தவிர நடைமுறைப்படுத்த முடியவில்லை. இதனால் ஒன்றாயிருந்த சிங்கள தமிழ் மக்களிடையே இனவாத உணர்வுகள் மேலோங்கி சிங்களத் தீவிரவாத சக்திகளின் கை ஓங்கத் தொடங்கியது. ஈற்றில் 1959 செப்டம்பர் 26 இல் அவர் கொல்லப்பட்ட போது கூட சிங்களத்தை அரச மொழியாக்கும் அவரது வாக்குறுதி நிறைவேறவில்லை. அவர் மரணித்து இரண்டு வருடங்களின் பின்னரே நீதிமன்றம் இதனை நிறைவேற்றியது.

பின்னர் டப்.தஹநாயக்க அரசாங்கம் அமைத்ததில் இருந்து குழப்பங்கள் மலிந்ததால் 03 மாதங்களிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960 மார்ச் 19 இல் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஐதேக 50 ஆசனங்களையும் ஸ்ரீலசுக 46 ஆசனங்களையும் பெற்றதால் வடக்கின் பெடரல் கட்சியின் ஆதரவைப் பெற ஐதேக முயற்சித்த போதும் தமிழ்க்கட்சி முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு சிங்களப் பெரும்பான்மை விரும்பாததன் காரணமாக பெரும்பான்மையின்றி அரசு 33 நாட்களில் கவிழ்ந்தது. இருந்த போதும் மக்களின் இந்த உணர்வலைகளைப் புரிந்து கொண்டு சூழலைப் பயன்படுத்திய ஐ.தே.க. கடவுளே வந்தாலும் நாட்டை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்ற கோஷத்தை முன்னெடுத்து ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது. 1965 இல் நடைபெற்ற அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் முன்வைத்த வாக்குறுதிக்கு மாற்றமாக மீண்டும் பெடரல் கட்சியின் ஆதரவைப் பெற்று அரசாங்கம் அமைத்தது. இந்த அரசாங்கம் தான் முழுமையான ஆயுளைக் கொண்ட முதல் அரசாங்கமாக அமைந்தது.

1970 தேர்தல் காலம் வரும்போது மீண்டும் நாட்டில் அரிசிப் பிரச்சினை தலைதூக்கியது. உலகம் முழுவதும் பரவிய பஞ்சத்தினால் மானியமாக வழங்கப்பட்ட இரண்டு கொத்து அரிசி 01 கொத்தாகக் குறைக்கப்பட்டது. இதனால் வரக்கூடிய பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ஒரு கொத்து அரிசியை அரசாங்கம் இலவசமாக வழங்கிய போதும் அரிசிப் பிரச்சினை தீரவில்லை. இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்ட ஸ்ரீமாவோ அம்மையார் சந்திரனிலிருந்தாவது அரிசி கொண்டுவந்து தருவதாக மக்களுக்கு வாக்களித்தார். இதனை நம்பி மக்களும் வாக்களித்தனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஸ்ரீமாவோ ஆட்சியமைத்தார். ஆனால் மூன்று வருடங்களிலேயே மீண்டும் அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது. சந்திரனில் மட்டுமே அரிசி தேடாத நிலையில் இலங்கைக்கு செவ்வாய், வெள்ளியிலும் (கிழமைகளிலும்) அரிசி கிடைக்காத நிலை தோன்றியது. அரிசி ஆலைக்கு நெல் எடுத்துச் செல்வதற்கும் அனுமதி பெற வேண்டியிருந்தது. மக்கள் உண்ண உணவின்றி கஷ்டப்படத் தொடங்கினார்கள்.

இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்ட ஜேஆர் ஜயவர்தன, எட்டு இராத்தல் தானியங்கள் தருவதாக வாக்குறுதியளித்து தேர்தலில் களமிறங்கி வெற்றி பெற்றார். தரக் கூடிய தானியங்கள் என்ன, அது இலவசமாகக் கிடைக்குமா என்றெல்லாம் கேட்காமல் மக்கள் அந்தத் தேர்தலில் வாக்களித்தார்கள். அரிசியையே காணவும் கிடைக்காத நாட்டில் வாரத்துக்கு ஒரு முறை இலவசமாக அரிசி கிடைக்கப் போகிறதே என நம்பி மக்கள் வரலாறு காணாத முறையில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஜேஆரை வெல்ல வைத்தார்கள். இவரது ஆட்சியில் அரிசி கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்கள் பொறுமையிழந்து எட்ட அட்ட கோ (தானியங்கள் எட்டும் எங்கே) என்று கோஷமெழுப்பியபோது, அவ்வேளை தாராளப் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியிருந்த ஜேஆர், சந்தையில் தாராளமாக இருக்கிறது. காசு கொடுத்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னதோடு அவரது தேர்தல் வாக்குறுதியும் காற்றில் கரைந்தது.

இதனைத் தொடர்ந்து ஜேஆர் சர்வாதிகார ஆட்சிக்கு நிகரான நிறைவேற்று அதிகார முறையை அறிமுகப்படுத்தி ஆட்சி செய்தாலும் அவரது திறந்த பொருளாதாரக் கொள்கை ஏழை பணக்காரன் இடைவெளியை அதிகரிக்கச் செய்ததே அல்லாமல் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைக்கான தீர்வைத் தரவில்லை. இதனால் மக்கள் [illegible]

(பக்.14)





அபூ ஷாமில்

## குறைந்த தீமை இன்னும் எத்தனை நாளைக்கு?

நாட்டின் தலைவரைத் தேர்தலுக்கான போட்டி ஆரம்பமாகிவிட்டது. நாட்டின் தலைவராக வருவதற்கு யார் பொருத்தமானவர் என்று சிந்திப்பதை விட யாருக்குப் பின்னால் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்று பார்க்கும் சிந்தனைச் சோம்பேறிகள் தான் வாக்காளர்களில் அதிகமாக இருப்பார்கள் போல் தெரிகிறது.

எனது நாட்டுக்கு, என்னை ஆள்வதற்கு யார் பொருத்தமானவர் என்ற எந்தச் சிந்தனையும் இல்லாமல் அள்ளுண்டு சென்று வோட்டுப் போடுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். உங்களது பிள்ளை எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று தாய்மாரைக் கேட்டால் ஸாலிஹான பிள்ளையாக இருக்க வேண்டும் என்று சொல்லும் மொட்டையான எதிர்பார்ப்பு தான் நாட்டுத் தலைவரைப் பொறுத்தவரை மக்களிடம் இருக்கிறது.

நாட்டுக்கான தலைவரை 16 ஆம் திகதி தெரிவு செய்வதற்கு முன்னராக 12 ஆம் திகதி உலகத் தலைவரின் பிறந்த தினத்துக்காக சிங்கள நாட்டில் விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது. அவர் ஒரு முன்மாதிரியான ஆட்சியாளர். நீதி செலுத்துவது எப்படி என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர். அடிமைத் தனத்தை உலகிலிருந்தே ஒழித்துக் கட்டியவர். கைதியையும் கூட மென்மையாக நடத்துவதற்கு மக்களைப் பழக்கியவர். ஊழல், மோசடி என்பதை ஆட்சியிலிருந்து துடைத்தெறிந்த மாசற்றவர். தனது நலனுக்காக ஆட்சியைப் பயன்படுத்தாமல் தனது நலனையெல்லாம் மக்களின் ஆட்சிக்காக அர்ப்பணித்தவர். அவர் பிறந்ததே உலகுக்கு அருள். அவர் வந்ததால் சென்றது இருள். மொத்தத்தில் ஆட்சியாளர் தலைவராக இருப்பதற்காக வேறெங்கும் தேட முடியாத முன்மாதிரி தான் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

இப்படி ஒரு மொடலை வைத்துக் கொண்டு இது போன்றதொரு ஆட்சியாளரை ஒவ்வொரு தேர்தலிலும் முஸ்லிம் சமூகம் தேடிப் பார்க்கிறது. பின்னர் இருப்பதில் குறைந்த தீமையை தெரிவு செய்வோம் என வாக்களிக்கிறது. அடுத்த தேர்தலாகும் போது குறைந்த தீமையே முன்னிலைக்கு வந்து அதனை விடக் குறைந்த தீமையைத் தெரிவுக்காகத் தேடுகிறது. இப்படி எத்தனை காலத்துக்குத் தான் குறைந்த தீமையைத் தேடிக் கொண்டிருப்பது ? காலம் செல்லச் செல்ல தீமையின் வீரியம் கூடிக் கொண்டு செல்கிறதே ஒழிய குறைந்த தீமையுள்ளவரை தெரிவு செய்வதும் முயற்கொம்பாகி விடுகிறது. கடைசியில் என்னைக் கொல்லாமல் விடுவது தான் குறைந்த தீமை் என்ற தாத்தாரியர் நிலை வரை குறைந்த தீமை தேய்ந்து கொண்டே செல்லுகிறது.

அப்படியானால் தீங்கு இல்லாத தலைமை எப்படி இருக்க வேண்டும் ? இதோ இருக்கிறது மொடல். நாடும் உலகமும் எதிர்பார்க்கும் நீதியான நேர்மையான ஆட்சியாளருக்கான மொடலை முன்வைப்பதற்காகவென்றே இந்த வசந்த மாதத்தில் நாட்டுத் தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் வந்தது போலிருக்கிறது. இந்த வாய்ப்பை முஸ்லிம் சமூகம் எப்படிப் பயன்படுத்தியிருக்கிறது? முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயே ஒருவரையொருவர் கழுத்தறுத்துப் பேசுகின்ற மேடைகளைத் தவிர்த்து அரசியலுக்கான முன்னுதாரணத்தை, உதாரண புருஷரை மீலாதைப் பயன்படுத்தி ஏன் மேடைகளில் முழங்க முடியாமலிருக்கிறது ? ரஸூலுல்லாஹ்வின் சிறுநீரின் மகத்துவம், வியர்வை மான்மியம், தலைப்பாகையின் சிறப்பு என்றெல்லாம் மக்களுக்கு எடுத்தோதுவதைத் தாண்டி ஏன் ரஸூலுல்லாஹ் ஆட்சி செய்த அழகைப் பற்றி நாங்கள் இந்த நாட்டுக்கு எடுத்துச் சொல்லக் கூடாது ? நேர்மையான ஆட்சிக்கான முன்மாதிரி தெரியாமல் கொலையையும் ஊழலையும் ஆட்சியின் கலாச்சாரமாக மாற்றிக் கொண்டிருக்கும் நாட்டு மக்களை அழைத்து அன்னதானம் வழங்கி நபிகளாரின் அரசாட்சியின் மான்மியத்தை ஏன் முன்வைக்கக் கூடாது?

நாட்டுத் தலைவரைத் தெரிவு செய்யும் போது உலகத் தலைவரின் முன்மாதிரியை முன்னிறுத்துவதில் நாங்களே தவறிழைக்கின்றோம். கண்மணி நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் புகழ்பாடிக் கொண்டே கொலை வெறி பிடித்த ஆட்சியாளன் சிறந்தவன் என வாக்களிக்க முயற்சிக்கின்றோம். நபிகள் நாயகம் உலகத்துக்கே அருட்கொடை என்று எடுத்தோதிக் கொண்டே ஊழல், மோசடி, வீண்விரயம் நிறைந்தவர்களை தலைவர்களாக்க நினைக்கின்றோம்.

இதற்கு மாறாக சிறந்த ஆட்சியாளன் என்பதனை உலகின் தலைசிறந்த ஆட்சியாளரான நபிகளாரின் சட்டகத்துக்குள் இட்டு அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற அளவுக்கு அறிவுபூர்வமானவர்களாக முஸ்லிம் சமூகம் இருக்க வேண்டும். இனிவரும் தேர்தல் காலங்களிலும் மீலாத் வரும் என்பதை உத்தரவாதப்படுத்த முடியாவிட்டாலும், தேர்தல் காலங்களில் மட்டுமாவது சிறந்த தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதை நபிகளாரின் நிழலில் நாட்டுக்குச் சொல்ல வேண்டும். எப்படியும் 4,5,6 வருடங்களுக்குள் தலைவரைத் தெரிவு செய்வதற்கான அடுத்த தேர்தல் வரத்தான் போகிறது. அதற்குள் எத்தனையோ மீலாதுகள் நம்மை வந்தடையத்தான் போகின்றன. இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் நல்ல தலைவருக்கான முன்னுதாரணங்களை நாட்டுக்கு எடுத்துச் சொல்லி வருவோமாக இருந்தால் தேர்தல் காலமாகும் போது இந்தப் பண்புகளில் சிலதையாவது பெற்ற ஓரிருவரை நம்மால் அடையாளம் காண முடியுமாக இருக்கும்.

நல்ல தலைவர்கள் தானாகத் தோற்றம் பெறுவதில்லை. அவர்கள் வார்க்கப்பட வேண்டும். அதற்கான சிறந்த வார்ப்பு முஸ்லிம் சமூகத்திடம் இருக்கிறது. அதற்கான சிறந்த வாய்ப்பும் வருடா வருடம் வந்து போகிறது. இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாம் சிறந்த தலைவர்களை உருவாக்குவதற்கு முயற்சிக்காமல் ஒவ்வொரு தேர்தலிலும் குறைந்த தீமையைத் தெரிவு செய்ய முயற்சிப்பது ஒவ்வொரு மீலாதையும் நாங்கள் பொய்ப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையே காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனுக்கான முதல் குவைத் தூதுவர் நியமனம்



குவைத் அமீர் ஷேக் ஸபாஹ் அல் அஹ்மத் பலஸ்தீனத்துக்கான முதலாவது குவைத் தூதுவராக அஸீஸ் ரஹீம் அல் தைஹானியை நியமித்துள்ளார். பலஸ்தீன மக்களுக்கு குவைத்தின் ஆதரவை அதிகரிப்பதற்கே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனாமாவில் ஜூன் மாதம் இடம்பெற்ற பொருளாதார உச்சிமாநாட்டை குவைத் பகிஷ்கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குவைத்தின் இந்த முடிவை பலஸ்தீன மக்கள் வரவேற்றுள்ளதோடு, குவைத் அரசாங்கத்திற்கு தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளனர். ஹமாஸின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ஹாஸிம் காஸிம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் பகுதிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் தோல்வியடைந்துள்ளது எனவும் இஸ்ரேலுடனான உறவை சுமுகமாக்கிக் கொண்ட அறபு நாடுகள் பலஸ்தீனர்களுக்கு துரோகமிழைத்து விட்டன எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்பின் மருமகன் ஜாரட் குஷ்னர் சில மாதங்களுக்கு முன்னர் நடத்திய வளமான எதிர்காலத்திற்கான அமைதி மாநாடு தோல்வியடைந்து விட்டது என்றும் ஹமாஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

குவைத்தின் வெளிவிவகார அமைச்சர் காலித் ஜாருல்லாஹ், பலஸ்தீனர்களுக்கு ஆதரவளிப்பது குவைத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் முக்கியமானது எனத் தெரிவித்துள்ளார். அதேவேளை, இஸ்ரேலுடனான உறவை நாம் சுமுகமாக்க மாட்டோம் என்றும் வலியுறுத்தியுள்ளார். அசர்பைஜானின் தலைநகர் பாக்கூவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 18 ஆவது உச்சிமாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

ஏற்கனவே குவைத் அரசாங்கம் பலஸ்தீனர்களுக்கு மில்லியன் டொலர் பெறுமதியான பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றது. பாக்கூ மாநாட்டில் உரையாற்றிய அமீர் ஸபாஹ் பலஸ்தீனப் பிரச்சினை சர்வதேச சமூகம் நீதியான தீர்வினை கண்டடையாமல் இருப்பது பிராந்தியத்தின் அரசியல் ஸ்திரமின்மைக்குக் காரணமாகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேசப் பார்வை

# இஸ்ரேல் - பஹ்ரைன் பேச்சுவார்த்தை



பஹ்ரைன் வெளிவிவகார அமைச்சர் ஷேக் காலித் பின் அஹ்மத் அல் கலீபா மற்றும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் கார்ட்ஸ் ஆகியோர் கலந்து கொண்ட பேச்சுவார்த்தை அமெரிக்காவில் நடைபெற்றது. இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் பகிரங்கமாகக் கலந்துகொள்ளும் முதல் பேச்சுவார்த்தை இதுவாகும்.

1967 யுத்தத்திற்குப் பின்னர் இஸ்ரேலுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொண்டிருந்த அறபு நாடுகளுள் பஹ்ரைனும் ஒன்றாகும். நீண்ட காலமாக அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்து வரும் பஹ்ரைன், தற்போது இஸ்ரேலுடன் வெளிப்படையான உறவுகளைப் பேணுவதற்கு முயற்சித்து வருவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற சமய சுதந்திர மாநாட்டின் பொழுதே இவர்கள் சந்தித்துள்ளனர். இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ள இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர், நான் பகிரங்கமாக பஹ்ரைன் வெளிவிவகார அமைச்சரை சந்தித்தேன். வளைகுடா நாடுகளுடனான உறவைப் பலப்படுத்த நான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என டுவிட்டரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அரம்கோவின் இலாபம் 7 வீதத்தால் குறைவு

சவூதியில் உள்ள உலகின் மிகப் பெரும் எண்ணெய் மற்றும் எரிவாயுக் கம்பனி எனக் கருதப்படும் அரம்கோவின் இலாபத் திரட்டு இவ்வருடம் 7 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2018 இல் அரம்கோ ஈட்டிய நிகர இலாம் 111 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இவ்வருடம் அது 7 வீதத்தால் குறைந்துள்ளது.

செப்டம்பரில் அரம்கோ 68.2 பில்லியன் அமெரிக்க டொலரை நிகர இலாபமாகப் பெற்றது. ஆனால், 2011 செப்டம்பரில் அந்நிறுவனம் பெற்ற இலாபம் 83.3 பில்லியன் டொலர்களாகும். தற்போது இக்கம்பனி பங்குகளை விற்பனை செய்வதற்கு முன்வந்துள்ளது. இளவரசர் முஹம்மத் பின் சல்மான் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அரம்கோ கம்பனியின் பெறுமானம் 3 ரில்லியன் டொலர்கள் என சவூதி அரசாங்கம் தெரிவித்துள்ள போதும் பொருளியல் நிபுணர்கள் அதன் மொத்தப் பெறுமதி 1.5 டிரில்லியன் டொல்களே என மதிப்பிட்டுள்ளனர்.

# எதியோப்பிய அணைக்கட்டுப் பிரச்சினைக்கு ட்ரம்ப் தீர்வு



எதியோப்பியா, எகிப்து மற்றும் சூடான் ஆகிய நாடுகளுக்கிடையிலான அணைக்கட்டு தொடர்பான பிணக்கைத் தீர்த்து வைப்பதற்குத் தான் தயார் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எகிப்திய ஜனாதிபதி அப்துல் பத்தாஹ் ஸீஸியோடு கலந்துரையாடியுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

கடந்த வாரம் ட்ரம்ப் நிருவாகம் மூன்று நாட்டுப் பிரதிநிதிகளையும் வொஷிங்டன் வருமாறு அழைப்பு விடுத்திருந்ததாக எகிப்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். எதியோப்பியாவின் அணைக்கட்டானது நைல் நதியிலிருந்து எகிப்து பெற்று வரும் நீரின் அளவைக் கட்டுப்படுத்தலாம் என ஸீஸி அச்சமடைந்துள்ளார். இவ்விடயத்தில் எதியோப்பியாவில் தங்கியிருக்க முடியாது என ஸீஸி ட்ரம்பிடம் தெரிவித்துள்ளார்.

இது எகிப்தின் பொருளாதாரத்தின் மீது பெரும் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதியோப்பியா பெரும்பான்மை முஸ்லிம் நாடு என்ற போதும் ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்கள். மகத்தான எதியோப்பிய மறுமலர்ச்சி அணைக்கட்டு என்று பெயரிடப்பட்டுள்ள நைல் நதி மீதான எதியோப்பிய அணைக்கட்டு இம்மூன்று நாடுகளுக்கிடையிலும் மிகப் பெரும் பிணக்கைத் தோற்றுவித்துள்ளது.

# பக்தாதியின் சகோதரியையும் கணவரையும் துருக்கியப் படை கைதுசெய்தது



அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட ஐசிஸ் இயக்கத்தின் தலைவர் அபூபக்ர் பக்தாதியின் சகோதரியையும் கணவரையும் தாம் கைதுசெய்துள்ளதாக துருக்கியப் படைகள் தெரிவித்துள்ளன. இதன் மூலம் ஐசிஸ் பயங்கரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் பற்றிய தகவல்களை பெற வாய்ப்புள்ளது என்று துருக்கிய இராணுவம் தெரிவித்துள்ளது.

துருக்கிய இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பை அடுத்து, அபூபக்ர் பக்தாதயின் சகோதரி ரஸ்மியா அவாத் மற்றும் மருமகன் ஆகியோர் கொள்கலனிலிருந்து கைதுசெய்யப்பட்டனர். இவர்களை விசாரணை செய்வதன் மூலம் இப்பயங்கரவாத இயக்கத்தின் வலைப் பின்னல்கள் குறித்து தேவையான அனைத்துத் தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம் என துருக்கி கூறுகின்றது.

சிரிய நகரான அஸாஸில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். தற்போது தடுப்புக் காவலில் உள்ள இவர்களிடம் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஒக்டோபரின் கடைசிப் பகுதியில் சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் பக்தாதியை கொலை செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். பக்தாதி அமெரிக்காவின் தயாரிப்பு என்று கூறப்படுகின்றது.

# சிரியாவின் அரசியலமைப்புச் சபை கூடுகின்றது



சிரியாவுக்கான புதிய அரசியல மைப் புச் சபையின் முதல் கூட்டம் 4-11-2019 அன்று நடைபெற்றது. இதில் 45 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர். [illegible] அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு புதிய அரசியலமைப்புத் திட்டத்தை வரைவதே இக்குழுவின் நோக்கமாகும்.

எனினும் சிரியாவின் எதிர்க்கட்சியினர் இக்குழுவின் செயற்பாட்டில் தமக்கு நம்பிக்கையில்லை என்று கூறியுள்ளனர். அரசியலமைப்புச் சபையின் பிரதித் தலைவரான ஹாதி அல் பஹ்ரா அனாதுலு செய்தி முகவர் நிறுவனத் திடம் இது குறித்து கருத்து வெளியிட்டபோது, "இரண்டு மணி நேரம் நாம் கலந்[illegible] சிரியாவுக்கான புதிய அரசியலமைப்புச் சபையில் வரைவதங்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் முறைமை குறித்துக் கலந்துரையாடினோம். குழுவில் அங்கத்துவம் வகிக்கும் பல்வேறு கட்சியினர் மத்தியில் இது தொடர்பான கருத்தொற்றுமை ஏற்பட்டது. இதற்கிடையில் சிரியாவுக்கான ஐ.நா.வின் விஷேட தூதுவர் பெடசன் சிரிய அரசியலமைப்புச் சபையின் முதல் கூட்டம் வெற்றிகரமானது எனத் தெரிவித்துள்ளார்.- 150 சிரியர்கள் உட்கார்ந்து பரஸ்பரம் பேச்சுவார்த்தை நடத்தினர். அது தாக்க முள்ளதாக இருந்தது என பெடசன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கலாநிதி றவூப் ஸெய்ன்



# கொமைனியும் ட்ரம்பும் வளைகுடாவில்

அணு ஒப்பந்தத்திலிருந்து டொனால்ட் ட்ரம்ப் வெளியேறியதைத் தொடர்ந்து ஈரானின் ஆன்மீகத் தலைவர் கொமைனிக்கும் அமெரிக்கத் தலைவர் ட்ரம்பிற்கும் இடையிலான பனிப்போர் ஒவ்வொரு நாளும் உக்கிரமடைந்து வருகின்றது. ஈரான் மீது அதிகபட்ச அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் வொஷிங்டன் குறியாக இருக்கின்றது.

புதிதாக ஈரான் மீது வொஷிங்டன் விதித்துள்ள பொருளாதாரத் தடை 9 தனிநபர்களை இலக்கு வைத்துள்ளது. அதில் நீதித்துறைத் தலைவர், கொமைனியின் நிருவாக உதவியாளர்கள் உள்ளிட்டு அவரது மகன்மார்களும் உள்ளடங்குகின்றனர். தெஹ்ரானில் இருந்த அமெரிக்கத் தூதுவராலயத்தை முன்னாள் கொமைனி ஆதரவாளர்கள் கையகப்படுத்தி சரியாக 40 ஆண்டுகள் நிறைவடையும் இச்சந்தர்ப்பத்திலேயே வொஷிங்டனின் புதிய பொருளாதாரத் தடை விதிக்கப்படுகின்றது. ஈரானிய புரட்சிக்கும் அதே 40 ஆண்டுகள்தான்.

அதேவேளை, ஈரான் ஆயுதப் படையை அமெரிக்கா தனது கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. அமெரிக்கத் திறைசேரியின் செயலாளர் ஸ்டீவன் நுச்சின், ''ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் கொமைனியை சுற்றியிருக்கும் பரிவாரத்தை திறைசேரித் திணைக்களம் இன்று இலக்கு வைத்துள்ளது'' என இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

1979 நவம்பர் 04 இல் தெஹ்ரானிலிருந்த அமெரிக்கத் தூதுவராலயத்தில் 52 அமெரிக்கர்கள் ஈரான் அதிகாரிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு 444 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டனர். 1981 ஜனவரி 20 வரை அமெரிக்கர்கள் மீதான தடுப்புக் காவல் நீடித்தது. 1979 இலிருந்தே தெஹ்ரான்-வொஷிங்டன் ஆகியவற்றுக் கிடையிலான அரசியல் பதட்டம் ஆரம்பித்தது.

2018 இல் ஈரான் அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து டொனால்ட் ட்ரம்ப் விலகினார். அது முதல் ஈரானைத் தனிமைப்படுத்தும் அமெரிக்கப் பொருளாதாரத் தடை ஒன்றன் பின் ஒன்றாக விதிக்கப்பட்டது. ஈரான் எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்துவதே வொஷிங்டனின் பிரதான நோக்கமாகும்.

ஈரான் தலைவர்களைப் பேச்சுவார்த்தை மேடைக்கு அழைக்கும் நோக்கில் ட்ரம்ப் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. மறுதலையாக ஈரான் மீதான கடும்போக்கை வொஷிங்டன் கடந்த 4 ஆண்டுகளாகக் கையாண்டு வந்தது. நவம்பர் 04, 2019 இல் ஈரான் அமெரிக்கத் தூதரகத்தைச் சுற்றிவளைத்து பணயக் கைதிகளாக அமெரிக்கர்களைத் தடுத்து வைத்ததற்குப் பழிவாங்கும் முகமாக 9 தனிநபர்கள் மீது அமெரிக்காவுக்கான தடை மற்றும் பொருளாதார ரீதியான இடையூறுகளை வொஷிங்டன் ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் அமெரிக்காவின் FBI உளவுத்துறையின் மூத்த அதிகாரிகளுள் ஒருவரான றொபட் லெவின்சன் ஈரானில் காணாமல் போனதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்ததோடு, அவரது இருப்பிடம் குறித்த தகவல்களை வழங்குவோருக்கு 20 மில்லியன் டொலர்கள் சன்மானமாக வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

புதிய தடைகளும் பொருளாதார அழுத்தங்களும் நிதி மூலங்களை முடக்குவதை நோக்காகக் கொண்டுள்ளன. ''ஆன்மீகத் தலைவரின் உள்வட்டார நீதிச் சொத்துக்களையும் இராணுவ மற்றும் வெளிநாட்டு உதவிகளையும் எமது பொருளாதாரத் தடை இலக்கு வைத்துள்ளது'' என வெள்ளை மாளிகையின் சிரேஷ்ட நிருவாகி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள இக்குறிப்பிட்ட நபர்களின் சொத்துக்கள் முடக்கப்படுவதோடு வெளிநாட்டிலிருந்து வரும் எந்தப் பொருளுதவியும் அவர்களைச் சென்றடையாது. கொமைனியின் சிரேஷ்ட அலுவலகர் முஹம்மத் கொல்பயாகானி மற்றும் வாஹித் ஹகானியன் ஆகியோரை பதிய பொருளாதாரத் தடை இலக்குவைத்துள்ளது. இவ்விருவரும் கொமைனியின் வலக் கரம் எனக் கருதப்படுபவர்கள்.

2019 மார்ச்சில் ஈரானின் நீதித் துறை தலைவராக நியமிக்கப்பட்ட இப்ராஹிம் ரைஸி, அதேபோன்று கொமைனியின் இரண்டாவது மகனான முஜ்தபா கொமைனி ஆகியோர் மீதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஷா ரிஸா பஹ்லவி எனும் அமெரிக்க ஏஜென்டினை கவிழ்த்து அவனது கொடுங்கோன்மை மிக்க மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த மக்கள் புரட்சியை ஈரானியர்கள் இம்முறை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுவதாக அல்ஜஸீராவின் தெஹ்ரான் செய்தியாளர் கூறுகின்றார். அதற்கு ஒரு விஷேட காரணம் உள்ளது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பனிப்போர் இந்த 40 ஆண்டு கால இடைவெளியில் கடந்த 5 ஆண்டுகளாகவே அதன் உச்சத்திற்குச் சென்றுள்ளது. குறிப்பாக, ஈரானில் வொஷிங்டன் முகவர்கள் மூலம் உள்ளார்ந்த குழப்பங்களைத் தோற்றுவித்து ஸ்திரமின்மையைக் கொண்டு வர வொஷிங்டன் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

வளைகுடாவில் ஈரான், லெபனான், ஈராக் ஆகியன ஒரு கூட்டணியாகவும் பிற அறபு நாடுகள் இன்னொரு கூட்டணியாகவும் பிரிந்து செயல்படுகின்றன. இந்தப் பிளவையும் பிரிவையும் உருவாக்கியதில் வொஷிங்டனின் பங்கு முக்கியமானது.

ஈரானின் அணுச் செறிவாக்கல் திட்டம் மத்திய கிழக்கில் இஸ்ரேல்-ஈரான் அதிகாரச் சமனிலையை உருவாக்கும் என்பதனால் ஈரானை இந்த முயற்சிலிருந்து தடுப்பதில் டெல் அவிவ் குறியாக இருக்கின்றது. மத்திய கிழக்கிலுள்ள மூன்று முக்கிய அறபு நாடுகளுடன் இவ்விவகாரத்தில் இஸ்ரேல் இணைந்து செயலாற்றுகின்றது. சவூதி அறேபியா, பஹ்ரைன், ஐக்கிய அறபு அமீரகம் என்பன இன்று இஸ்ரேலின் விளையாட்டுக் களமாகவே மாறியுள்ளது.

1960 களில் மத்திய கிழக்கில் பெற்றோலிய வளம் கொழிக்கும் இரு நாடுகளை வொஷிங்டன் தனது காலடியில் வளைத்துப் போடுவதற்கு அமுல்படுத்திய ராஜதந்திரத் திட்டத்தில் ஈரானும் ஒன்றாகும். மற்றைய நாடு சவூதி அறேபியா. இரண்டிலும் வொஷிங்டன் நினைத்தவாறு வெற்றி பெற்றது. இவ்விரு நாடுகளிலும் தனது பிடியை இறுக்கியதோடு, வொஷிங்டன் வைத்த பொறியில் இருந்து விடுபடவே முடியாதளவு அரசியல் பொருளாதார பாதுகாப்பு தந்திரோபாயங்களை இவ்விரு நாடுகள் மீதும் அமெரிக்கா பிரயோகித்து வந்தது.

வாய்ப்புக்கேடாக தான் பதவியில் வைத்திருந்த ஷா முஹம்மத் ரீஸா பஹ்லவியை வொஷிங்டனால் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. தெஹ்ரானில் பணியாற்றிய வொஷிங்டன் உளவாளிகள் பஹ்லவி ஆட்சியை நீடிப்பதற்கு பல பில்லியன் டொலர் பெறுமதியான திட்டங்கள் பலதை கச்சிதமாக நடைமுறைப்படுத்தினர். இருந்தும் ஈரானில் அமெரிக்காவினால் வெற்றிகொள்ள முடியவில்லை.

நாடு கடந்த நிலையில் பிரான்ஸில் இருந்தவாறு கொமைனி 1979 இல் வழிநடாத்திய மக்கள் புரட்சி ரிஸா பஹ்லவியை அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்தது. அவர் பதவி கவிழ்க்கப்பட்டு சில மாதங்களில் 1979 நவம்பர் 04 இல் தெஹ்ரானிலிருந்த அமெரிக்கத் தூதரகத்தை பல்கலைக்கழக மாணவர்கள் முற்றுகையிட்டனர். அமெரிக்காவின் வைத்தியசாலை ஒன்றில் சகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்ததாக வொஷிங்டன் கூறிய ரிஸா பஹ்லவியை தங்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

52 அமெரிக்கப் பிரஜைகள் 444 நாட்களுக்குப்பினரன் விடுவிக்கப்பட்டதோடு நெருக்கடி முடிவுக்கு வந்தது. எவ்வாறாயினும், 1980 ஆம் ஆண்டிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் மற்றும் ராஜதந்திர உறவுகள் மெல்ல மெல்ல வீழ்ச்சியடைந்தன.

புரட்சியின் 40 அண்டு கால நிகழ்வு இம்முறை மிகுந்த பதட்டத்திற்கு மத்தியிலேயே நினைவுகூரப்படுகின்றது. 2018 இல் அமெரிக்கா ஈரானுடனான அணு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதை அடுத்து விதிக்ப்பட்ட பொருளாதாரத் தடை ஒவ்வொன்றும் ஈரானின் பொருளாதாரத்தை சிறிது சிறிதாக முடக்கி வருகின்றது.

ஈரானில் முழு அளவிலான சிவில் ஜனநாயக ஆட்சி முறையொன்று நிலவுகிறதா என்பதில் அரசியல் ஆய்வாளர்களிடையே பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளன. ஏனெனில், அங்கு அரசாங்கம் ஒரு அதிகாரப் படிநிலை யைக் கொண்டுள்ளது. தீர்மானிக்கும் இறுதிச் சக்தியாக் கண்ணிப்பா ளர் சபை (Guardian Counvcil) உள்ளது. இச் சபை முழுவதும் மத குருக்களை உள்ளடக்கியது. அதற்கு அடுத்த நிலையில் ஆன்மீகத் தலைவர் அதிகாரம் பெற்றவராக உள்ளார். மூன்றாவது நிலையி லேயே பாராளு மன்ற அதிகாரம் உள்ளது. ஜனாதிபதி இம்மூன்று நிறுவனங்களுக்கும் கட்டுப்படும் பிரதிநிதியாகவே செயல்படுகிறார். பிற நாடுகளைப் போன்று நிறைவேற்று அதிகாரம் மிக்க ஒரு தலைவராக அங்கு ஜனாதிபதி செயல்பட முடியாது. இப்படிநிலை (Hiarachy) ஈரானின் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியில் பெருமளவு விவாதிக்கப்படுகின்றது. சிலர் ஈரானில் ஜனநாயகம் இல்லை என்று இந்நிலையைக் கடுமையாகச் சாடுகின்றனர்.

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஷிரான்அவர்களுள் முக்கியமான வர். ஈரான் வொஷிங்டனின் பார்வையில் மத்திய காலத்தில் கோலோச்சிய கிறிஸ் தவ திருச்சபை போல ஒரு மத ஆட்சி பீடம்.




மதகுருக்களின் ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்பதில் வொஷிங் டன் குறியாக உள்ளது. இதே வொஷிங் டன் ஜனநாயகத்தின் ஒரு துளியும் இல்லாத பிற்போக்கான மன்னராட்சியை சவூதியிலும் பிற நாடுகளிலும் அங்கீகரிக்கின்றது.

ஈரானில் ஜனநாயகம் எந்தளவுக்கு உள்ளது என்பது விவாதப் பொருளே. எனினும் பிற அறபு நாடுகளுடன் ஒப்பிடும்போது அங்கு ஜனநாயகத் தன்மை உள்ளது. ஆனால் அதன் அணுச்செறிவாக்கத் திட்டம் தனது நட்பு நடாகிய இஸ்ரேலின் இருப்புக்கு அச்சுறுத்தல் என்பதற்காகவே ஈரானை வொஷிங்டன் இவ்வாறு பிழையாக் கையாள்கின்றது. தற்போது தெஹ்ரான்-வொஷிங்டன் முறுகல் எல்லை கடந்து செல்கின்றது. அமெரிக்காவின் உள்நோக்கம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதோ மனித உரிமைகளைக் காப்பதோ அல்ல. ஈரானின் இராணுவ் தளபதி அப்துல் ரஹீம் மூஸவி சொல்வது போல், இது வரலாற்றுப் பகைமுரண்பாட்டின் புதிய வெளிப்பாடாகும்.

''எங்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நாம் சுதந்திரம் அடைந்ததிலிருந்தே தொடங்கி விட்டது. நாம் அவர்களுக்கு அடிபணியவில்லை என்பதே எம்மைச் சீண்டுவதற்கான காணரமாகும். தேளின் இயல்பு அது உயிரோடு இருக்கும்வரை அடுத்தவர்களை தீண்டிக் கொண்டிருப்பதுதான். அதுபோலவே வொஷிங்டன் தனது குரோத நடத்தைகளை எமக்கெதிராக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தத் தேளை எங்கள் காலின் கீழே போட்டு நசுக்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.'' ஈரானின் ஆயிரம் நகர்களில் புரட்சிக் கொண்டாடங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியில் தொலைக்காட்சியில் ஆற்றப்பட்ட உரையில் மூஸவி இவ்வாறு தெரிவித்தத்துள்ளார்.

அமெரிக்காவின் ஆணவம், அதன் அதிகாரத் திமிருக்கும் ஒடுக்கு முறைக்கு எதிரான ஈரானின் ராஜதந்திரத்திற்கும் இடையிரல் இடம்பெறும் ஒரு யுத்தமே தற்போது மத்திய கிழக்கில் நடைபெறுவதாக அலி கொமைனி கூறுகிறார். இத்தனைக்கும் பின்னணியில் இருக்கும் இஸ்ரேலும் பிற அறபு நாடுகளும் ட்ரம்பையும் கொமைனியையும் அமைதியாக இருந்து வேடிக்கை பார்த்து வருகின்றன.

## பிரிவினைவாதிகளுடன் யெமன் அரசு அதிகார பகிர்வு ஒப்பந்தம்



யெமனில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுக்கும் தெற்கின் பிரிவினைவாதிகளுக்கும் இடையில் அதிகாரப் பகிர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த இரு தரப்பும் தமக்குள் சண்டையிடுவதை தவிர்க்கவே உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் யெமன் ஹூஉத்திக் கிளர்ச்சியாளர்களுடனான போரில் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டணியுடன் இந்த இரு தரப்பும் இணைந்துள்ளன. எனினும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆதரவு அளிக்கும் பிரிவினைவாதிகள் கடந்த ஒகஸ்டில் சவூதி அரேபியா ஆதரவு கொண்ட யெமன் அரச படை மீது தாக்குதல் நடத்தியது. யெமன் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்த உடன்படிக்கை முக்கியமானது என்று ஐ.நா அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பிரிவினைவாதிகள் தெற்கு யெமனில் சுதந்திரத்தை கோரி போராடுகின்றனர். இந்த பகுதி 1990 ஆம் ஆண்டு யெமன் ஒன்றிணைக்கப்படும் முன் தனி நாடாக இருந்த பகுதியாகும். எனினும் அதென் நகரை ஹூஉத்தி ஷியா கிளர்ச்சியாளர்கள் கைப்பற்ற முயன்ற நிலையில் இந்தப் பிரிவினைவாதிகள் ஜனாதிபதி மன்சூர் ஹாதி அரசுடன் கூட்டணி சேர்ந்தனர். இந்நிலையில் எட்டப்பட்டிருக்கும் உடன்படிக்கையின்படி பிரிவினைவாதிகளுக்கு சம இடம் வழங்கப்படும் வகையில் அரசாங்கப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

## பெய்ரூத்தில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம்

அரசாங்கம் சில பொருளாதார சலுகைகளையும் சீர்திருத்தங்களையும் அறிவித்துள்ளபோதும் லெபனானின் தலைநகர் பெய்ரூத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஓயவில்லை. இரண்டு வாரங்களுக்கு மேலாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அங்கு நீடிக்கின்றன. மக்கள் ஆர்ப்பாட்டத்தை அடுத்து லெபனான் பிரதமர் ஸஅத் அல் ஹரீரி பதவி விலகிய போதும் ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்ல.

பெய்ரூத்திலிருந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் துரூசிகள் என லெபனான் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரிவினரும் அரச தரப்பு ஆர்ப்பாட்டத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுவதே அரசுக்கு பெரும் அதிர்ச்சியை வழங்கியுள்ளது.

ஏற்கனவே ஸ்திரமான அரசாங்கத்தைப் பாதுகாப்பது கடினமாக உள்ள நிலையில் மக்கள் கொந்தளிக்கத் தொடங்கியுள்ளமை ஆட்சியாளர்களுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல்

# முஸ்லிம்கள் மீதான திட்டமிட்ட சதி

• லத்தீப் பாரூக்



ஒக்டோபர் 21 ஆம் திகதியுடன் ஈஸ்டர் தாக்குதலுக்கு 06 மாதங்களாகின்றன. இது வரையில் இந்தப் படுபாதகச் செயலுக்குக் காரணமான சூத்திரதாரிகள் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. முஸ்லிம் மத வெறியன் ஸஹ்ரானையும் அவனது சகாக்களையும் நிதியளித்துப் பாதுகாத்த கடந்த மற்றும் தற்போதைய அரசாங்கங்களே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். முஸ்லிம் அமைப்புக்களாலும் தனி நபர்களாலும் பெயர் விபரங்கள் மற்றும் தாக்குதலுக்கான இலக்குகள் தொடர்பில் உரிய இடங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களை வைத்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தச் சோகக் கதையை தடுத்தி நிறுத்தியிருக்க முடியும். ஆனால் இந்த அழிவைத் தடுப்பதில் அரசாங்கம் தவறிழைத்து விட்டது.

இதற்கும் அப்பால், முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வல்ல உட்பட்ட பல வட்டாரங்கள் வெளிப்படுத்தியுள்ள தகவல்களின்படி கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த வேளையில் ஸஹ்ரானுக்கும் அவனது சகாக்களுக்கும் பாதுகாப்பு அலுவலர்களினால் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. அதேபோல மைத்திரி-ரணில் அரசாங்கத்திலும் ஸஹ்ரானைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை உயர்மட்டங்கள் தடுத்து வந்திருக்கின்றன. இந்தச் சம்பவத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை, இதற்கு சர்வதேச சக்திகளே வகை கூற வேண்டும் என கருதினால் மல்கம் ரஞ்சித்தும் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தார். பல அமைச்சர்களும் கூட இது முஸ்லிம்களுக்கு எதிரான சர்வதேசச் சதி எனக் குறிப்பிட்டிருந்தனர். இருந்த போதிலும் இந்த சர்வதேச சக்திகள் பற்றி நாடு இன்னும் அறியாமலேயே இருக்கிறது.

நாட்டின் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் போதெல்லாம் அரசாங்கமும் அதன் சிங்கள மேலாதிக்க பங்காளிகளும் எந்த ஆதாரங்களுமின்றி முழு முஸ்லிம் சமூகத்தின் மீதுமே குற்றம் சுமத்தி வருகின்றனர். அப்போதெல்லாம் அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமய, கலாச்சார, சமூக இலக்குகள் மீது எல்லையற்ற வன்முறைகளை உடனடியாகவே கட்டவிழ்த்து விடுகின்றனர். இந்த வகையில் மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்காக வாக்களித்த 95 வீத முஸ்லிம்களும் கடந்த காலத்தில் ஒரே இரவில் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் மாற்றப்பட்டார்கள்.

முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகச் சித்திரிப்பதற்கு இந்தச் சூழ்ச்சியாளர்கள் அரசியல்வாதிகளையும், சில சிங்கள வர்த்தக நிறுவனங்களையும், பிக்குமாரையும் உள்ளடக்கியிருந்தனர். அவர்களில் முன்னணியில் இருந்த ஒருவரை ஜனாதிபதி சிறையில் சென்று பார்த்து அவரை மன்னித்து விடுதலை செய்து அவரது அலுவலகத்துக்கு அழைத்து ஒன்றாகத் தேநீரும் அருந்தினார். இந்தப் பட்டியலில் உயர் தொழில்வாண்மையாளர்களும் தமது வெறுப்புப் பேச்சு நிகழ்ச்சி நிரலுடன் இணைந்தனர். தொழில் போட்டி காரணமாக டொக்டர் ஷாபிக்கு நேர்ந்த அவலத்தை இதற்கு எடுத்துக் காட்டாக முன் வைக்க முடியும். இந்தச் சூழ்ச்சியின் முக்கிய பாகத்தை வகித்த ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர் மனங்களில் பொய்யையும் ஓரவஞ்சனைகளையும் கட்டவிழ்த்து விஷத்தைக் கக்கின.

எந்தவொரு சாதாரண ஜனநாயகத்திலும் பிரஜைகளைப் பாதுகாப்பது அதனது சாதாரண பொறுப்பாகும். ஆனால் இலங்கையிலும் அதேபோன்று இந்தியாவிலும் சிறுபான்மைக்கெதிரான அரச அனுசரணையுடனான வன்முறைகளின் சூத்திரதாரிகள் ஒருபோதும் நீதியின் முன் நிறுத்தப்படுவதில்லை. ஸஹ்ரானும் அவனுடைய சகாக்களும் முஸ்லிமாக இருந்ததனை முன்னிறுத்தி முஸ்லிம்கள் மீது பழியைப் போடுவதற்காகவே தாக்குதல் திறமையான முறையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் முஸ்லிம் சமூகத்தை அடக்கி, பயங்கரவாதிகளாக்கி ஓரங்கட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

இலங்கையின் ஈஸ்டர் துயரம் - ஆட்டிப் படைக்கும் அரசு அம்பலத்துக்கு வந்த போது என்ற தனது நூலில் கலாநிதி ராஜன் ஹூல் சொல்லவருவதைப் பார்த்தால், 1948 இல் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை பிரஜாவுரிமை அற்றவர்களாக மாற்றியது போல முஸ்லிம்களையும் பிரஜாவுரிமை அற்றவர்களாக்கி நாடற்றவர்களாக மாற்றுவது தான் இதன் இறுதி இலக்காகத் தெரிகிறது. ராஜபக்ஷ பரிவாரங்களின் காட்டு தர்பாரை முடிவுக்குக் கொண்டு வந்து முஸ்லிம்களது மட்டுமன்றி மொத்த நாட்டு மக்களதும் பாதுகாப்பையும் நீதியையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்காக மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கு வாக்களித்து ஆட்சிக்குக் கொண்டு வந்த சமூகத்துக்கு ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்பதை முஸ்லிம் சமூகம் உணர்ந்து கொள்ளவில்லை.

மே 2009 இல் எல்ரிரிஈ உடனான யுத்தம் முடிந்ததும் அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல்வாதிகள் பாடம் படித்திருப்பார்கள் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அதிர்ச்சி அளிக்கும் வகையில் மஹிந்த ராஜபக்ஷ அரசின் கீழ் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வன்முறைகள் தொடங்கி, ரணில் - மைத்திரி அரசாங்கத்திலும் அவர்களது தனிப்பட்ட இலாபங்களுக்காகத் தொடர்ந்தது.

எடுத்துக் காட்டாக, முஸ்லிம்களுக்கு எதிரான கிந்தோட்டை வன்முறைகள் திட்டமிடப்படுவது தொடர்பில் பேராசிரியர் சரத் பொன்சேகா ஜனாதிபதிக்கு ஏற்கனவே அறிவித்திருந்தார். தொடர்ந்து அம்பாறையில் உணவகமொன்றில் பிரச்சினை தலைதூக்கியது. அதனை அடுத்து 2018 மார்ச்சில் கண்டியைச் சூழவுள்ள திகன, அக்குரணை பிரதேசங்களில் முஸ்லிம்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டும் புனித அல் குர்ஆன் பிரதிகள் எரிக்கப்பட்டும் வன்முறைகள் நிகழ்ந்தன. பாதுகாப்புப் படையினரின் கண்முன்னாலேயே இவை அனைத்தும் நடந்தன. இதன் பிறகு தான் ஏப்ரல் 21 இல் ஈஸ்டர் தாக்குதல் நடந்தது.

ஒவ்வொரு முஸ்லிமும் பெண்களும் சிறுவர்களும் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் கசப்புடனுமே எல்லா இடங்களிலும் நோக்கப்பட்டார்கள். வீடுகளில் பயந்து ஒடுங்கிப் போயிருந்த முஸ்லிம் குடும்பங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளால் அச்சத்தில் உறைந்து போனார்கள். வைத்தியாலைக் காவலாளிகளால் மட்டுமன்றி கடைகளிலும் சுப்பர் மார்க்கட்களிலும் முஸ்லிம் பெண்கள் தமது முந்தானைகளைக் களைய நேரிட்டது. சமூகம் தடுத்த போதும் எந்தத் தேவையுமின்றி பள்ளிவாசல்களுக்குள் இராணுவத்தினர் சப்பாத்துக் கால்களோடும் காவல் நாய்களோடும் நுழைந்தார்கள். வுழூவுடனன்றி முஸ்லிம்களே தொடாத குர்ஆன் பிரதிகளை கிழித்தெறிந்தார்கள். அவசர காலச் சட்டத்தின் கீழ் மூன்று வார காலம் நீடித்த இந்த தேடுதல் நடவடிக்கைகளின் போது வீடுகளில் இருந்த கத்திகள் கூட கைப்பற்றபட்டு எடுத்துச் செல்லப்பட்டன.

தேடுதல் நடவடிக்கைகள் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களை ஒத்தவையாக இருந்தன. கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் இந்து பாசிசவாதிகளான ஆர்எஸ்எஸ், பிஜேபி, வீஎச்பி, சிவ சேனா, பாரிங்க தல் தாக்குதல்களை நினைவுறுத்தின.

முஸ்லிம்கள் ஆழமாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் பாதுகாப்புப் பிரிவினருடன் முழுமையாக ஒத்துழைத்தார்கள். முஸ்லிம்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டதன் பின்னர் இனவாதிகள் முஸ்லிம் ஊர்களுக்குள் நுழைந்து வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், பள்ளிவாசல்கள் அனைத்தையும் தாக்கியும் தீக்கிரையாக்கியும் முஸ்லிம்களது பொருளாதாரத்தை முடக்கினார்கள். இவை அனைத்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது பாதுகாப்புப் பிரிவினரின் கண்காணிப்பிலேயே நடந்தது.

முஸ்லிம்கள் நோன்பிருந்த புனித ரமழான் மாதத்தில் அவர்கள் வீடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு வயல்களிலும் காடுகளிலும் தஞ்சம் புகுந்தார்கள். நாத்தாண்டிய, கொட்டராமுல்லையைச் சேர்ந்த மரத்தளபாட வியாபாரியான 49 வயது எம்.எஸ்.பௌஸுல் அமீனுடைய வீடு அவர் நோன்பு துறக்கத் தயாராக இருந்த வேளையில் கல்வீச்சுக்கு இலக்கானது. அமீன் வெளியே வந்து பார்த்த போது அவரது வாகனம் சுக்குநூறாக்கப்பட்டிருந்தது.

"ஐந்து பேர் கொண்ட குழுவொன்று அவரை நோக்கி வந்து வாளால் தாக்கினர். பலத்த காயத்துடன் கீழே விழுந்த அவரது முகத்தில் தொழிற்சாலையில் இருந்த தெரப்பந்தைலத்தை எடுத்து ஊற்றினர் என தனது தந்தையின் அடையாள அட்டையைப் பார்த்துக் கண்ணீர் வடித்த அமீனின் 16 வயது மகன் அஜ்மீர் கூறினார். அவரது இளைய சகோதரர்கள் இருவருக்கும் நடந்ததை புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களது தாய் கலங்கிப் போயிருந்தாள். இன்று அவர்களுடைய நிலைமை என்ன?

பேராசிரியர் திஸ்ஸ விதாரண திஐலன்ட் பத்திரிகையில் மே 18 ஆம் திகதி எழுதிய கட்டுரையில், ஒருங்கிணைக்கப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்களை நடத்துகின்ற அளவுக்கு நவீனமான பயங்கரவாத அலகாக இந்த தீவிர ஜிஹாதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவு. இவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வழிகாட்டல்களும் கட்டளைகளும் வந்திருக்கலாம். ஆனாலும் இது சிங்கள மற்றும் தமிழ்க் கத்தோலிக்க இனங்களுக்கிடையே முஸ்லிம் விரோதப் போக்கினை வளர்ப்பதற்காகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

கருதினால் மல்கம் ரஞ்சித் மற்றும் இந்து பௌத்த தலைவர்களின் தலையீட்டினால் இது மட்டுப்படுத்தப்பட்டது. 1983 இல் நடந்தது போன்றதொரு கலவரத்தை இம்முறை முஸ்லிம்கள் மீது மேற்கொள்வதற்கு ஐ.தே.க. முயற்சிக்கிறது என அவர் குறிப்பிடுகிறார்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகவும் சமூக ஒற்றுமையாலும் ஸ்திரமடைந்திருந்து சுதந்திரம் கிடைத்ததில் இருந்து மூன்றாம் உலக நாடுகளுக்கே முன்னுதாரணமாக விளங்கிய நாட்டை இப்பொழுது இனவாத அரசியலே ஆட்சி செய்கிறது. இந்தியா, மாலைதீவு, சிங்கப்பூர் எல்லாம் இலங்கையை விட பின்தங்கியதாகவே இருந்தன. ஆனாலும் இனவாத அரசியலின் காரணமாக இனங்கள் துண்டாடப்பட்டு இலங்கை இன்று அரசியல் பொருளாதார ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நாடாக மாறியிருக்கிறது. முன்வரக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினர் புறக்கணிக்கணித்து பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நாடு குழப்பத்தில் தள்ளப்பட்டு வருகிறது.

கருதினால் மல்கம் ரஞ்சித் அண்மையில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை அனைத்து வழிகளிலும் அருள்பாலிக்கப்பட்ட ஒரு தீவு. இன,மத, கலாச்சாரங்களுக்கிடையில் வித்தியாசங்கள் இருந்தாலும் அவை நாட்டின் பாரம்பரியத்தை வளர்ப்பதாகவே உள்ளன. இலங்கையனாகப் பிறப்பது ஓர் அபூர்வமான பாக்கியமே. சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் எல்லாம் இங்கு பல நூற்றாண்டுகளாக ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் கூட சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களின் சராசரி மக்களிடையே இந்தப் புரிந்துணர்வு நிலவுகின்றது. இந்தப் பெறுமானங்களையெல்லாம் இன அரசியலே அழித்து விடுகிறது.

இப்பொழுது நாட்டுக்குத் தேவைப்படுவதெல்லாம் நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்ற, சகல இனங்களையும் ஒன்றாகப் பிணைத்து நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கின்ற அரசியல் குழப்ப நிலைகள், இன அரசியல், பொருளாதார வீழ்ச்சி, சமூகப் பிரச்சினைகளில் இருந்து நாட்டை விடுவிக்கக் கூடிய சிங்களத் தலைவர் ஒருவரே. இன மத வேறுபாடின்றி சகல மக்களினதும் சுதந்திர காலத்திலிருந்தான எதிர்பார்ப்பு இதுவாகத்தானிருக்கிறது.

## தேசிய மக்கள்... (01 ஆம் பக்கத் தொடர்)

மொட்டுக் கட்சியின் ஒரு நாள் செலவை விடவும் மூன்றில் ஒரு பங்கு குறைவான தொகையை அநுர குமார திசாநாயக்கவை வேட்பாளராகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி செலவழித்துள்ளது. அவர்கள் தேர்தலுக்கென ஒக்டோபர் 31 வரை செலவழித்த தொகை ஒரு கோடி 10 இலட்சம் ரூபாவாகும். சஜித் பிரேமதாசவை வேட்பாளராகக் கொண்ட புதிய ஜனநாயக முன்னணி 37 கோடி ரூபாவை செலவழித்துள்ளது. தாம் மதிப்பிட்ட அளவை விட இது அதிகமாகவும் இருக்கலாம் எனவும் நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதற் தடவையாக செலவினைக் கணக்கிடும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரிய போதும் எந்தவொரு கட்சியும் தம்முடன் ஒத்துழைக்கவில்லை எனவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

## தேர்தலில்...

(01 ஆம் பக்கத் தொடர்)

அவதானிக்கப்பட்டதாகவும், இவர்களது கட்சிகளின் செயலாளர்கள் பிரதான இரு வேட்பாளர்களின் பிரசார மேடைகளில் உரையாற்றியிருப்பதாகவும் தெரிவித்த அவர், இந்த 13 வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சிகளின் பதிவு நிராகரிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

35 பேர் தேர்தலில் போட்டியிடுவதால் ஆணைக்குழுவின் பணிகள் அநாவசியமாக அதிகரித்துள்ளன. இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு இனிவரும் காலங்களில் கட்டுப்பணத் தொகையை அதிகரிக்கச் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வெளிநாட்டுக்...

(01 ஆம் பக்கத் தொடர்)

ஜூன் 2019 இல் சீனாவிடம் இருந்து மத்திய அரசு பெற்ற கடன் 9.1 வீதமாக இருந்த போதிலும் அரச நிறுவனங்களுக்கு சீனா நேரடியாக வழங்கிய கடனினால் இந்த வீதம் அதிகரித்துள்ளது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் பொதுக் கடனில் 12.7 வீதம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும், 10 வீதம் ஜப்பானுக்கும் 9.5 வீதம் உலக வங்கிக்கும் உரியதாகும். இந்த வகையில் மொத்த வெளிநாட்டுப் பொதுக்கடனில் அதிகூடிய பங்கு சீனாவுக்குரியதாகும்.

## தேசிய பாதுகாப்பு... (01 ஆம் பக்கத் தொடர்)

வளர்த்து விட்டு தற்பொழுது தேசிய பாதுகாப்புத் தொடர்பில் இவர்கள் எக்காளமிடுகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கலாநிதி தம்பர அமில ஹிமி ஊடகங்களுக்கு தகவல் குறிப்பிடும் போது, கோதாவின் தேர்தல் பிரச்சாரம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடனேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. குண்டுத் தாக்குதல் நடந்த மறுதினமே அவர் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்து விட்டார். ஸஹ்ரான் உட்பட அவரது குழுவினருக்கு கோத்தாபய சம்பளம் கொடுத்து உதவியுள்ளார். இது அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான முன்னாயத்தமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

சஹ்ரானுடைய பயங்கரவாதக் குழுவினருக்கு சம்பளம் வழங்கியதனை பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வல்லயும் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றின் போது ஒப்புக் கொண்டிருந்தார்.

## குற்றவாளிகளுக்கு... (11 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் வன்முறை தொடர்ச்சியாக நடைபெறுவது கவலை அளிக்கிறது. தொடர் குற்றங்களுக்கு தண்டனை விலக்களிக்கப்படுவதை சர்வதேச சட்டத்துக்கிணங்க நிறுத்தும் வரை, அந்த வரலாற்றை இலங்கையால் முறியடிக்க முடியாது என்பது உறுதி ".

கிறிஸ்டியன் டுடே மகசின் இவ்வாறு குறிப்பிடுகிறது. இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சிறுபான்மை மீது இலங்கையில் தாக்குதல் நடத்தப்படுவது புதிய விடயமல்ல. 2000 இலிருந்து அதிலும் குறிப்பாக சிவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 2009 இலிருந்து மத சகிப்பின்மை இந்த நாட்டில் அதிகரித்து வருகிறது. மத வெறுப்பினால் தூண்டப்பட்ட வன்முறைச் செயற்பாடுகள் தண்டனை விலக்களிக்கப்பட்ட சூழலில் பலமாக ஊன்றப்பட்டுள்ளன. பௌத்த தேசியவாதிகளைக் கட்டுப்படுத்துவதில் அரசுகள் தயக்கம் காட்டி வருகின்றன.

மத பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் பற்றிய புள்ளிவிவரங்கள் பெரும்பாலும் மறுக்கப்படுகின்றன அல்லது புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நிலைமை ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் தொடர்பில் 2014 இல் அது நிறைவேற்றிய தீர்மானத்தில், இலங்கையின் இந்து, முஸ்லிம் கிறிஸ்தவ சிறுபான்மை மீது இலங்கையில் எழுச்சி பெற்று வரும் தாக்குதல்கள் பற்றிய முன்னெச்சரிக்கையொன்றை விடுத்திருந்தது.

உண்மைதான். அரசாங்கத்தின் அலட்சியமும் தண்டனை விலக்களித்தல் போக்கும் தான் ஈஸ்டர் தாக்குதலை நடத்த இடமளித்தது. இந்த ஈஸ்டர் தாக்குதலை சிங்களத் தேசியவாதத்துக்கு தூபமிடுவதற்காக கோத்தாபய பயன்படுத்துவது வெட்கக் கேடானது. இது தொடர்பில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்த கருதினால் மல்கம் ரஞ்சித், மொத்தமானதொரு அலட்சியம் என இதனை வர்ணித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களை அரசாங்கம் கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும். மத மற்றும் நம்பிக்கைளுக்கான சுதந்திரம் மேம்படுத்தப்பட்டு அனைத்து இலங்கையர்களுக்கும் அது கிடைக்கச் செய்ய வேண்டும். வன்முறைகளுக்கு எண்ணெய் வார்க்கின்ற தண்டனை விலக்களிப்புக் கலாச்சாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அடுத்து வருகின்ற ஜனாதிபதியின் இதயமாக மனித உரிமைகள் இருக்க வேண்டும். அவரது அரசாங்கம் நீதியை நிலைநாட்டுவதிலும், பாதிக்கப்பட்ட வர்களை பராமரிப்பதிலும், மனித உரிமை நியமங்களை மேம்படுத்தும் வகையில் சட்டங்களையும் நடைமுறைகளையும் சீரமைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். முன் செல்வதற்கான பாதை இப்படித்தான் அமைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளுக்கு தண்டனை விலக்களிக்காத தலைவர் வேண்டும்

• லுக்மான் ஹரீஸ்

மிருகங்களால் மட்டுமே செயற்படுத்த முடியுமான தாக்குதல்களை நடத்தியவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களை கருணை காட்டாமல் தண்டனைக்கு உட்படுத்துமாறு கருதினால் மல்கம் ரஞ்சித், ஆறு மாதங்களுக்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதல் நடந்த வேளையில் அரசாங்கத்தைக் கேட்டிருந்தார். உலக நியமங்களுக்கு எதிரான இந்தக் காட்டுமிராண்டித் தாக்குதலை உலகத் தலைவர்களும் சமயத் தலைவர்களும் கண்டித்திருந்தனர். தாக்குதல்கள் ஓரளவு உள்நாட்டு யுத்த காலத்தை ஒத்திருந்தன. ஆனாலும் அண்மைக் காலங்களில் ஐஸ் அமைப்பினால் உலகின் பல பாகங்களிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களின் எதிரொலியாக இது அமைந்திருந்ததாக ஆரம்ப கட்ட புலனாய்வுகள் சுட்டிக் காட்டின.

தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை கையாள்வதில் பெருமளவில் பலவீனம் காணப்பட்ட நிலையில் ஐஸ் பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களைத் தேடி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் ஆயுதப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். ஆறு மாதங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நீதிக்காக கண்ணீர் வடிக்கும் நிலையில், இந்த அவல நிலைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய தற்போதைய அரசாங்கத்தையும் முன்னைய அரசாங்கத்தையும் இந்தத் தேர்தல் காலத்தில் மக்கள் பூஜித்து வருகின்றனர். சூடுபிடிக்கும் தேர்தலுக்கு முன்னால் மக்களின் துயரக் கதைகள் மறக்கடிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புச் சேவையில் பாரிய பலவீனத்தை இந்தப் படுகொலை எடுத்துக் காட்டியது. பாராளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை இதனை உறுதிப்படுத்துகிறது. தாக்குதலைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதற்கான ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டதாகவும் இவை தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அறிக்கை தெரிவிக்கிறது. இந்த விடயத்தில் அரச புலனாய்வுச் சேவையின் (SIS) பணிப்பாளருக்கு பெரும் பங்கிருக்கிறது.

அதேபோல பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானி (CNI), இராணுவ புலனாய்வுப் பணிப்பாளர் (DMI) ஆகியோரும் இந்த விடயத்தில் தவறிழைத்துள்ளனர் என அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. இவர்கள் அனைவருக்கும் போதுமான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தும் தாக்குதலைத் தடுக்கவோ தாக்குதலின் .பாதிப்பைக் குறைக்கவோ இவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

பாரிய அளவிலான பயங்கரவாதத் தாக்குதல்கள் உயிர்களை அழிக்கின்றன. அதேபோல அவை அரசியல் கவிழ்ப்புக்களுக்கும் காரணமாகின்றன. ஈஸ்டர் தாக்குதல் இதற்கு விதிவிலக்கல்ல. சூத்திரதாரிகளின் பாரிய இலக்கு எதுவாக இருந்தாலும் அவர்களின் செயற்பாடுகள் ஓர் அரசியல் அதிர்வலையை நாட்டில் ஏற்படுத்தியிருப்பதை மறுக்க முடியாது. அரசியல் எதிர்வினைகள் எல்லாம் பெரும்பாலும் உடனடி நிகழ்வுகளாகவிருந்தன. தாக்குதல் நடந்த சில மணி நேரங்களிலேயே அரசாங்கத்தின் உள்வீட்டுச் சண்டை அம்பலத்துக்கு வந்தது. ஒக்டோபர் 2018 க்குப் பின்னரான ரணில் - மைத்திரி பிளவு இந்தப் பலவீனத்தில் தாக்கம் செலுத்தியிருப்பதை புரிந்து கொள்ள முடியுமாகவிருந்தது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கையை மக்கள் கொலைக் குற்றமாகவே கருதினர்.

ரணிலின் கூட்டாளிகள் அனைவரும் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக மைத்திரியை குற்றம் சாட்டினர். தாம் இது பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை என அவர்கள் கூறினர். உண்மையிலேயே இது சிம்மாசனத்துக்கான ஆட்டம். இது ஒரு அரசியல் முறை. இந்த முறையில் வன்முறையும் முரண்பாடுகளும் சிலவேளை யுத்தமும் சமாதானமும் விரிந்ததொரு போரின் பாகங்களாக அமைகின்றன. அரசாங்கத்தின் இந்தச் சண்டையை, அரசின் பலவீனத்திலிருந்து அரசியல் லாபம் பெற்ற மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்த வகையில் இலங்கையின் குழப்பமான அரசியலும் வரலாறும் குண்டு வெடிப்பு மற்றும் அதற்குப் பின்னரான நிலைமைகளினால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச சர்ச்சைகள் குழுவின் (ICG) அறிக்கையில் அலன் கீனன் குறிப்பிடுவது போல, "சிறந்த முறையில் இயங்குகின்ற தேசிய அரசாங்கமொன்று ஈஸ்டர் அட்டூழியங்களை முறியடித்திருக்க முடியாது தான். ஆனாலும் இங்கு உயர் மட்டங்களின் அரசியல் மற்றும் தனிப்பட்ட சண்டைகளினால் தான் தாக்குதலைக் கண்டறிந்து தடுப்பதிலான பாதுகாப்புப் பிரிவின் இயலுமை பலவீனமடைந்தது. அரச அதிகாரிகளுக்கும் கொலையாளிகளுக்கும் இடையிலான கூட்டுச்சதி தொடர்பான விதிகளின்படி, ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழ், சில இராணுவப் புலனாய்வு அதிகாரிகள், பல்வேறு தௌஹீத் குழுக்களுடனும் துப்புக்களை பெறுவதற்காகவும் தீவிர பௌத்த குழுக்களின் கிளர்ச்சிகளுக்காக இலக்குகளை வழங்குகின்ற ஆத்திரமூட்டும் முகவர்களாகவும் நெருங்கி வேலை செய்தமை அவர்களுக்கு மேலதிக பலத்தை வழங்கியுள்ளது."

முன்வருகின்ற ஜனாதிபதித் தேர்தல் வளர்ந்துவரும் துருவமயமாதலை சற்றே அதிகரிக்கச் செய்திருக்கின்றது. ராஜபக்ஷ முகாமைச் சேர்ந்தவர்கள் இந்தப் பதற்றத்தைத் தக்க வைத்துக் கொண்டு அதனைத் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்துவது ஆச்சரியமானதொன்றல்ல. ஈஸ்டர் குண்டு வெடித்த சில நாட்களிலேயே கோதாபய ராஜபக்ஷ தான் ஜனாதிபதி வேட்பாளராவதற்கான ஆர்வத்தை அறிவித்து விட்டார். இப்பொழுது அவரே நாட்டின் பாதுகாப்புப் பற்றி தேர்தல் மேடைகளில் பேசி வருகிறார். மறுபுறத்தில் கருதினால் மல்கம் ரஞ்சித் சொல்லி வருகின்ற தாக்குதலின் பின்னால் உள்ள பாதுகாப்புப் பலவீனங்கள் பற்றி புலனாய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்துகிறார்.

எப்படி இருந்தாலும் ஸஹ்ரான் போன்ற முஸ்லிம் தீவிரவாதிகளை தகவல் பெறுவதற்காக நியமித்து முன்னைய மஹிந்த அரசாங்கம் அவர்களுக்குச் சம்பளமும் வழங்கியதாக கெஹெலிய ரம்புக்வெல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஏற்றுக் கொண்டார். இவ்வாறான கூற்றுக்களும் நல்லாட்சி அரசாங்கத்தின் கடுமையான தோல்வியும் யுத்தத்துக்குப் பின்னரான அரசாங்கங்களிலும் அரசியல் பிரிவுகளிலும் மக்களுக்கு பலமான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தின. யுத்தத்துக்குப் பின்னர் முஸ்லிம் விரோத செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்ட ஞானசார தேரரை, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமை இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். விடுதலையான பின்னர் இவர் மற்றுமொரு வெறுப்புச் செயற்பாட்டாளரான ரதன தேரோவுடன் இணைந்து ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான காலத்தில் முஸ்லிம்களை அச்சுறுத்தத் தொடங்கினார். இது கடைசியில் முஸ்லிம் அமைச்சர்களும் ஆளுநர்களும் பதவி விலகுவது வரை நீடித்தது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பொதுவெளியிலும் பரவலாகத் தொடங்கின. அமைச்சர் ரிஷாட், ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ், அஸாத் ஸாலி ஆகியோர் ஈஸ்டர் தாக்குதலைப் பாதுகாத்தார்கள் அல்லது அதற்கு உதவினார்கள் என்ற சிங்கள 'தீவி[illegible] குற்றச்சாட்டை முன்வைத்து [illegible] சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். பொலிசாரின் விசாரணைகளின் பின்னர் இதில் உண்மை இல்லை எனக் கண்டறியப்பட்டது.

ஜம்இய்யதுல் உலமா உட்பட்ட சமயத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் ஸஹ்ரானுடைய தீவிரவாதம் தொடர்பிலும் அது வன்முறையாக வளர்வது தொடர்பிலும் உரிய இடங்களுக்கு அறிவித்த போதும் தேவையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனாலும் உள்ளூர் முஸ்லிம்களை மௌனமான பங்காளர்களாகவும், அமைதியான ஆதரவாளர்களாகவும் அனுதாபிகளாகவும் சிலர் எழுதத் தலைப்பட்டனர். இருந்த போதிலும் சர்வதேச சர்ச்சைகள் குழுவின் அறிக்கைகள் இந்தக் கோணத்தை சவாலுக்குட்படுத்தியது.

முதலில், தனது கூர்மையான சமய போதனைகளால் முஸ்லிம் இளைஞர்களை வன்முறையை நோக்கி இழுத்தெடுத்த சமயத் தலைவராக ஸஹ்ரானை எதிர்பார்ப்பது கஷ்டமானது. இரண்டாவதாக, ஈஸ்டர் தாக்குதலுக்கு இட்டுச் செல்லக் கூடிய அளவிலான வன்முறையையும் முஸ்லிம் தீவிரவாதத்தையும் புரிந்து கொள்வதற்கு வஹாபிஸத்தைத் தாண்டிய விரிந்த பார்வை தேவை. மூன்றாவது, முஸ்லிம் தலைவர்கள் போருக்குப் பிந்தைய காலத்தில் அவர்கள் எதிர்கொண்ட விரோதப் போக்கைக் கருத்தில் கொண்டு தங்கள் சொந்த சமூகங்களின் கொள்கை நடைமுறைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருக்கலாம்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான காலப்பகுதியில், இனங்களுக்கிடையே விரிசலைத் தூண்டி தேவாலயங்களில் தமது சொந்தத் தாக்குதல்களையும் மேற்கொண்ட தீவிர பௌத்த தேசியவாதிகள், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நல்லாட்சி அரசாங்கங்களில் உச்சத்தை அடைந்திருந்த முஸ்லிம் விரோத செயற்பாடுகளை மீளவும் ஒழுங்குபடுத்தும் வகையில் முன்னைவிட வீரியமாக கிளர்ந்தெழுந்தனர். ஸஹ்ரான் போன்ற தாக்குதல்தாரிகள் இலங்கை அரசியலில் அமைதியான பாத்திரத்தை வகிக்கின்ற சமூகத்தின் ஓரங்கட்டப்பட்ட நடிகர்களாக இருந்தாலும், இனவாத அரசியல்வாதிகளும் சிங்களத் தேசியவாதிகளும் மொத்த முஸ்லிம் சமூகத்தையும் இழிவுபடுத்தவும் துன்புறுத்துவதற்குமான தமது செயற்பாடுகளை நியாயப்படுத்த இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். வளர்ந்து வரும் "தீவிரவாதத்துக்கு" ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளியாக்க அவர்கள் முனைந்தனர்.

ICG அறிக்கையில் அலன் கீனன் சொல்வது போல, "பொருளாதார நிலையங்களைப் புறக்கணித்தல், ஊடக அழுத்தம், திட்டமிடப்பட்ட வன்முறைகள் போன்ற யுத்தத்துக்குப் பின்னரான முஸ்லிம் எதிர்ப்புச் செயற்பாடுகளை அதிகரிக்கும் வகையில் அரசாங்கம் சிங்கள வன்முறைக் குழுக்களை தண்டனைகள் வழங்குவதில் இருந்து பாதுகாத்தது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிந்திய மாதங்களில் முஸ்லிம்களது வர்த்தக நிலையங்களைப் புறக்கணித்தல், ஹிஜாப் அணியும் பெண்கள் மீதான [illegible] [illegible] தொடர்பிலான சிங்கள தேசியவாதிகளின் ஊடகப் பிரச்சாரங்கள் எல்லாம் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன. மே மாத நடுப்பகுதியில் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீதும் பள்ளிவாசல்கள் மீதும் இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் நாடு முழுவதும் பரவி தமிழர்களின் போராட்டத்துக்குக் காரணமான 1983 ஜூலைக் கலவரம் போல ஆகிவிடுமோ என்ற அச்சத்தை வளர்த்தது. ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சிறிய குழுவினரின் அங்கத்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் அல்லது கைதுசெய்யப்பட்டு விட்டார்கள் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிட்டிய விரைவில் ஜிஹாதிகளின் தொடரான தாக்குதல் ஒன்று நடக்கும் என்ற எதிர்பார்ப்பை மக்கள் விட்டுவிட்டார்கள்.

ஆனாலும் பாதுகாப்புச் சேவைகளில் உள்ள குளறுபடிகள் தொடர்ந்தும் கவனிக்கப்படாமல் விடப்பட்டதனாலும், நாட்டின் சட்டத்தை மதிக்கும் முஸ்லிம் சமூகத்தின் மீது அறியாமையினாலோ அல்லது அலட்சியத்தினாலோ சிங்கள அரசியல் மற்றும் சமயத் தலைவர்கள் விதைக்கின்ற நச்சு எண்ணங்களினாலும் இலங்கை எப்படியேனும் பயங்கரப் பாதை ஒன்றை நோக்கி சரிந்து கொண்டு செல்கிறது. இதிலிருந்து மீள்வதற்கு, இனங்களுக்கிடையிலான பதற்றத்தை தணிப்பதற்கு, சிதைந்து போயுள்ள நாட்டைப் பிணைக்கின்ற முடிவுறுத்தப்படாத முக்கிய வேலையில் கவனம் செலுத்துவதற்கு தற்போது காலம் கடந்து விட்டது."

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து வருகின்ற பொறுப்பற்ற செயல்கள் பற்றி பல அரசியல்வாதிகளும் குறிப்பிட்டிருந்தார்கள் எனக் குறிப்பிடும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை, அரசியல்வாதிகளதும் மதத் தலைவர்களதும் வெறுப்பையும் இனவாதத்தையும் தூண்டக் கூடிய பேச்சுக்கள் மிகவும் பயங்கரமானவை, இவை பற்றி சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதனைச் செயற்படுத்தாமல் இருப்பது தண்டனை நிவாரணத்தை வளர்ப்பதோடு இலங்கையில் வெறுப்பையும் பயத்தையும் வளர்ப்பதற்கு அது பங்களிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

உண்மையிலேயே ராஜித்தவையும் மங்களவையும் தவிர நல்லாட்சி அரசாங்கத்தின் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்துத் தலைமைகளும் முஸ்லிம்கள் மீதான ஆவேசமான அரசியலையும் வாய் மூலத் தாக்குதல்களையும் சவாலுக்கு உட்படுத்தி முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தவறிழைத்துள்ளன என்பது கவலைக்குரியதாகும்.

அலன் கீனன் தனது ICG அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டும் போது, "நாட்டின் முஸ்லிம்கள் மீது காட்டப்படும் இந்த மந்த நிலை தெளிவான படமொன்றைக் காட்டுகிறது. முஸ்லிம்களது வாக்குகளால் என்றுமே பயன்பெற்று வருகின்ற ஐக்கிய தேசியக் கட்சி, மஹிந்த மற்றும் கோத்தாவுடைய பக்கம் தனது சிங்கள வாக்குகள் சரிந்து விடுமோ என்ற பயத்தினால் முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரத்துக்கு எதிராக பலமான குரல் எழுப்பத் தயங்குகிறது. ஆனால், சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவது போல, இப்படிச் செய்வதனால் அவர்கள் முஸ்லிம்களின் வாக்குகளையே இழந்து விடுகிறார்கள். முன்வரும் தேர்தலில் முஸ்லிம்களில் கணிசமானோர் வாக்களிக்காது விடுவதற்கு அல்லது வாக்களிப்பதற்காக மஹிந்த தரப்பை தெரிவு செய்வதற்கு இது வழியமைக்கும்."





அரசாங்கத்தின் இவ்வாறான அலட்சியப் போக்கு முஸ்லிம் சமூகத்தின் மீது சிங்கள வன்முறையாளர்கள் பாரிய தாக்குதல்களை நடத்தக் காரணமாகியது. மே 2019 இல் புத்தளம், குருநாகல, கம்பஹா மாவட்டங்களில் முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளிவாசல்கள் அனைத்தும் தாக்குதலுக்கு உள்ளாகின. இது ஈஸ்டர் தாக்குதலின் உடனடி விளைவாக நிகழ்ந்ததல்ல. யுத்தத்துக்குப் பின்னரான முஸ்லிம் விரோத பிரச்சாரங்களினால் நீண்ட காலமாக நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதன் விளைவாக இது அமைந்தது. புரளிகளும் அனாமதேயக் குற்றச்சாட்டுக்களும் பிரதான மற்றும் சமூக ஊடகங்களினூடாகப் பரப்பப்பட்டன. இது பயத்தை மூட்டுவதற்கும், ICCPR சட்டத்தின் கீழான தன்னிச்சையான கைதுகளுக்கும் காரணமாகியது. தர்மச்சக்கரத்தை அணிந்திருந்ததாகக் கூறி மஸாஹிமா என்ற பெண் அநியாயமாக தடுத்து வைக்கப்பட்டார். டொக்டர் ஷாபி சிங்களப் பெண்களின் கருவளத்தை கொள்ளை அடித்தார் என்று பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டார். டொக்டர் ஷாபி சிங்கள இனத்தை அழிக்கிறார் என ரதன தேரர் ஊடகங்களில் பொய்ப்பிரச்சாரம் செய்தார். அமைச்சர் ரிஷாதுக்கு பயங்கரவாதிகளுடன் தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டினார். பின்னர் அவர் மீது குற்றமில்லை என அமைச்சர் ரிஷாத் சீஐடி மற்றும் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதலுககுப் பின்னர் முஸ்லிம் கடைகளைப் புறக்கணிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதால் முன்னைய முன்னெடுப்புக்களை விட முஸ்லிம்கள் அதிகமாகவே இம்முறை பாதிக்கப்பட்டனர். அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் முஸ்லிம்களின் பரவலுக்கு எதிராக சிங்கள பௌத்தர்களை ஒன்றிரளுமாறு பொதுவெளியில் விடுத்த கோரிக்கை முன்வரும் தேர்தலில் ராஜபக்ஷாக்களை மீளவும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கான ஒப்புதல் அளிப்பதாக இருந்தது. இது இந்தச் செயற்பாடுகளுக்குப் பின்னால் உள்ள அரசியலை எடுத்துக் காட்டியது. முஸ்லிம்களின் ஆடைகளுக்கு எதிராக ஒருமித்த பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டு அவசரகால நிலையைப் பயன்படுத்தி நிகாப் தடை செய்யப்பட்டது.

அலுத்கமவிலிருந்து மினுவங்கொட வரை முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களுக்கு தண்டனை விலக்களிக்கப்படுவது ஒரு போற்றத்தக்க சிந்தனையாக மாறியுள்ளது. இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிடும் பொழுது, இலங்கையில் இன மற்றும் மத சிறுபான்மையினருக்கு எதிரான விரோதம்

(பக்.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையின் மையத்தை புரிந்து கொள்வோம்

முனைவர் ஜெ. ஹாஜாகனி

அமைதிப் பூங்காவாய் இருக்க வேண்டிய அகிலத்தின் பல பகுதிகள், அவதிகளின் காடாகி அவலங்களின் விளைநிலமாய் ஆகிவருவதன் காரணம் என்ன? நெறிமிக்கப் புரிதலும் நேர்வழி காட்டலும் இல்லாததன் விளைவே இந்தப் பொல்லாத சூழல்.

'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய தால் மகாகவி பாரதியை நாம் பயங்கரவாதி என்று கூற முடியுமோ? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று தீக்கனல் தகிக்கப் பாடிய அந்த மகாகவியைத் தீவிரவாதி என்று தீர்ப்பிட முடியுமோ? அது மக்களின் மீது மாபெரும் அன்பு கொண்ட ஒரு மகத்தான கவிஞனின் அறச்சினம் அல்லவா? பசிக் கொடுமையால் துடிதுடிக்கும் மானுடத்தின் மீதான பரிவுணர்வுதான் 'ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற வெறிச்சொல்லாக வெளிப்படுகிறது. பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் கொடுமையைக் குறித்த பெருங்கோபமும், ஒடுக்கப்படும் பெண்களின் மீதான பாசமும்தான் 'மடமையைக் கொளுத்துவோம்' என்று கோபாவேசம் கொள்கிறது.

பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆழமான புரிதலற்ற அரைவேக்காடு எழுத்தாளர் ஒருவர், 'பழங்காலத்தில் மகாகவி பாரதியார் என்றொரு பயங்கரவாதி வாழ்ந்தார். கோபாவேசம், நையப் புடை என்றெல்லாம் அவர் மக்கள் மத்தியில் பயங்கரவாதத்தை வளர்த்து வந்தார்'' என்று எழுதினால் அது எவ்வளவு அவலகரமானதோ, அவ்வாறே இன்று பலர் அமைதியையே தனது அடிப்படையாகக் கொண்ட இஸ்லாம் மார்க்கத்தை பயங்கரவாத மதமாகக் காட்டிவிடப் பெரும் பாடுபட்டு வருகின்றனர்.

'இஸ்லாமிய அடிப்படை வாதம்' என்ற சொல் இன்று உலகின் அச்சுறுத்தல் மிக்க கருத்தாக்கமாய் ஆக்கப்பட்டுள்ளது. சில்ம், சலாம் ஆகிய வேர்ச் சொற்களிலிருந்து பிறக்கும் இஸ்லாம் என்ற சொல்லுக்கு 'அமைதி மார்க்கம்' என்று பொருள். அமைதியையும், அன்பையும், உலக மானுடர் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்று கூறும் ஒப்புரவையும் ஓங்கி ஒலிக்கும் கொள்கை, எப்படி அதி பயங்கரவாதத்துக்கு அடையாளமாக முடியும்?

அன்பு நெறியை அடிப்படையாகக் கொண்ட மார்க்கத்துக்கு உலக அளவில் பயங்கரவாத அவப்பெயர் உண்டாகி இருப்பதற்கு ஏகாதிபத்திய எடுபிடி ஊடகங்களும், ஆதிக்க வெறி கொண்ட அரசுகளும்தான் முதன்மைக் காரணம் என்றபோதும் இஸ்லாமை இழிவு செய்யும் வகையில், அரபு பெயர் தாங்கிய சில பயங்கரவாத இயக்கங்களும், சில தனி நபர்களும் அவர்தம் சிந்தனைகளும் மற்றுமொரு முக்கியக் காரணம் என்பதை மறந்து விடவோ மறுத்து விடவோ முடியாது.

பலஸ்தீனத்தில் காஸா பகுதியில் பயங்கரவாத இஸ்ரேல் இராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி, மண்ணின் மைந்தர்களான பலஸ்தீன முஸ்லிம்களுக்கு சொல்லொணாத் துயரங்களைத் தந்தபோது அடைக்கலம் தந்ததோடு, ஐவேளைத் தொழுகையையும் பாங்கோசையோடு நிறைவேற்ற அனுமதியளித்தவை அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள்தாம். ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த இரண்டாம் வளைகுடாப் போரை 'சிலுவை யுத்தம்' என்று அமெரிக்க அதிபர் புஷ் வர்ணித்தபோது, அதை வன்மையாகக் கண்டித்தவர் உலகக் கிறிஸ்தவர்களின் தலைவராக இருந்த போப் ஜான்பால்.

இலங்கை தேவாலயத்தில் அண்மையில் ஈஸ்டர் பண்டிகையின்போது குண்டுவெடிப்புகளை அரபுப் பெயர் தாங்கிய மனித மிருகங்கள் நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து இஸ்லாமிய அடிப்படைகளின் மீது மிகப் பெரிய அவதூறு யுத்தம் நடத்தப்பட்டது. வெறி பிடித்த இந்த மனித மிருகங்களுக்கு எதிராக இலங்கை முஸ்லிம்கள் அந்த நாட்டு அரசிடம் மனு கொடுத்தபோது அமைதியாக இருந்துவிட்டு, இப்படி ஒரு சம்பவம் நடக்கட்டும் என இலங்கை அரசு ஏதோ காரணத்துக்காக எதிர்பார்த்திருந்ததை அறிஞர்கள் பலரும் அம்பலப்படுத்தினர்.



ஆழிப் பேரலையின்போதும், அதிபயங்கர வெள்ளத்தின்போதும், சாலை விபத்துகளின் போதும், தீ விபத்துகளின்போதும் அவசரமான குருதித் தேவைகளின்போதும், ஒரு பெருங்கூட்டம் ஓடோடிச் சென்று ஜாதி, மத, இன பேதங்களை எல்லாம் கடந்து உதவி வருகிறது. ஏராளமான அவசர உதவி ஊர்திகள் உயிர் காக்கும் பணியில் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தன்னுயிரைப் பணயம் வைத்து பிற உயிர்களைப் பாதுகாக்க அந்தக் கூட்டத்துக்கு எந்த மார்க்கம் உந்துசக்தியாக இருக்கிறதோ, எந்த அடிப்படைவாதம், பிறர் நலம் பேணுவதே இறைவழிபாடு என்று சொல்லித் தருகிறதோ, அதே மார்க்கமும், அந்த அடிப்படைவாதமும் பயங்கரவாத அடையாளமாய் எப்படி ஆக்கப்படுகிறது, எப்போது ஆக்கப்படுகிறது என்று சிந்திக்க வேண்டும்.

அரபுப் பெயர் தாங்கிய கும்பலோ, தனிமனிதனோ அடாத செயல்களைச் செய்து அகிலத்தை அதிர வைக்கும்போதுதான் இந்த அவலம் நிகழ்கிறது. ஆன்மிகமும், மதவெறியும் நேரெதிரான நிலையைக் கொண்டவை அனைத்து மக்களையும் சொந்தமாகக் கருதி, ஒரு துயர் நேர்ந்தால் ஓடோடிச் சென்று உதவ உந்து சக்தியாக உதவுவது ஆன்மீகம். மானுடத்தைக் கூறுபோட்டு கடவுளின் பெயரால் கலவரங்களை நடத்தத் தூண்டுவது மதவெறி.

தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொடுமைக்கு எதிராக மக்களை அணி திரட்டியபோது, அல்லாஹ்வின் பெயரால் உறுதி மொழி எடுத்துக் கொண்ட முஸ்லிம்களால்தான் தன் மனதில் மிகப் பெரிய தாக்கம் ஏற்பட்டு, அகிம்சை வழியின் மீது மிகுந்த பற்றுறுதி ஏற்பட்டதாகக் குறிப்பிடுகிறார் மகாத்மா காந்தி. திருமறை குர்ஆனும், அதன் விரிவுரையாக அமைந்த இறைத் தூதர் நபிகள் நாயகத் தின் வாழ்வும், வன்முறையற்ற வாழ்க்கை முறையையே வலியுறுத்துகின்றன. இந்த அடிப்படையிலிருந்து மெல்ல மெல்ல விலகி, தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகளை வன்மங்களை, மார்க்கத்தின் பெயரால் பரப்பிய மதிகேடர்களே, அறப் பிரிவுகளுக்குக் காரணமானவர்கள் ஆவர்.

அமைதி மார்க்கத்தின் அடிப்படைத் தத்துவத்துக்குத் திரும்புவதன் மூலமே எரியும் இந்த வெறிகள் மறையும் என்பது திண்ணம். 'ஒரு தீமையைக் கண்டால் அதை உங்கள் கைகளால் தடுத்து நிறுத்துங்கள்; அது இயலவில்லையெனில் நாவால் தடுங்கள்; அதுவும் இயலாத நிலையில் அந்தத் தீமையை மனதால் வெறுத்து ஒதுங்கி விடுங்கள்' என்று இறைத் தூதர் நபிகள் நாயகம் நவின்றார்கள். 'எது நடந்தாலும் எனக்கென்ன?' என்ற மனோ பாவம் இன்றைய நுகர்வுக் கலாசாரத்தின் நுகத்தடி யில் சிக்கிய மனிதர்களிடையே வேகமாக வளர்ந்து வருகிறது.

தெருவில் இருவர் சண்டையிட்டால் இருபது பேர் அதைத் தடுப்பதற்கும், சமாதானப்படுத்துவதற்கும் விரைந்தோடி வருகிற நமது பண்பாடு மறைந்து, பட்டப் பகலில் நட்ட நடு வீதியில் வெட்டிக் கொலை செய்தாலும் பாராமல் போகிற சுயநலப் பயங்கரவாதம் குடிமக்கள் மனதில் கோலோச்சி வருகிறது. ஏன்? கொலையைத் தடுத்தாலோ, கொலைகாரனுக்கு எதிராக சாட்சி சொன்னாலோ, சொல்பவருக்குப் பாதுகாப்பில்லை என்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது வெட்கக் கேடு என்பதன்றி வேறில்லை. சாலை விபத்தில் சிக்கியவரைக் காப்பாற்றிக் களமிறங்கி காவல் துறை, நீதிமன்றம் என அலைய நேரிடும் என்ற அச்சம் வசதி படைத்த மனிதர்களை விலகியோட வைக்கிறது.

ஏழை மனிதர்களிடம் இந்த மனித நேயம் வீர உணர்வோடு வெளிப்படுகிறது. 'பாதையில் கிடக்கும் முள் பிறர் பாதத்தில் குத்திவிடக் கூடாது என ஓரமாய் எடுத்துப் போட்டு விட்டுப் போவதும் இறைவழிபாடு' என்று இறைத் தூதர் நபிகள் நாயகம் நவின்றார்கள்.'' 'இன வெறியின் பால் அழைப்பவர் என்னைச் சார்ந்தவர் இல்லை' என இறைத் தூதர் நபிகள் நாயகம் கூறியபோது, ஒருவர் தன் இனத்தை நேசிப்பது இனவெறியா என்று ஒரு நபித் தோழர் கேட்கிறார். ''தன் இனத்தை நேசிப்பது இனவெறி அல்ல. தன் இனம் தவறு செய்யும்போது அதை நியாயப் படுத்துவதே இன வெறி'' என்று இறைத்தூதர் முகம்மத் (ஸல்) எடுத்துரைத்தார். அல்காய்தா, ஐ.எஸ், போகோ ஹராம் என்று அப்பாவி மக்களைக் கொல்கின்ற இத்தகைய பயங்கரவாத இயங்கங்களை அடி யோடு வேரறுக்கின்ற கடமை அகில மக்கள் அனைவருக்கும் உண்டு. குறிப்பாக, இதைத் தங்களது முதன்மைக் கடமையாகவே முஸ்லிம்கள் உணர்ந்துள்ளனர்.

உலகளவில் எந்தவொரு வெகுஜன முஸ்லிம் அமைப்புக்களும்;, மார்க்க அறிஞர்களும் இந்தக் காட்டுமிராண்டித்தனங்களை ஆதரிக்கவில்லை. மாறாக, இஸ்லாமியப் பெயர் தாங்கிகளால் நடத்தப்படும் இழிசெயல்களை வன்மையாகக் கண்டித்துப் பரப்புரையும் செய்துவருகின்றனர்.

ஆனால், அவை பின்னுக்குத் தள்ளப்பட்டு பயங்கரவாதிகளுக்கு முஸ்லிம் சமுதாயம் மௌனமான ஆதரவை அளிப்பது போன்ற செயற்கைத் தோற்றத்தை செய்தி ஊடகங்கள் சில திட்டமிட்டு உருவாக்குகின்றன. இஸ்லாம் மார்க்கம் தடுக்கின்ற, முஸ்லிம் சமுதாயம் வெறுக்கின்ற மார்க்க விரோத மூர்க்கச் செயல்களுக்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று வண்ணம் பூசுவதும் ஒரு வகையில் கருத்தியல் பயங்கரவாதமே என்பதையும் கருத்தாள பெருமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கட்டுரையாளர்: தமிழ்த் துறைத் தலைவர், காயிதே மில்லத் கல்லூரி**

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும், எண்ணப்படும் முறைகள்

• மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ்

வாக்களிக்கும் பொழுது முதல் தெரிவிற்கு (அரபு இந்திய இலக்கம்) 1 என்றும் இரண்டாம் தெரிவிற்கு 2 என்றும் மூன்றாம் தெரிவு இருந்தால் 3 என்றும் இலக்கங்களால் வாக்களிக்க வேண்டும், முதல் தெரிவிற்கு 1 என்ற இலக்கம் அல்லது X புள்ளடி இருந்தாலும் செல்லுபடியாகும். ஆனால் இரண்டாம் மூன்றாம் தெரிவுகள் இலக்கங்களாக தெளிவாகக் குறிப்பிடப் பட வேண்டும்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதனை அறிந்து வைத்துள்ளோம். அவர்களில் எவராவது அளிக்கப்படுகிற மொத்த வாக்குகளில் 50% விகிதத்தினை தாண்டிவிட்டால் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார், அவ்வாறு இல்லாதவிடத்து இரண்டாவது சுற்று கணக்கெடுப்பு இடம்பெறும்.

இரண்டாவது சுற்று கணக்கெடுப்பின் பொழுது ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்ற முதலிருவர் (உதரணமாக அந்த முதலிருவரும் (கோட்டா சஜித் அல்லது சஜித் அனுர, அல்லது கோட்டா அனுர என வருவதாக வைத்துக் கொள்வோம்) தவிர்த்து ஏனைய 33 பேரும் போட்டியில் இருந்து நீக்கப்படுவர்.

பின்னர், போட்டியில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வாக்களித்தவர்கள் அளித்துள்ள இரண்டாவது மூன்றாவது வாக்குகள் முன்னிலையில் உள்ள இருவருக்கும் அளிக்கப்பட்டிருந்தால் அவை வெவ்வேறாக அவர்களது வாக்குகளுடன் சேர்க்கப்பட்டு அதிகூடிய வாக்குகள் பெற்றிருப்பவர் வெற்றிபெற்றவராக பிரகடனப் படுத்தப்படுவார்.

கீழே சொல்லப்படும் ஒருசில விடயங்களை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1. முதலாவது சுற்று கணக்கெடுப்பிலேயே நீங்கள் விரும்பும் பிரதான வேட்பாளர் வென்றுவிட வேண்டும் என்று கருதினால் அவருக்கு மட்டும் நீங்கள் புள்ளடியிட்டு வாக்களித்துவிட்டு வீடு திரும்புங்கள்.

2. இவர் பிரதான வேட்பாளாராக முதலிரு இடங்களில் வரமாட்டார் ஆனால் அடுத்துவரும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக அல்லது பலமான எதிர்க் கட்சியாக அவரது கூட்டணி வரும் என்று கருதினாலும் அவருக்கு முதலாவது வாக்கையும் நீங்கள் விரும்பும் பிரதான வேட்பாளருக்கு இரண்டாவது வாக்கையும் நீங்கள் வழங்க வேண்டும்.

3. இவர் பிரதான வேட்பாளர் அல்ல ஆனால் இரண்டாவது சுற்று கணக்கெடுப்பு இடம்பெறும் பட்சத்தில் ஜனாதிபதியின் வெற்றியைத் தீர்மானிப்பார் அல்லது அடுத்த பாராளுமன்றத்தில் பிரதான பாத்திரமாக (தனியாளாக) இருப்பார் என நீங்கள் கருதினால் அவருக்கு முதலாவது வாக்கையும் அவரோ நீங்களோ விரும்பும் பிரதான வேட்பாளருக்கு இரண்டாவது வாக்கையும் நீங்கள் வழங்க வேண்டும்.

4. பிரதான வேட்பாளராக முதலிரு இடங்களுக்கு வருவார்கள் என நீங்கள் கருதுவோருக்கு வாக்களித்து விட்டு ஏனைய உதிரி/பினாமி [illegible] களுக்கு இரண்டாவது மூன்றாவது வாக்குகளை வழங்குவதில் பயனில்லை ஏனென னில் அந்த வாக்குகள் இரண்டாவது சுற்றில் எண்ணப்படுவதில்லை.

5. பிரதான வேட்பாளர்கள் தவிர்த்து ஏனைய உதிரி/பினாமி வேட்பாளர்களுக்கு மட்டும் நீங்கள் வாக்கினை அளிப்பதில் பயனில்லை, வாக்களிக்காமல் இருந்து விடலாம்.

**ஜனாதிபதித் தேர்தலில் கடமை தவறாது பொறுப்புணர்வோடு வாக்களிப்போம்.**

இந்த வருடம் இடம் பெறும் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக எல்லா சமூகங்களாலும் பார்க்கப்படுகின்றது, தேசிய அரசியலில் மாத்திரமன்றி பிராந்திய சர்வதேச பூகோள அரசியல் முக்கியத்துவமும் அதற்கு இருக்கிறது.

அடுத்து அமையவிருக்கின்ற பாராளுமன்றம் மற்றும் புதிய அரசாங்கம் என்பவற்றிலும் இந்தத் தேர்தல் கணிசமான பாதிப்பை, தாக்கத்தை கொண்டிருக்கப் போகின்றது என்பதிலும் சந்தேகமில்லை.

குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் போருக்குப் பின்னரான இலங்கையில் எதிர்கொண்டு வரும் சவால்கள் அவற்றின் உச்சத்தை அடைந்துள்ள நிலையில் மிகவும் கசப்பான அனுபவங்கள், படிப்பினைகள், நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் தான் நாம் இந்தத் தேர்தலை எதிர் [illegible] எமது இருப்பு பாதுகாப்பு மற்றும் ஏனைய உரிமைகளை ஜனநாயக வழிமுறைகளில் மாத்திரமே. எம்மால் அடைந்து கொள்ள முடியும் எனற வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது வாக்குரிமையை தவறாது நாம் பிரயோகிக்க முன்வருதல் வேண்டும்.

குறிப்பாக பெண்கள் தமது ஆடைகள் குறித்த சர்ச்சைகளை தவிர்த்துக் கொள்வதற்காக வாக்களிக்காமல் இருந்து விடுவார்கள், அவர்கள் உரிய சன்மார்க்க ஆலோசனைகளைப் பெற்று தமது பெற்றார், சகோதரர்கள், கணவன்மார் என பாதுகாவலர்களோடு நேர காலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை அளித்து விட வேண்டும்.

ஊருக்கு வெளியே பயணங்கள், வியாபாரங்கள், ஜமாத்துகள் என கிளம்பி விடாது ஊரில் இருப்பதுவும் வெளியில் இருப்பவர்கள் விடுமுறைகளில் வீடுகளில் இருந்து வாக்குரிமையை பிரயோகிப்பதும் காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல், நீதியை நிலை நிறுத்துதல், நல்லாட்சியொன்று அமைய பங்களிப்புச் செய்தல், உரியவர்களிடம் அதிகாரத்தை வழங்குதல், சாட்சியம் சொல்லுதல், அமானிதம் பேணுதல் என நாமறிந்த நல்ல விடயங்களை தேசிய அரசியல் வாழ்விலும் இயன்ற வரை கடைப்பிடிப்பது கட்டாயம் என்ற வகையில் பார்வையாளர்களாக அன்றி பங்காளர்களாக நாமிருக்க வேண்டப்பட்டுள்ளோம்.

வாக்குச் சாவடிக்குள் நீங்கள் எடுக்கின்ற முடிவு ஊரிலும், நகரிலும், மாநகரிலும் மாத்திரமன்றி நாட்டிலும் எதிர்கால சந்ததிகள் வாழ்விலும் நல்லதையோ கெட்டதையோ விளைவிக்கப் போகிறது.

வாக்கு என்பது 'சாட்சியமாகும்',
வாக்கு என்பது 'அதிகாரமளித்தலாகும்'
வாக்கு என்பது 'தெரிவு' ஆகும்,
வாக்கு என்பது 'ஆயுதமாகும்',
வாக்கு என்பது 'தீர்ப்பு' ஆகும்,
வாக்கு என்பது 'வகிபாகம்' ஆகும்,
வாக்கு என்பது 'துணைபோதல்' ஆகும்,
வாக்கு என்பது 'சோதனை' ஆகும்,
வாக்கு என்பது மொத்தத்தில் 'அமானிதமாகும்'.

இந்த அமானிதம் குறித்து மறுமையில் விசாரிக்கப்படுவோம்

என எல்லோருக்கும் பொதுவான தேசிய வாழ்வில் சகல துறைகளிலும் நாம் போற்றுகின்ற உயரிய விழுமியங்களை கொள்கை கோட்பாடுகளை நியாய தர்மங்களை மேலோங்கச் செய்வது தஃவா மற்றும் ஜிஹாத் எனும் விதியாக்கப்பட்ட அறப்பணிகளாகும்.

அரசியல் ஆட்சி அதிகாரம் என்பன அக்கிரமக்காரர்களிடமிருந்து மீட்கப்படுவதற்கான போராட்டம் வரலாறு நெடுகிலும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமிடையிலான தொடர்ந்தேர்ச்சியான சமராக இடம்பெற்று வந்துள்ளதை நாம் நன்கு அறிவோம்.

சத்திய வழி நின்று அரசியல் எனும் மிகப்பெரிய அமானிதத்தை பேணிக் காப்பதில் வேட்பாளராயினும் வாக்காளராயினும் எமது வரலாற்றுக் கடமையினைச் சரியாகச் செய்வோம்.

சரியான முடிவுகளை சரியான நேரத்தில் எடுக்க வேண்டும்; பிழைத்த பின் கைசேதப்பட்டு பயனில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 09

# இடைவிலகல் குறித்து ஆசிரியர்கள்...

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான வினாக்கொத்தில் 14 உருப்படிகள் சேர்க்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான புள்ளிப் பெறுமானங்கள் நன்று, ஓரளவு, குறைவு, இல்லை என்றவாறு அமைந்திருந்தது.

01. பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் (School Based Teachers Development) ஆசிரியர்களின் பங்கேற்பு குறித்த கேள்விக்கு 30% ஆன ஆசிரியர்களே முழுமையாகக் கலந்து கொள்வதாகத் தெரிவித்திருந்தனர். 30% ஆன ஆசிரியர்கள் ஓரளவு கலந்துகொள் வதாகவும் 25% ஆனவர்கள் சிறிதளவே கலந்து கொள்வதாகவும் கூறினர். வழங் கப்பட்ட வினாக்கொத்தின் படி 10% ஆன ஆசிரியர்கள் கலந்து கொள்வதில்லை என்பது தெளிவானது.

**ஆசிரியர் வாண்மை விருத்தியும் பயிற்சியும் தொடர்பில் வினாக் கொத்தின் உருப்படிகள்**

| | ஆசிரியர் பயிற்சி | நன்று | ஓரளவு | குறைவு | இல்லை |
|---|---|---|---|---|---|
| 1. | SBTD நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் | 30% | 30% | 25% | 15% |
| 2. | வெளி வளவாளர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் | 35% | 35% | 20% | 20% |
| 3. | பல்கலைக்கழகத்தில் விஷேடமாகக் கற்ற பாடத்தையே பாடசாலையில் கற்பிக்கும் அனுபவம். | 35% | 25% | 17% | 33% |
| 4. | அரச/அரச அங்கீகாரமுள்ள நிறுவன டிப்ளோமா | 38% | 32% | 19% | 31% |
| 5. | உளவள ஆலோசனைக் கற்கை நெறி | 24% | 25% | 20% | 21% |
| 6. | சுயகற்றலில் ஆர்வம் | 28% | 29% | 18% | 25% |
| 7. | நூல்களைக் கொள்வனவு செய்யும் பழக்கம் | 18% | 28% | 38% | 16% |
| 8. | வீட்டு நூலகத்தைப் பராமரித்தல் | 17% | 27% | 30% | 26% |
| 9. | பாடத்தைத் திட்டமிடல் (Lesson Planning) | 30% | 29% | 20% | 21% |
| 10. | பாடத்தைக் கற்பிப்பதற்குத் தயாராகுதல் (Preparation) | 19% | 32% | 30% | 19% |
| 11. | கற்பித்தல் தொடர்பான கருத்தரங்குகளில் பங்கேற்றல். | 20% | 25% | 30% | 25% |
| 12. | பாடப்பரப்புப் பற்றிய நிபுணத்துவ அறிவு | 30% | 30% | 30% | 10% |
| 13. | ஆசிரியர் வாண்மை விருத்தியிலான ஈடுபாடு | 29% | 28% | 27% | 16% |
| 14. | அறிவைப் பெறும் நோக்கிலான தொடர் பூடகப் பயன்பாடு | 38% | 33% | 17% | 12% |

(அட்டவணை 4.7)

02. பாடசாலையில் தாம் கற்பிக்கும் பாடத்தையே பல்கலைக் கழகத்திலோ, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலோ, கல்விக் கல்லூரிகளிலோ கற்றதாக 35 சதவீதமான ஆசிரியர்கள் தெரிவித்தனர். 65 சதவீதமான ஆசிரியர்கள் வேறு பாடங்களையே கற்பிப்பதாக தெரிவித்துள்ளனர்.

03. வெளிவளவாளர்களைக் கொண்டு வந்து நடாத்தப்படும் ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான கருத்தரங்குகளில் கலந்துகொள்ளல் குறித்த கேள்விக்கு 35 சதவீதமான ஆசிரியர்கள் முழுமையாகப் பங்குகொண்டதாகவும் 25 சதவீதமானோர் ஓரளவு பங்கு கொண்டதாகவும் 17 சதவீதமானோர் சிறிதளவு கலந்துகொண்டதாகவும் கூறியதோடு 33 சதவீதமான ஆசிரியர்கள் அவற்றில் முற்றாகக் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவித்தனர்.

04. அரச/ அரச அங்கீகாரம் கொண்ட நிறுவன டிப்ளோமா பெற்றவர்கள் 38 சதவீதமானவர்கள். அதேவேளை 62 சதவீதமானவர்கள் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெறாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. உளவள ஆலோசனை கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்கள் 24 சதவீதமானவர்கள். 76 சதவீத மானவர்கள் கல்வி உளவியல் கற்கைநெறி எதனையும் பூர்த்தி செய்யாதவர்கள் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

05. கற்பித்தலுக்காகக் கற்க வேண்டும். ஒரு சிறந்த ஆசிரியர் ஒரு சிறந்த மாணவனாகவும் இடையறாத தேடலுள்ளவராகவும் தனது கற்பிக்கும் பாடப்பரப்பு பற்றிய அறிவை இற்றைப் படுத்துபவராகவும் இருத்தல் வேண்டும். அந்தவகையில் ஆசிரியரின் சுயகற்றல் ஆர்வம் குறித்து வினாக்கொத்துக்கு விடையளித்துள்ள ஆசிரியர்களில் 28 சதவீதமானவர்களே தாம் முழுமையான கற்றல் ஆர்வம் கொண்டவர்கள் எனவும் மேலதிக வாசிப்பின் மூலம் அறிவை இற்றைப்படுத்துபவர்களாக (,pÚ¯Á||) உள்ளனர் எனவும் தெரிவித்தனர். 29 சதவீதமானோர் சுயகற்றல் ஆர்வம் ஓரளவுக்கு உள்ளது எனவும் 10 சதவீதமானோர் சிறிதளவே தமக்குக் கற்றல் ஈடுபாடு உள்ளதாகவும் தெரிவித்துள்ள அதே வேளை 25 சதவீதமானோர் மேலதிக கற்றலில் தாம் ஈடுபடுவதில்லை எனக் கருத்துக் கூறியுள்ளனர்.

06. நூல்களைக் கொள்வனவு செய்யும் பழக்கத்தைப் பொறுத்தவரையில் 18 சதவீதமான ஆசிரியர்களே ஏதேனும் நூல்களைக் கொள்வனவு செய்யும் பழக்கமுள்ளவர்கள். 28 சதவீதமானவர்களிடம் இந்தப் பழக்கம் ஓரளவுக்குக் காணப்படுகின்றது. 38 சதவீதமானவர்கள் மிகக் குறைவாகவே புத்தகம் வாங்கும் பழக்கமுடையோர் எனத் தெரிவித்துள்ளனர். அதேவேளை 16 சதவீதமானோர் மொத்தமாகவே புத்தகம் வாங்கும் பழக்கம் தம்மிடம் இல்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

(தொடரும்)

---

## மனநலம் 42

# போதைப்பொருள் கோளாறுகள்

## (Drug Abuse Disorders)



உலக சுகாதார அமையம் (WHO) போதைவஸ்துப் பாவனையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது. உயிர்ப் பொருள் ஒன்று உள்ளெடுக்கும் போது அதன் நடத்தை ஒன்றை அல்லது பல நடத்தைகளை பாதிக்கக் கூடிய பொருள் (Any substance that when taken in to the living organism may modify one or more of its functions) இவ்வரைவிலக்கணம் போதைவஸ்துவை மிக விரிந்த கண்ணோட்டத்தில் விளக்குகின்றது.

பாரம்பரியமாக போதைவஸ்துப் பாவனை Drug Addiction அல்லது Drug Addict என்றே அறியப்பட்டது. இவை விஞ்ஞானபூர்வமான பதப் பிரயோகங்கள் அல்ல என்று தற்போதைய பிறழ்வு உளவியலாளர்கள் கருதுகின்றனர். சமகாலத்தில் போதைவஸ்துப் பாவனை அல்லது அது தொடர்பான நடத்தை ஒழுங்கீனங்களைக் குறிப்பதற்கு Drug Abuse, Drug Dependance, Harmful use, Psycho active substance disorder போன்ற பதப் பிரயோகங்களைக் கையாள்கின்றனர். Psychoactive Drug என்பது மனிதனின் உள நடத்தைகளைப் பாதிக்கின்ற போதைவஸ்துக்களை குறித்து நிற்கின்றது. மதுப் பாவனை போன்று போதைவஸ்துப் பாவனையும் அதன் மாதிரிகளை அடிப்படையாக வைத்து நான்காகப் பிரிக்கப்படுகின்றது.

1. தீவிர போதையூட்டல் (Acute intoxication)
2. பின்வாங்கும் நிலை (Withdrawal State)
3. தங்கியிருக்கும் நோய்க் குறி (Dependence Syndrom)
4. தீங்கு மிக்கப் பாவனை (Harmful use)

இதில் Acute intoxication என்பது மனிதனின் உணர்வுகள், கற்பனை, நுண்ணறிவு, எண்ணங்கள், சிந்தனை போன்ற உளச் செயற்பாடுகளைப் பாதிக்கின்ற வகையிலான போதைப் பொருட்களை பாவிப்பதைக் குறிக்கின்றது. வழியாக மட்டுமன்றி, ஊசிகள் மூலம் உடலில் உட்செலுத்தப்படும் மிக ஆபத்தான போதைவஸ்துக்கள் இவ்வாறு பாவிக்கப்படுகின்றது. மனிதனின் இரத்த அழுத்தத்தை அதிகரித்து அபூர்வ சிந்தனை முதல் கோமா நிலைக்கு பாவனையாளர்கள் செல்லும் அளவுக்கு தீவிர போதையூட்டல் பல பிரதிகூலங்களைக் கொண்டது.

இரண்டாவது நிலை குறிப்பிட்ட ஒரு போதைவஸ்திலிருந்து அவ்வவ்போது வேறு போதைவஸ்துக்களை நோக்கிச் செல்லும் நிலை. ஏற்கனவே பாவித்த போதைப் பொருளால் ஒரு தொகுதி நோய்க் குறிகளை கொண்டுள்ள இவர்கள் அதிலிருந்து விடுபட இன்னொரு வகை போதைவஸ்துவை நோக்கிச் செல்கின்றனர்.

சர்வதேச நோய்ப் பிரிப்பு (International classification of deseases) படி Dependence Syndrom என்பது குறிப்பிட்ட ஒரு போதைவஸ்தில் ஒரு தனிநபர் அடிமையாகும் நிலையைக் குறிக்கின்றது. அக்குறிப்பிட்ட போதைவஸ்து இன்றி அந்நபரால் வாழ முடியாத நிலையை இது குறிக்கின்றது. உடலியல், நடத்தையியல் மற்றும் அறிவுசார் தோற்றப்பாட்டை பாதிக்கும் அளவுக்கு அந்நபர் அக்குறிப்பிட்ட வஸ்துவில் தங்கியிருக்கும் நிலையே இது. Harmful use என்பது போதைவஸ்துவினால் ஏற்படும் உடலியல், உளவியல், சமூகவியல் தாக்கத்தைப் புரிந்துகொண்டே தொடர்ச்சியாக போதைவஸ்துவை உட்கொள்ளும் நிலையாகும். உடலை மிக மோசமாகப் பாதிக்கின்ற வகையில் இவ்வாறான நபர்கள் போதைப் பொருளைப் பாவிக்கின்றனர்.

மதுசாரம் உள்ளடங்கிய மதுபானம் தவிர்ந்த ஏனைய போதைவஸ்துப் பாவனையில் முஸ்லிம் இளைஞர்களின் நிலமை எவ்வாறு உள்ளதென்று கண்டறிய மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்கு நேர்காணல், புற வய அவதானம், கேள்விக் கொத்து என்பன பயன்படுத்தப்பட்டன. கொழும்பு மாவட்டத்தில் போதைவஸ்து கடத்தல், பாவனை, வணிகம் தொடர்பாக இம்மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள், போதைவஸ்து தடுப்புப் பிரிவு, சிறைச்சாலைகள் என்பவற்றிலிருந்தும் பெறப்பட்ட புள்ளிவிபரங்கள், தகவல்கள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

உலகமயமாக்கல் அல்லது மயமாதலினூடே உற்பத்திப் பொருட்கள் மட்டுமன்றி கலாசார சீரழிவை தீவிரப்படுத்தும் போதைப் பொருள் வணிகமும் தாராளமாக நடைபெறுகின்றது. பூகோளமயமாதல் என்பது உலகளவில் பொருட்களை விற்றுப் பணம் சம்பாதிப்பதற்கு சந்தைகளைத் தேடும் முயற்சியே. இந்தளவில் இன்று முழு உலகையும் அச்சுறுத்தும் போதைப்பொருள் உற்பத்தியும் வணிகமும் பாவனையும் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

போதைப் பொருள் பாவனை ஒரு அடிமைப் பழக்கமாக (Addiction) மாறும் போது இளைஞர்களால் அதிலிருந்து விடுபட முடியாத நிலை ஏற்படுகிறது. போதைவஸ்து வியாபாரம் பெருகுவதற்கு மற்றொரு காரணம் வேகப் பணம் சம்பாதிப்பதற்கான இலகு வழியாக அது இருப்பதே. இளைஞர்களைப் பீடித்திருக்கும் மனமுறிவு, மதச்சார்பற்ற வாழ்வு முறை, விழுமியங்கள் மீதான நம்பிக்கையீனம் என்பனவும் இளைஞர்களை இந்த ஆபத்திற்குள் தள்ளிவிடுகின்றன.

கொழும்பில் மட்டுமன்றி சிகாகோ, மும்பாய், கராச்சி ஆகிய நகரங்களில் நடைபெறும் பெரும் குற்றச் செயல்களான கொலை, கொள்ளை, களவு, பாலியல் சுரண்டல், குடும்ப வன்முறை என்பவற்றுக்கான அடிப்படைக் காரணம் போதைவஸ்துப் பாவனையே என்பதை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. வருடாந்தம் 320 அமெரிக்க டொலர்கள் போதைவஸ்து வணிகத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இதேவேளை, போதைவஸ்து வணிகத்தைக் கட்டுப்படுத்த வருடாந்தம் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்படுகின்றன. இது 20 டொன் கொக்கைன் எனப்படும் போதைவஸ்துவினால் கிடைக்கும் வருமானத்திற்குச் சமமானது.

இலங்கையில் 1979க்குப் பிறகு அறிமுகமான திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவான கொழும்பின் நகர வாழ்க்கை வேகமாக மாறி வருகின்றது. அதீத நகரமயமாக்கப்பட்ட சமூக அமைப்பில் போதைவஸ்துப் பாவனை பெரியளவிலான நெருக்கடிகளை உருவாக்குகின்றது. இலங்கையின் மொத்த சிறைக் கைதிகளில் 40%க்கும் அதிகமானோர் போதைவஸ்துக்களுடன் தொடர்பானவர்கள்.

கடந்த 20 ஆண்டுகளில் பொதுவாக இலங்கையிலும் குறிப்பாக கொழும்பிலும் போதைவஸ்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 15 வகையான பிரபல்யமான போதைவஸ்துக்கள் பாவனையில் உள்ளன.

தற்போது பாவனையிலுள்ள போதைப் பொருட்களில் ஹெரோய்ன் (Heroin) மோபைன் (Morphine) கெபைன் (Caffeine) மெதடன் (Methadone) கொகெய்ன் (Cocane) மர்ஜுவானா (Marjuwana) பாபிற்றுரேஸ் (Barbiturates) அம்பெற்றாமைன்ஸ் (Amphetamines) எல்எஸ்டி (LSD) டிஎம்டி (DMT) மெஸ்கலின் (Mescaline) சிலோசிபின் (Psilocybin) பென்ஸிலிடைன் (PCP) றான்குலிஸஸ் (Tranquilises) வொலடைல் கெமிகல்ஸ் (Volatile Chemicals) அல்கஹோல் (Alcohol) புகையிலை (Tabacco) என்பவை பிரதானமானவை.

பொதுவாக போதைவஸ்துப் பாவனைக்கு பின்வரும் காரணிகள் பங்களிக்கின்றன.

**1. உயிரியல் காரணிகள்**

- பரம்பரை அலகு மாற்றம்
- ஏற்கனவே பாவிக்கும் ஒரு போதைவஸ்துவின் தாக்கத்தை மீள வலியுறுத்தல்
- பின்வாங்குவதால் ஏற்படும் விளைவைத் தடுத்தல்
- உயிரியல் இரசாயன காரணிகள்

**2. உளவியல் காரணிகள்**

- நோய் நிவாரணம் என்றவகையிலும் புதியன தேடுதல் என்ற வகையிலும் போதைவஸ்தைப் பாவிக்கலாம்.
- சமூக இயக்கத்திற்குப் புறம்பாக இருக்க விரும்புதல்
- ஏற்கனவே புகைத்தல், மதுபானம் என்பவற்றுக்குப் பழக்கப்பட்டிருத்தல்
- தூண்டல் காரணிகளைக் கட்டுப்படுத்த முடியாதிருத்தல்
- அதீத உணர்ச்சிகளை வெளிப்படுத்தல்
- தாழ்வு மனப்பான்மை
- தன்மை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் இல்லாமை
- குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாதிப்பு
- சளிப்பிலிருந்து விடுபடுதல்
- யதார்த்தத்திலிருந்து தப்பியோடுதல்
- இலக்குகளை அடைவதில் தோல்வி ஏற்படல்
- உளவியல் அழுத்தம்

**3. சமூகக் காரணிகள்**

- சமவயதினரின் அழுத்தல்
- ஏனையோரின் நடத்தையை கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல்
- போதைவஸ்து இலகுவான வழியில் கிடைத்தல்
- போதைவஸ்து தடுப்புச் சட்டங்கள் பலவீனமாக இருத்தல்
- குடும்பத்திற்கிடையே ஏற்படும் மோதல்கள்
- குடும்ப, சமூக ஆதரவு கிடைக்காமை
- குடும்பத்திலிருந்து ஒதுங்கி வாழல்
- சமூகம் பற்றி எப்போதும் எதிர்மறையான கருத்தைக் கொண்டிருத்தல்
- துரித நகரமயமாக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றொரு ஏமாற்றத்தை... (07 ஆம் பக்கத் தொடர்)

பிடித்து அறிந்து கொண்ட பிரதமர் ஆர். பிரேமதாச அந்தச் சூழலைப் பயன்படுத்தி துப்பதாகே ஹிதவதா (ஏழைகளின் தோழன்) என்ற அறிமுகத்தோடு களத்துக்கு இறங்கி வெற்றி பெற்று ஜனாதிபதி ஆனார். நத்திபரி அய அத்தி ஹகி அய கரமு (இல்லாத இயலாதவர்களை, உள்ள இயலுமானவர்களாக்குவோம்) என்ற தனது வாக்கினை நிறைவேற்றும் வகையில் ஜனசவிய போன்ற திட்டங்களை இவர் நடைமுறைப்படுத்தினாலும் தனது வாக்குறுதிகளைப் பூரணப்படுத்த முன்னர் அவர் கொல்லப்பட்டார்.

ஜேஆர் காலத்தில் துவக்கி வைக்கப்பட்ட இனப்பிரச்சினையைப் பயன்படுத்தியே எல்ரிரியின் கை ஓங்கியிருந்த வேளையில் ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டார். எல்ரிரிஈயின் பயங்கரவாதத்தினால் மக்கள் அச்சத்துடன் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தாலும், நாட்டுத் தலைவர், அமைச்சர்களான லலித் அதுலத் முதலி, காமினி திசாநாயக்க என கொல்லப்படுபவர்களின் பட்டியல் நீண்டு கொண்டு சென்றதால் நாட்டுக்கு ஒரு சமாதான தேவதை தேவை என மக்கள் உணரத் தலைப்பட்டிருந்த வேளையிலேயே வெண்புறாவாகத் தன்னை எடுத்துக் காட்டி சந்திரிக்கா ஆட்சியைக் கைப்பற்றினார். அப்பொழுதிலிருந்து எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களதும் கோஷமாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல் என்பது அமைந்திருந்தது. 2005 இல் சந்திரிகா தனது தவணையை நிறைவு செய்யும் போதும் இந்த இரண்டு வாக்குறுதிகளையும் வாரிசுரிமையாக விட்டுச் சென்றார்.

மஹிந்த காலத்திலும் இந்த வாக்குறுதிகளே முன்னிலை வகித்தன. மக்கள் எதிர்பார்த்தது போல ஜனாதிபதி மஹிந்த யுத்தத்துக்கு முடிவு கட்டினார். ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அவரால் முடியவில்லை. யுத்த வெற்றியின் மமதையை வைத்து சிங்கள மக்களிடம் இனவாத உணர்வுகள் மேலோங்க வழியமைத்தார். சிங்கள இனம் அழிந்து வருகிறது, அதனைக் காப்பாற்ற வேண்டும் என்ற தர்மபால சிந்தனைக்கு சிங்களத் தீவிரவாதிகள் இந்தக் காலப்பிரிவில் தூபம் போட்டு வளர்த்தனர். இதனை வைத்து சிங்கள இனத்தைக் காப்பாற்ற வந்த கடவுளாக மஹிந்த தன்னை உருவகப்படுத்திக் கொண்டார். இதனால் அசைக்க முடியாத மாமன்னராக சிங்கள இன உணர்வு மிகைத்த மக்கள் இவரை வணங்கினர். ஆனாலும் இனம் வாழ்வதற்கான சுதந்திரமான தொரு நாடு அற்றுப் போய் வருவதை அது ஒரு குடும்பத்துடன் மட்டும் சுருங்கி வருவதை காலப் போக்கில் மக்கள் அவதானிக்கத் தொடங்கினர். சுரண்டல்களும், ஊழல்களும், வீண் விரயங்களும் அதிகரித்து மக்கள் மீது சுமை கூடத் தொடங்கிய போது தான் மக்கள் கரட் கட்டி வைத்திருப்பதனை உணர்ந்து கொண்டனர்.

இதனால் ஏற்படுத்தப்பட்ட புதிய சூழல், அடுத்த தேர்தலில் ஊழல், மோசடி, வீண் விரயம் அற்ற நல்லாட்சிக் கோஷத்தை வாக்குறுதியாக வழங்கச் செய்தது. ஆனால் ஊழல் மோசடி செய்தவர்கள் யாரும் நல்லாட்சியில் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை. மாற்றமாக பிரதமரின் பிணை முறி விவகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் மாளிகை விவகாரம் என நல்லாட்சியிலும் ஊழல் வளர்ந்து மலிந்தது.

ஸ்ரீமாவோ, ஜேஆர், பிரேமதாச, மஹிந்த எனத் தொடர்ந்த அரசியல் படுகொலைகள் எப்படிக் கொலைக் கலாச்சாரமாக இலங்கை அரசியலில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோ அதேபோல் இப்பொழுது ஊழல் மோசடி என்பது இலங்கையின் அரசியல் கலாச்சாரமாக அரசியல்வாதிகளால் திணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஊழல் மோசடி கோஷங்கள் இனி எடுபடப் போவதில்லை என்ற நிலையில் ஊட்டி வளர்க்கப்பட்ட மேலாதிக்கச் சக்திகள் கட்டியெழுப்பி வைத்துள்ள இன உணர்வுகளுக்குத் தீனி போட்டு வாக்குகளை கொள்ளையடிக்கலாம் என்ற அஸ்திரம் இனவாத அரசியல் செய்பவர்களின் கைக்கு கிடைத்திருக்கிறது. இந்த உணர்வை முதலீடாக மாற்றுவதாக இருந்தால் சிங்கள இனம் அழியப் போகிறது, சிங்கள மக்கள் பாதுகாப்பற்றிருக்கிறார்கள் என்ற மாயைக்கு உருவம் கொடுக்க வேண்டி வருகிறது.

ஈஸ்டர் தாக்குதல் இதற்கான பொன்னான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே தேர்தல் வாக்குறுதிக்கான களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது சிங்கள மத்தியில் நாம் பாதுகாப்பற்றிருக்கிறோம், எங்களை குண்டு வெடித்து அழிக்கப் போகிறார்கள், எங்களது பலோப்பியன்களை சிதைத்து வாரிசுகளையே அழித்து விடப் போகிறார்கள் என்ற பயப்பிராந்தி விஸ்கி பிராண்டியை விட அதிகமாக குடிமக்களுக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இனப் போதையில் இருக்கும் மக்களுக்கு (சிங்கள) தேசியப் பாதுகாப்பு என்பதைத் தவிர சிறந்த வாக்குறுதி எதுவும் இருக்கப் போவதில்லை. இதனைத் தான் இப்பொழுது சிங்கள மக்களின் மீட்பராக தம்மைக் காட்டிக் கொண்டுள்ள ராஜபக்ஷ பரிவாரங்கள் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள். சிங்கள மக்களின் உணர்வுகளை மிகச் சரியாக நாடி பிடித்து இந்தக் கோஷத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆனாலும் முன்னைய வாக்குறுதிகளுக்கான சூழலைப் போலவன்றி தேசியப் பாதுகாப்பு என்ற வாக்குறுதிக்கான சூழல் செயற்கையாக உருவாக்கப்பட்டது என்பதை மக்கள் டொக்டர் ஷாபிக்கு எதிரான ஒப்பரேஷன் பலோப்பியன் நடவடிக்கைகளுக்கு ஊடாக அறிந்து கொண்டார்கள். தேர்தல் மேடைகளில் எங்குமே இதனைப் பிரச்சாரமாகப் பயன்படுத்திக் கொள்ள அவர்களால் முடியவில்லை. முஸ்லிம் பயங்கரவாதிகள் என்பதும் இவ்வாறானதொரு போலியான மாயையே என்பதனை சிங்கள மக்கள் விரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு ஐஎஸ் தொடர்பு இல்லை என்பதை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. இலங்கையிலும் எந்த அமைப்பும் இதற்கு உரிமை கோரவில்லை. உள்நாட்டில் இவர்கள் சம்பளம் கொடுத்து வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என பல முன்னணி பிரமுகர்களே தகவல் வெளியிட்டு வருகிறார்கள். அப்படியானால் யார் இதனைச் செய்திருப்பார்கள் என்ற கேள்விக்கு விடை கிடைக்கும் பொழுது தேசியப் பாதுகாப்பு என்ற வாக்குறுதியின் உண்மையான சொரூபத்தை மக்கள் விளங்கிக் கொள்வார்கள். அதற்கு இன்னும் ஒருவாரம் தான் பாக்கி இருக்கிறது. இந்த வாய்ப்பைத் தவற விட்டால் இதே டைட்டிலில் இன்னும் ஐம்பது வருடத்துக்கு எப்படி ரீலை ஓட்டுவது என்பது இயக்குநர்களுக்குத் தெரியும்.

நாட்டின் எதிர்காலம் பற்றிய தூரநோக்கு உள்ளவர்களே ஜனாதிபதித் தேர்தல் களத்துக்கு வர வேண்டும். இதுவரை காலமும் ஜனாதிபதி வேட்பாளர்கள் சூழ்நிலைகளை வைத்தே வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். இப்பொழுது செயற்கையாய் ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இறந்த காலத்தை வைத்து நிகழ் காலத்தை அமைத்துக் கொள்ளாத சமூகத்துக்கு எதிர்காலமில்லை.

## எதிரியை... (03 ஆம் பக்கத் தொடர்)



**இம்முறை தேசிய மக்கள் சக்தி சார்பில் அநுர குமார திசாநாயக்க களமிறங்கியிருப்பதானது பிரதான இரண்டு வேட்பாளர்களுள் கோட்டாபயவின் வெற்றிவாய்ப்பையே அதிகரிக்கும் என்றொரு கருத்து நிலவி வருகின்றது. இது சம்பந்தமாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

கோட்டாபயவுக்கு எதிராக பிரச்சாரத்தை மேற்கொள்கின்ற பிரதான அணி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாச களமிறக்கப்பட்டுள்ளார். 2015 ஆம் ஆண்டு தேர்தலின் போது ஜேவிபி, NFGG உள்ளடங்கலான பெரும்பாலான அரசியல் கட்சிகள் ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியை தோற்கடித்து ஒரு புதிய சூழலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் இவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தன. ஆனால் துரதிஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய தலைமையிலான அரசாங்கமும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தேர்தலில் நிற்கின்ற அளவுக்கு வழியமைத்துக் கொடுத்தனர். தற்பொழுது அவர்கள் கோட்டாவை தோற்கடிக்க வேண்டும், எங்களுக்கு வாக்குத் தாருங்கள் எனக் கோருவதை ஒரு நகைப்புக்கிடமான சிறுபிள்ளைத் தனமான விடயமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

எனவே தான் நாம் சொல்கின்றோம் அன்று கோட்டாபயவை தோற்கடிக்க முன் வைக்கப்பட்ட காரணிகளையும் முன் வைத்து இம்முறை நாம் இரண்டு சக்திகளையும் அதாவது கோட்டாபயவை எதிரியென்று சொன்னால் அந்த எதிரியை வளர்த்துவிட்ட துரோகியையும் சேர்த்து தோற்கடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் வந்துள்ளோம். ரணில் விக்கிரமசிங்க செய்த காட்டிக்கொடுத்தல் போக 62 லட்சம் மக்கள் வாக்களித்து ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டும், அவர்கள் மீண்டும் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கான வாய்ப்பை கொடுக்கக் கூடாது என்ற அந்த மாற்றத்துக்கு நாம் பங்களிப்புச் செய்தோம்.

சுருக்கமாக சொல்வதானால் எதிரியை தோற்கடிப்பதற்காக துரோகிக்கு வாக்களிக்க முடியுமா என்கின்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. இரண்டு சக்திகளும் நாட்டிற்கு துரோகம் இழைத்தவர்கள். அநியாயம் செய்தவர்கள். எனவே அவர்களை நிராகரித்து புதிய சக்தியை கட்டியெழுப்புவதே இதற்கு நிரந்தரமான தீர்வு. மீண்டும் நாம் சஜித்தை ஜனாதிபதியாக்குவதால் இந்த கோட்டாவுடைய அல்லது ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை இல்லாமல் செய்ய முடியாது. அதற்கான விசுவாசத்தை நாம் இழந்திருக்கின்றோம். எனவே தான் மூன்றாம் சக்தியின் அவசியப்பாடு தேவைப்பட்டுள்ளது.

**உங்களது அவதானத்தின் படி தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

நிச்சயமாக யாரும் அறுதிப் பெரும்பான்மையை பெற முடியாது. இரண்டாம் வாக்கிலேயே ஒருவர் வெல்லும் வாய்ப்புள்ளது. அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி கோரிக்கை விடுக்கின்றது. அதனூடாகவே நிரந்தரமான ஒரு மாற்றத்தைக் காண முடியும். தங்கள் வாக்கை ஒவ்வொருவரும் சமயோசிதமான முறையில் பயன்படுத்துவது அவர்களைப் பொருத்தது. ஆனால் நிரந்தரமான மாற்றத்துக்கு சஜித்தோ கோட்டாவோ ஒரு தீர்வல்ல. அநுர குமாரவை நியமிப்பதன் மூலமே இந்நாட்டில் நிரந்தர மாற்றத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

**மக்கள் விடுதலை முன்னணியின் சில கொள்கைகள் முஸ்லிம்களுக்கு பாதிப்பாகக் காணப்படுவதாக சில கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது விடயம் தொடர்பில் உங்களது கட்சி அவர்களுடன் எத்தகைய பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தது?**

இந்நாட்டில் கொள்கை அரசியல் என்பது மக்கள் விடுதலை முன்னணியிடம் மாத்திரமே உள்ளது. மற்ற எல்லா அரசியலும் சந்தர்ப்பவாத அரசியலாகும். எனவே கொள்கை நிலைப்பாடுகளை வைத்திருக்கின்ற ஒரு கட்சியோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவது இலகுவானது. அந்தக் கொள்கைகளை மாற்றியமைப்பதும் இலகுவானது. அந்தவகையில் நாம் பல விடயங்களை -குறிப்பாக முஸ்லிம் சமூகம் சார்ந்த- ஜேவிபியிடம் உள்ள பல கொள்கை சார்ந்த விடயங்களை அவர்களுடன் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவற்றைப் பிரதிபலிக்கக் கூடியதாக நாங்கள் மாற்றியமைத்திருக்கின்றோம். ஆனால் ஜேவிபிக்கு என்று சில தனித்துவமான கொள்கைகள் இருக்கின்றன. நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு என்று சில தனித்துவமான கொள்கைகள் இருக்கின்றன. அவற்றை நாங்கள் கருத்து வேறுபாட்டுக்குரிய விடயங்களாக வைத்துக்கொண்டு நாங்கள் நாட்டுக்கும் சமூகத்துக்கும் தேவையான பொது விடயங்களுக்கான வேலைத்திட்டத்தில் இணைந்திருக்கின்றோம். இங்கு நாங்கள் இணைந்திருப்பது ஜேவிபியுடன் அல்ல. தேசிய மக்கள் சக்தியுடன். தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தி சிறுபான்மை சமூகத்தை பாதிக்கச்செய்கின்ற விடயங்களை நீக்கி அனைத்து மக்களதும் தனித்துவங்களை சட்ட ரீதியாக பாதுகாக்கக்கூடிய ஏற்பாடுகளை தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் கொண்டு வந்திருக்கின்றோம்.

**இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு நீங்கள் கூற வரும் செய்தி என்ன?**

அரசியலில் பிரதான பிரச்சினையாக இருப்பது இனவாதம். இதனை வைத்துத் தான் பிரதான இரண்டு தரப்புகளும் அரசியலை செய்துகொண்டுள்ளன. பிரதான இரு முகாம்களும் இனவாதிகளின் புகலிடமாக மாறியிருக்கின்றது. இது துரதிஷ்டவசமான நிலை. எனவே இந்நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கும் சிறுபான்மை மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கும் இனவாதமில்லாத, இனவாதிகள் இல்லாத ஒரு தரப்பை அரசியல் ரீதியாக பலப்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே அதற்கான சிறந்த சந்தர்ப்பம் முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைத்திருக்கின்றது. உங்களது பெறுமதியான வாக்குகளை இப்பெறுமதியான மாற்றத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

கோட்டாபயவை தோற்கடிப்பதற்கு சஜித்துக்கு வாக்களிக்க வேண்டும் என்ற குறுகிய வட்டத்துக்குள் இந்தத் தேர்தலை பார்க்கக் கூடாது என்பதே எமது செய்தி. கோட்டாவை தவிர்த்து சஜித்தைக் கொண்டு வருவதால் எதிர்பார்க்கின்ற பெரிய மாற்றங்கள் ஒன்றும் நிகழப்போவதில்லை. எனவே தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்துவது தேசிய கடமையாகவும், முஸ்லிம் சமூகத்துக்கு மிகவும் பாதுகாப்பான ஒரு தீர்வாகவும் அமையும் என்பது எமது உறுதியான எதிர்பார்ப்பாகும்.

## அரசியல்.... (04 ஆம் பக்கத் தொடர்)

சுவாரஸ்யமாக, ஒரு முஸ்லிம் வேட்பாளரும் தனது வாக்காளர்களை ஏமாற்றுவதற்காக ஒரு சாதாரண தேர்தல் அறிக்கையுடன் போட்டியிடுகிறார். வரலாற்றில் தோல்வியுற்றதன் மூலம் வெற்றியைக் கோரும் ஒரே வேட்பாளராக அவர் இருப்பார். தெட்டத் தெளிவாக அவர் தனது புரவலர்களைத் திருப்திப்படுத்தப் போட்டியிடுகிறார். இருந்தும் ஒட்டுமொத்த சமூகமும் ஒரு பயங்கரமான சிக்கலை எதிர்கொள்கிறது, குறிப்பாக இரத்தக் களரி ஈஸ்டர் படுகொலைகளுக்குப் பின்னர்.

அதிகாரத்திற்காகப் போட்டியிடும் இரண்டு முக்கிய கட்சிகளான ஐதேக மற்றும் எஸ்.எல்.பி.பி மற்றும் அந்தந்த கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் மேலாதிக்கவாதிகளின் கடும் அழுத்தத்தின் கீழ் இருப்பதை இரு சிறுபான்மையினரும் உணர வேண்டிய நேரம் இது. கோட்டா மேலாதிக்கவாதிகளினால் முழுமையாக ஆதரிக்கப்படுகிறார், அவர்களை எதிர்த்து நிற்க சஜித்தால் முடியாது. சிறுபான்மையினரின் ஆதரவோடு சஜித் வெற்றி பெற்றாலும் மேலாதிக்கவாதிகளின் விருப்பத்திற்கு எதிராக செயல்பட அவரால் முடியாது இருக்கும். இறுதியில், நாட்டின் பன்மை ஜனநாயகம் மற்றும் அதன் பொருளாதாரம் பாதிக்கப்படும். சிறுபான்மையினர் என்ன செய்ய வேண்டும்?

அவர்களது (சிறுபான்மையினர்) பார்வை ஜனாதிபதித் தேர்தலைத் தாண்டி அடுத்த பொதுத் தேர்தலை நோக்கியே இருக்க வேண்டும். சிங்கள மக்களிடம் இருந்து தங்களது கோரிக்கைகளுக்கு அனுதாபம் இல்லாவிட்டால் தமிழர்கள் தங்கள் கோரிக்கைகளில் எதையும் வெல்ல முடியாது. குறிப்பாக, அவர்கள் சார்பாகப் பேசக் கூடிய ஒரு சிங்களக் குரலை அவர்கள் தேட வேண்டும், அந்தக் குரல் தமிழர்கள் சார்பாக மட்டுமல்ல, அனைத்து இலங்கையர்களின் சார்பிலும் பேச வேண்டும். நடைமுறையில் உள்ள இன-ஜனநாயகத்தில், ஆளும் கட்சியும் அதன் எதிரிகளும் பௌத்த மேலாதிக்கத்தின் கட்டளைகளைக் கவனிக்கும்போது, சிறுபான்மையினர் கட்டாயம் பாதிக்கப்படுவார்கள். இதனால்தான் சிறுபான்மையினர் இருவரும் இன-தேசியவாதம் இல்லாத ஒரு மாற்றீட்டைத் தேட வேண்டும், அந்த மாற்றீடு ஐயத்துக்கு இடமின்றித் தேசிய மக்கள் சக்தி (NPP) ஆகும்.

அனுர குமார திசாநாயக்க மேடையில் உறுதியான பொருளாதாரம் முக்கியமானது எனப் பிரச்சாரம் செய்கிறார். அவரது நோக்கம் எல்லாக் குடிமக்களுக்கும் சமமான மருத்துவம் வழங்குதல், அனைத்து அரசு அதிகாரிகளும் பொறுப்புக்கூறல் மற்றும் சகிக்க முடியாததாக மாறியுள்ள வருமான இடைவெளியைக் குறைத்தல் ஆகியவற்றுடன் நாட்டின் மோசமான கல்வி மற்றும் சுகாதார தரங்களை மேம்படுத்துவது மற்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவது பற்றிப் பேசும் ஒரே வேட்பாளர் அவர்தான். அவர் தனது கல்வி சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, எங்கள் பள்ளிகளில் கற்பிக்க வேண்டிய பாடமாக ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளார்.

தன்மொழிக் கல்வி, சிங்களம் மற்றும் தமிழ் நடுத்தர பட்டதாரிகளை ஒருங்கிணைந்த உலகில் வேலை சந்தைகளுக்கு அணுகுவதை இழந்துவிட்டது. தற்போது அவர்களின் ஒரே வழி பொதுத்துறையில் வேலை தேடுவதேயாகும், மேலும் அந்தத் துறை கோப்புத் தள்ளுபவர்களால் சுமையாக உள்ளது. ஒரு அறிக்கையின்படி பொதுத்துறையில் 1.5 மில்லியன் ஊழியர்கள் 800,000 பணியாளர்களின் வேலையைச் செய்கிறார்கள் (ஐலன்ட், 13 அக்டோபர் 2019, தலையங்கம்). எத்துணை பணமும் திறமையும் வீணாகிறது! AKD இன் அறிவிப்புகள் கவனமாக வடிவமைக்கப்பட்ட திட்டத்திலிருந்து வெளிவருவதாகத் தெரிகிறது, அதை அவர் முழுமையாக வெளியிட வேண்டும்.

ஏ.கே.டிக்கு மாறாக, மற்ற இரண்டு வேட்பாளர்கள் VAT வரியை 15 விழுக்காட்டில் இருந்து 8 விழுக்காடாகக் குறைத்தல், பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவை அறிமுகப்படுத்துதல், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை ரூபா 1500/= ஆக அதிகரித்தல், தேசிய ஒற்றுமை, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் சமூக ஒற்றுமையை அடைவதற்கான ஒரு விரிவான மூலோபாயம் அல்லது திட்டம் இல்லாமல் வட்டி விகிதங்களை நிர்ணயித்தல் மற்றும் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்தல் போன்றவை அவர்களின் வாக்குறுதிகள் ஆகும். மற்றச் சிக்கல்களைச் சமாளிக்காமல் நாடு எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஒட்டுவேலை மற்றும் தனிமையில் சரிசெய்ய முடியாது.

ஏகேடி மற்றும் அவரது என்பிபி ஆகியவை ஜனாதிபதிக்கான போட்டியில் வெல்ல முடியாமல் போகலாம். ஆனால் அடுத்த நாடாளுமன்றத்தில் ஒரு சக்தி வாய்ந்த மாற்றாக மாற அவர்களின் கைகளைப் பலப்படுத்தப்பட வேண்டும். சர்வோதயா ஆதரவு NPM, இனை NPP உடன் ஒன்றிணைக்க முடிந்தால் அது நாட்டுக்கு நல்லது. தமிழர்களும் முஸ்லிம்களும் தங்கள் தலைவர்களைப் புறக்கணித்து இந்த முற்போக்கான சக்திகளுக்குப் பின்னால் தங்கள் ஆதரவை நல்க வேண்டும். சிறுபான்மையினரும் அனைத்து இலங்கையர்களும் சமாதானமாகவும் செழிப்பாகவும் வாழ, நாட்டில் ஒரு தீவிர மாற்றம் தேவை.

ஊழல், சர்வாதிகாரவாதம், வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகியவற்றிற்கு எதிரான பொது மக்களின் வெளிப்படையான கிளர்ச்சியைக் கண்ட லெபனான், ஹொங் கொங், சிலி மற்றும் மெக்ஸிகோ போன்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் தவறான அரசு மற்றும் தவறான நிர்வாகத்தால் தாங்க முடியாத கஷ்டங்களுக்கு மத்தியில் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமைக்கான சிங்கள மக்களின் திறனை ஆச்சரியத்தோடு பாராட்ட வேண்டும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661, People's Bank A/c 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூரின்... (03 ஆம் பக்கத் தொடர்)



சில ஜனாதிபதி வேட்பாளர்கள் ஊடகங்கள் எழுப்பும் கேள்விகளுக்கு சரியாக பதில் வழங்குவதில்லை. பதிலளிக்க இன்னுமொருவரை சாட்டி விடுவார்கள். சஜித் பிரேமதாச ஒருபோதும் அப்படி நடந்து கொள்ளவில்லை. ஊடகங்கள் எழுப்பும் கேள்விகளுக்கும், புத்திஜீவிகள் மத்தியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கும் அவர் சரியான முறையில் பதிலளிக்கிறார். இவரது துணிச்சலான பதிலளிப்பு முறையை நகர்ப்புற புத்திஜீவிகள் பாராட்டியுள்ளனர்.

சஜித் ஜனாதிபதியானதும் நாடு முழுவதிலுமுள்ள ஜனாதிபதி மாளிகைகளை இளம் தலைமுறையினருக்கான தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்போவதாக தெரிவித்திருக்கிறார். இவரது இந்தக் கருத்து என்னுள் மாத்திரமல்ல இந்நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் மத்தியில் மிகப்பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவரது களங்கமற்ற தன்மையிலும் நேர்மையிலும் துணிச்சலிலும் பொறாமை கொள்பவர்களே இப்படியான கருத்துக்களை பரப்பி வருகின்றார்கள்.

**நாட்டின் இளம் தலைமுறையினர்கள் மத்தியில் சஜித் பிரேமதாச குறித்த மனப்பதிவுகள் எவ்வாறுள்ளன?**

இன்று நாட்டின் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் அரசியல் குறித்த விரக்தி நிலையில் உள்ளனர். அவர்கள் மத்தியில் சமகால அரசியல் குறித்து கூடுதல் தெளிவுகள் இல்லை. ஒப்பீட்டளவில் சஜித் பிரேமதாச இளைஞர்தான். அவரிடம் எதிர்காலத் திட்டங்கள் உள்ளன. 5ஆம் தொழில்நுட்ப புரட்சி தொடர்பில் கதைக்கும் காலத்திலேயே நாம் வாழ்கின்றோம். இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் சஜித்தின் கடந்தகால சாதனைகளை புரிந்துகொள்ள வேண்டும். அவர் செய்யும் விடயங்கள், அவரது குறிக்கோள் குறித்து நன்கு புரிதல்களை பெற வேண்டும். இளம் தலைமுறையினர் குறித்து சஜித்திடம் மிகப்பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாளைய உலகை வெல்லப் போகும் இளம் தலைமுறையினர் தொடர்பான வேலைத்திட்டத்தையும் குறிப்பிட்டுள்ளார். செயற்பாடுகளை செயலில் காட்டிய ஒருவர் குறித்து இன்று இளம் தலைமுறையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**சஜித் பிரேமதாசவின் ஆட்சியின் கீழ் எல்லா இனங்களும் சமமாக மதிக்கப்படுவார்கள் என்பதற்கு நீங்கள் வழங்கும் உத்தரவாம் என்ன?**

நான் சஜித்தை சிறுவயது முதல் அறிகின்றேன். அவரை நான் அடிக்கடி சந்தித்திருக்கிறேன். ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்பும் அவர் தனது குடும்பத்தவர்களை அரசியலில் ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. அவர் குடும்ப ஆட்சியை நிராகரித்தார். அவரது இந்தச் சிந்தனைக்குள் சஜித் பிரேமதாசவுக்கு அரசியல் பிரவேசம் பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 1993இல் பிரேமதாச அவர்கள் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து சஜித் பிரேமதாசவை அரசியலில் ஈடுபடுமாறு பலர் வேண்டுகோள் விடுத்தார்கள். அவ்வழைப்பை ஏற்ற அவர் இலகுவாக வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்ல முடியுமாக இருந்த தந்தையின் தொகுதியான மத்திய கொழும்பு தொகுதியில் வாக்குக் கேட்காமல் வறிய மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஹம்பாந்தோட்டைக்கு சென்று தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். அன்று முதல் இன்று வரை பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து கட்சிக்குள்ளாலும் ஜனாதிபதி வேட்பாளர் பதவியை பெற எத்தனையோ போராட்டங்களை அவருக்கு செய்ய வேண்டியிருந்தது. நாட்டின் ஏழ்மை மக்களின் கடின உழைப்பையும், வலியையும் அறிந்த சஜித் பிரேமதாச இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானால் அவரது ஆட்சியின் கீழ் சகல இன மக்களும் அமைதியாகவும், நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வார்கள் என்பதை நான் உறுதியாக கூறிக்கொள்கிறேன். அவர் கஷ்டப்படும் மக்கள் மத்தியில் இருந்து வந்த ஒருவர். அவருக்கு மக்களின் வலி வேதனை தெரியும். அப்படிப்பட்ட ஒரு மனிதர் ஒரு நாளும் அவரை நம்பிய மக்களை ஏமாற்ற மாட்டார். அனைவருக்கும் விடிவு கிடைக்கும்.

## தேர்தலிலே... (03 ஆம் பக்கத் தொடர்)

சட்டத்தை பயன்படுத்தியோ பல்கலைக்கழகத்தை பொறுப்பேற்பதற்கு கடும் பிரயத்தனங்களை ஜனாதிபதி தொடக்கம் அனைவரும் முயற்சித்தார்கள். அவையத்தனையும் இன்று வீண் போன நிலையில் அவர்கள் மீண்டும் அதனை எங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே பல்கலைக்கழகத்தை இறைவன் பாதுகாத்துள்ளான். அதனைப் பாதுகாப்பதற்காக நான் இத்தேர்தல் களத்தில் இறங்கவில்லை. அப்படிப் பாதுகாப்பதற்காக இறங்கியிருந்தாலும் எந்தவிதமான பிரச்சினைகளும் கிடையாது. ஏனென்றால் வறிய மாணவர்களுக்காக, ஏழை மாணவர்களுக்காக, அநாதை மாணவர்களுக்காக கட்டப்பட்ட அப்பல்கலைக்கழகத்தைப் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் கடமையும் இந்நாட்டு முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. அது வக்பு சொத்து. என்னுடைய சொத்தல்ல. இதில் 90 வீதமான பங்குகள் வக்பு சொத்தாகும்.



**'ஜனாதிபதியை தீர்மானிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்' என்கின்ற சுலோகத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறீர்கள். இதன் அர்த்தத்தை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

ஜனாபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற போது முஸ்லிம் சமூகம் தீர்மானிக்கின்ற A எனும் வேட்பாளர் 62,00,000 வாக்குகளை எடுக்கின்றார். B என்ற வேட்பாளர் 60,00,000 வாக்குகளை எடுக்கின்றார். ஆகவே இப்பொழுது தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார் முதலாவது சுற்று முடிவடைந்துவிட்டது. A வேட்பாளர் 62,00,000 வாக்குகளையும் A வேட்பாளர் 60,00,000 வாக்குகளையும் பெற்றுள்ளார்கள். யாருமே 50 வீதத்துக்கு மேல் பெறவில்லை, ஆகவே 02ஆம் சுற்று வாக்கென்னும் பணி ஆரம்பிக்கப்படும் என்பார். இப்பொழுது எங்களுடைய 250,000 பேர் இந்தத் தேர்தல் களத்திலே B என்ற வேட்பாளருக்கு வாக்களித்திருந்தால் தேர்தல் ஆணையாளர் எங்களுடைய 250,000 ஐயும் கொண்டு போய் அந்த B எனும் வேட்பாளருடன் சேர்த்தால் இப்பொழுது அவர் 64,50,000 வாக்குகளை பெற்றவராக இருப்பார். அதற்குப் பிறகு 50 வீதத்துக்கு மேல் பார்ப்பது கிடையாது. தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார் முதலாவது சுற்றில் தோல்வியடைந்த B எனும் வேட்பாளர் இரண்டாவது சுற்றிலே ஒட்டகத்தில் போட்டியிட்ட இன்னாருடைய இரண்டரை லட்சம் வாக்குகளை கொண்டு இந் நாட்டின் 8 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் என்று.

இன்னுமொரு கட்டமாக இதனை நோக்கினால் முதலாம் சுற்றில் A என்ற வேட்பாளர் 60,00,000 வாக்குகளை எடுக்கின்றார். நமது B என்ற வேட்பாளர் 59,00,000 வாக்குகளை எடுக்கின்றார். 1 லட்சம் மேலதிக வாக்ககளால் A எனும் வேட்பாளர் முதல் சுற்றில் வெற்றிபெற்றிருக்கின்றார். ஆனால் ஜனாதிபதியாக வர முடியாது. ஏனெனில் 51 சதவீதம் எடுக்கவில்லை. நமது சமூகம் இந்த ஒட்டகைச் சின்னத்திற்கு 110,000 வாக்குகளை அளித்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். 16 லட்சம் வாக்காளர்களில் 110,000 வாக்குகளை மாத்திரம் எடுத்திருக்கிறேன் என வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது தேர்தல் ஆணையாளர் A எனும் வேட்பாளர் இத்தனை லட்சம், B எனும் வேட்பாளர் இத்தனை லட்சம் ஆகவே ஒருவரும் பெரும்பான்மை பெறவில்லை முதல் சுற்றில் எல்லோரும் தோல்வி என்று அறிவிப்பார். இரண்டாம் சுற்று நடைபெறும். அப்போது முஸ்லிம்கள் எமக்கு அளித்த 110,000 வாக்குகளையும கொண்டு போய் B எனும் வேட்பாளருக்கு வழங்கினால் முதல் சுற்றில் தோல்வி யடைந்த அவர் 2ஆவது சுற்றில் 10,000 மேலதிக வாக்கினால் இந்நாட்டின் 8ஆவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார்.

## கோட்டாபய ராஜபக்ஷ... (03 ஆம் பக்கத் தொடர்)

வாசலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள், முஸ்லிம் மீன்பிடிக் கிராமமொன்று தாக்கப்பட்டது. இப்படி முஸ்லிம்கள் வடக்கிலும் கிழக்கிலும் மிகுந்த கஷ்டங்களுடனே வாழ்ந்தார்கள். அப்போது அமெரிக்கா கூட விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது, வடக்கையும் கிழக்கையும் ஒப்படைத்து விடுங்கள் என்று இலங்கைக்கு கூறியது. கிட்டத்தட்ட 3 வருட காலத்தில் எல்லோராலும் முடியாது எனக்கூறப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு தோற்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தமது பூர்வீகத்துக்கு செல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் இழந்தவை மீளப்பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் உறுதியான தலைமைத்துவமே காரணம். இப்படி சிறந்த குறிக்கோளுடைய தலைவரே எமக்குத் தேவை.



பத்து வருடங்களாக ஒரு ஆட்சி நடைபெற்றால் ஓரிரு சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும். இவற்றை மஹிந்தவும் கோட்டாவும் தனிப்பட்ட முறையில் போய்ச் செய்தார்களா? இல்லையே, எனவே அவர்களுடைய 10 வருட ஆட்சியில் புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட வடகிழக்குப் பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. மாவில் ஆறு அணைக்கட்டு மூடப்பட்டது. இது பெருமளவான முஸ்லிம் விவசாயிகளுக்கே பாதிப்பாக அமைந்தது. இதற்காக வேண்டியே புலிகளுக்கு எதிரான யுத்தமே ஆரம்பிக்கப்பட்டது. ஏன் இவற்றையெல்லாம் எமது சமூகம் பார்ப்பதில்லை.?

யுத்தம் முடிவடைந்ததும் நாட்டின் பொருளாதாரமும் பாரியளவில் வளர்ச்சி கண்டது. 2009 இல் 4 இலட்சம் சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு வந்தார்கள். ஆனால் 2018ஆம் ஆண்டளவில் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளார்கள். எனவே இதனால் சிங்கள மக்கள் மாத்திரமா பயனடைகிறார்கள். எமது நாட்டின் ஒட்டுமொத்த சமூகமும் இதனால் பிரயோசனம் பெறுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் யார் காரணம்? உறுதியானதொரு தலைமைத்துவமே இவற்றுக்கான பாதைகளை திறந்துவிட்டது. எனவே கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் நாட்டில் அமைதி நிலவும், தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இதன் மூலம் நாடு நிலையான அபிவிருத்தியை அடையும்.

**கோட்டாபயவின் ஆட்சியின் கீழ் எல்லா இனங்களும் சமமாக மதிக்கப்படுவார்கள் என்பதற்கு நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?**

தனிப்பட்ட முறையில் கோட்டாபயவுடன் 15 வருட காலமாக பழகியிருக்கிறேன். அவர் ஒரு இனவாதியல்ல. வடகிழக்கை புலிகளிடமிருந்து விடுவித்ததன் பின்னர் அங்கு சிங்களவர்கள் மாத்திரம் போய் குடியேறவில்லை. பாதிக்கப்பட்ட எல்லா இன மக்களும் தான் அங்கு போய் குடியமர்ந்தார்கள். புலிகள் மூதூர் பிரதேசத்தை தாக்கிய போது அது முஸ்லிம்களது பிரதேசம் என்று அவர் வேடிக்கை பார்க்கவில்லை. 3 நாட்களில் அப்பிரதேசத்தைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தார். மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்ட போது இது முஸ்லிம்களுடையது என அவர் வேடிக்கை பார்க்கவில்லை. அங்கு படைகளை அனுப்பி போர் செய்தார். எனவே இவர் ஆட்சிக்கு வந்தால் உறுதியான தலைமைத்துவம் நாட்டிற்கு கிடைத்து விடும். அதன் பின்னர் எல்லா இன மக்களுக்கும் சமமான உரிமையும் கௌரவமும் கிடைத்துவிடும் என நான் உறுதியாகவே நம்புகிறேன்.

**கோட்டாபய அதிகாரத்திற்கு வந்தால் நாட்டை சர்வாதிகாரி போல் ஆட்சி செய்வார் என்கின்ற அச்ச நிலை பெரும்பாலான மக்களிடத்தில் காணப்படுகிறது. அது தொடர்பில் குறிப்பிடுவதாயின்....**

இப்படியொரு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனை ஐ.தே.க.வே கச்சிதமாகச் செய்துள்ளது. இவர் மீது கொண்ட அச்சமே அதற்குக் காரணம். ஏன் அப்படிப் பயத்தை ஏற்படுத்த வேண்டும். உண்மையில் கோட்டாபயவுக்கு யார் பயப்பட வேண்டும்? தீவிரவாதிகள், குடு விற்பனையார்கள், பாதாள உலகக் கோஷ்டியினர் போன்றோரே இவருக்கு பயப்பட வேண்டும். அவர்களை வைத்து கொஞ்சி விளையாட முடியாது. இவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். அவர்களுக்கு இவர் இடமளிக்க மாட்டார். இது சமுதாயத்துக்கும் நல்லது. இது குறித்து உண்மையிலேயே சமூகம் சந்தோசப்பட வேண்டும்.

**கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கொலைக் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் என இன்னோரன்ன குற்றச்சாட்டுக்கள். நீங்கள் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி என்ற வகையில் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

இவையெல்லாம் பச்சைப் பொய்யானவை. பொய்யான வழக்குகளே இவர் மீது தொடுக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 17 வழக்குகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. எல்லா வழக்குகளிலும் அவரது சட்டத்தரணியாக நானே மன்றில் ஆஜராகியிருக்கிறேன். ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள அத்தனை வழக்குகளையும் நானே கையாள்கிறேன்.

தற்போதைய அரசாங்கம் எப்சீஐடி என்றொரு தனியான பொலிஸ் பிரிவை உருவாக்கியது. சட்டத்தை மாற்றி விஷேட நீதிமன்றத்தைத் தாபித்தார்கள். எல்லாவற்றைச் செய்தும் இவர்களில் ஒருவரையேனும் சிறையில் தள்ள முடியாமல் போனது ஏன்? இப்படியான ஒன்றுமே நடைபெற்றதில்லை. வெறுமனே பேச்சு மாத்திரமே இவை. நானும் நீங்களும் ஒரு ரேஸ் ஓடுவதாக இருந்தால் என்ன செய்ய வேண்டும்? உங்களை விட நான் வேகமாகச் செல்வதற்கு பயிற்சி எடுக்க வேண்டும். அதுவே முறை. ஆனால் இவர்கள் அப்படியல்ல. எனக்கு ஓட முடியாதென்றால் அடுத்தவனுக்கு கால்மாட்டு போடுவதே இவர்களுடைய வழக்கம். இது சரியா? இவர்களது முறையே அப்படித்தான்.

இவர்கள் சுமத்துகின்ற ஒரு குற்றச்சாட்டிலும் கோட்டாபய சம்பந்தமில்லை என்பதனாலேயே அவர் தப்பிக்கொண்டுள்ளார். இவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்ற யாராக இருந்தாலும் என்னுடன் ஒரு பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள். ஏதாவதொரு ஒரு தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பில் இவர் மீது குற்றம் சுமத்துகின்றவர்கள் பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள் என நான் அழைக்கின்றேன்.

**ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றிபெற்ற பின்னர் அவருக்கு வாக்களிக்காத முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவார் என நீங்கள் கூறியதாக ஒரு கருத்து சமூக வளைத்தளங்களில் பரவுகிறது. இது தொடர்பில் நீங்கள் குறிப்பிட விரும்புவது என்ன?**

இது பச்சைப் பொய்யானது. இதுவல்ல நான் சொன்ன கருத்து. நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதெல்லாம் ஆட்சி செய்ததோ அப்போதெல்லாம் சிறுபான்மையினருக்கு பிரச்சினைதான். உதாரணமாக, 1977 இல் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தது. 1980இல் யாழ் நூலகத்தை கொளுத்தி மிகப்பெரும் கலவரமொன்றையே ஏற்படுத்தினார்கள். இங்கு தான் எல்.ரீ.ரீ.ஈ உருவாக்கத்துக்கான தூபமிடப்பட்டது. அதன் பிறகு எல்.ரீ.ரீ.ஈ யினால் அங்கிருந்த 13 இராணுவ வீரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதை வைத்தே 1983 இல் கறுப்பு ஜூலை கலவரம் வெடித்தது. சுமார் 4,000 பேர் கொல்லப்பட்டார்கள். 18,000 வீடுகள் அழிக்கப்பட்டன. இதுவே ஐ.தே.க.வின் வரலாறு. இச்சம்பவத்தை வைத்து அவர்கள் தேர்தலை ஒத்திவைத்தார்கள். அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தினார்கள். அதன் பின்னர் 1990 இல் ஐ.தே.க.வின் ஆட்சிக்காலத்திலேயே வடபுல முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். காத்தான்குடி பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கிழக்கில் பல்வேறு இடங்களில் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. ஐ.தே.க.வுக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் எந்த விதமான கவனங்களும் இல்லை.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இந்நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். ஆனால் இவர்களின் தற்போதைய ஆட்சியில் சஹ்ரான் வருவதற்கான வழிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதன் மூலம் முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் சோதனையே ஏற்பட்டது. இதுபோன்று வரலாற்றில் நடந்தது அரிது. எல்லோரையும் பயங்கரவாதிகளைப் போன்றே பார்த்தார்கள். காரணம், தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அறிவும் குறிக்கோளும் இவர்களிடம் இல்லை. பெரும்பான்மை சமூகத்துக்கும் சிறுபான்மை சமூகத்துக்கும் இடையில் விரோதங்களை ஏற்படுத்தி குளிர்காய்வதே இவர்களின் வரலாறு. சமூகத்தை பிரித்தாள்வதே இவர்களின் சூழ்ச்சி. இதுவே இவர்களது வரலாறு. இதனால் தான் நான் கூறினேன், இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் எமக்கு மிகப்பெரும் பாதிப்பு நடக்கும். இனவாதத்தை ஏற்படுத்துவார்கள்.

மஹிந்தவின் காலத்தில் அளுத்கமயில் ஒரு வன்முறை இடம்பெற்றது. இது நடக்கக் கூடாததொரு விடயம். ஆனால் அக்கலவரத்தை அவர்கள் ஒரு நாளில் கட்டுப்படுத்தினார்கள். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட்து. ஆனால் இவர்களது குறுகிய காலத்தில் ஒரு கலவரமா வெடித்தது. அம்பாறை, திகனை, ஹெட்டிப்பொல என பல்வேறு இடங்களில் கலவரம் இடம்பெற்றது. இவற்றுக்கு மொட்டுக்காரர்களே காரணம் என்றார்கள்.

இப்படி அடுத்தவனுக்கு விரல் நீட்டினால் அரசாங்கத்தில் எவ்வித பிரயோசனமும் இல்லைதானே. இவர்களே தான் இவற்றை உருவாக்கி ஆதாயம் தேடப் பார்க்கிறார்கள். எனவே உறுதியான தலைவர் இருந்தால் தான் மதங்களுக்கிடையில் சமாதானம் நிலவும். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இனவாதத்தை தூண்டி வேடிக்கை பார்ப்பார்கள். இதுவே இவர்களது வரலாறு இதைப் பற்றியே நான் கூறினேன்.

**உங்களது அவதானத்தின் படி இம்முறை தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என நினைக்கின்றீர்கள்?**

கடைசியாக 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேற்றைப் பாருங்கள். அதில் பொதுஜன பெரமுன 50 லட்சம் வாக்குகளை பெற்றது. சுதந்திரக் கட்சி 14 லட்சம் வாக்குகளைப் பெற்றது. இரண்டையும் சேர்த்தால் மொத்தமாக 64 லட்சம். ஐ.தே.க. 36 லட்சம் வாக்குகளையே பெற்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்று லட்சம் வாக்குகளைப் பெற்றது. அது இம்முறை ஐ.தே.க.வுக்கு கிடைத்தால் 39 லட்சம். முஸ்லிம் காங்கிரஸூக்கு ஒரு லட்சம் வாக்குகள் கிடைத்தது. அதுவும் ஐ.தே.க.வுக்கு கிடைத்தால் 40 லட்சம். ரிசாட்டின் கட்சி பெற்ற 1 லட்சமும் கிடைத்தால் 41 லட்சம். பொதுஜன பெரமுனவுடன் தற்பொழுது தொண்டமானின் கட்சி சேர்ந்துள்ளது. அவர்களது ஒன்றரை லட்ச வாக்குகளையும் சேர்த்தால் 65,50,000 வாக்குகள். இவை தவிர டக்ளசின் 1 லட்சம், கருணா, பிள்ளையான், வியாழேந்திரன், அதாவுல்லா, சம்மாந்துறை, சாய்ந்தமருது பிரதேசங்களில் எம்முடன் இணைந்திருப்பவர்கள், அகுரணையில் உள்ளவர்கள், இன்னும் சில நாட்களில் புத்தளம் பாயிசும் எம்முடன் இணையவுள்ளார், இவர்கள் எல்லோரதும் வாக்குகளைச் சேர்த்தால் 67 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கோட்டாபயவுக்கு உள்ளது. ஆனால் ஐ.தே.க.வுக்கு 41 லட்சம் வாக்குகள் மாத்திரமே. கடந்த இரண்டு வருட காலத்தில் நடந்த மாற்றங்களால் ஐ.தே.க.வுக்கு வாக்குகள் இன்னும் அதிகரிக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா? இவர்களுக்கு வெல்வதற்கான சாத்தியங்களே இல்லை.

இதுதவிர அண்மையில் நடைபெற்ற எல்பிட்டிய தேர்தலை பாருங்கள். பொதுஜன பெரமுனவுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 5000 தோட்டத் தமிழர்களது வாக்குகளும் உள்ளன. இங்கு பொதுஜன பெரமுனவும் சுதந்திரக் கட்சியும் சேர்த்து 70 வீதமான வாக்குகளை பெற்றது. ஐ.தே.க. 24 வீத வாக்குகளையே பெற்றது. இது சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதி என்கின்றனர். இலங்கையிலுள்ள 160 தேர்தல் தொகுதிகளில் கிட்டத்தட்ட 124 தொகுதிகள் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளாகும். சிங்கள மக்கள் 74.5 வீதம் உள்ளனர். இதில் 70 வீதத்தை பெற்றால் இதிலேயே 53 வீதம் கிடைத்துவிடும். தோட்டத் தமிழர்கள், முஸ்லிம்களை சேர்த்தால் மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்தில் கோட்டாபய வெற்றிபெறுவார். எனது ஆய்வின் படி 10-15 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் கோட்டாபய வெற்றிபெறுவார். இதில் நாம் உறுதியாக உள்ளோம்.

**பொதுஜன முஸ்லிம் பெரமுனவின் செயற்பாடுகள் எப்படிப் போய்க்கொண்டுள்ளது?**

2015 காலப்பகுதியை விட இன்று எமது அணியில் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் இணைந்து பணியாற்றுகிறார்கள். நாம் சொல்லும் உண்மைகளை இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் விளங்கியுள்ளார்கள். ஒட்டகத்தை கட்டிவைத்து விட்டு தொழுங்கள் என்றே நபியவர்கள் கூறியுள்ளார். எனவே எமக்குள்ள அறிவை வைத்து ஆராய்ச்சி செய்து பார்த்தால் இன்று உண்மையை விளங்கிக்கொள்ள முடிகின்றது. அதிக முஸ்லிம்களது பொருளாதாரம் சரிவடைந்து இன்று வாழ முடியாத நிலையில் உள்ளார்கள். அறிவு ரீதியாகச் சிந்திப்பவர்கள் உறுதியான தலைமைத்துவத்தை விரும்புகிறார்கள். தற்போது 25 வீதமான முஸ்லிம்கள் எம்முடன் உள்ளார்கள். கடந்த முறை 5 வீதம் இருந்தது. இதனை 35 ஆக மாற்றிக் கொள்வதே எமது குறிக்கோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






MFCD நிறுவனத்தின் 4 ஆவது பொதுக்கூட்டம் 05-11-2019 இல் Grand Oriental Hotel இல் நடைபெற்றது. எதிர்வரும் காலத்துக்கான நிர்வாக அங்கத்தவர்கள் இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்டனர். GREEN COLOMBO INITIATIVE - 2020 எனும் தொனிப்பொருளை மையமாக வைத்து இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதுடன் கொழும்பு மாவட்டத்தில் 15,000 மரங்கள் நடும் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பெறுமதியான மரக்கன்றுகள் நினைவுச் சின்னமாக வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



சுற்றுச் சூழல் தொடர்பாக ரம்ய லங்கா வருடாந்தம் முன்னெடுத்து வரும் தேசிய வேலைத் திட்டத்தின் இவ்வருட கருப்பொருளான ''சுற்றுச் சூழல் உணர்வுமிக்க பிரஜை' என்ற வேலைத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 27.10.2019 ஆம் திகதி அக்குறணை பாலிகா முஸ்லிம் மகா வித்தியாலய வளாகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 12:30 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சி போன்ற பல அம்சங்கள் இடம்பெற்றது.



ஸம் ஸம் பவுண்டேஷனின் School with a smile வேலைத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 2019.11.02 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. எதிர்வரும் கல்வியாண்டை முன்னிட்டு 15,000 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 60,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தடையின்றி தமது கல்வியைத் தொடர உதவியைப் பெற்றுள்ளனர். இந்நிகழ்வில் விஷேட அதிதிகளாக சதிபாசல பவுண்டேஷனின் ஸ்தாபகர் உதய ஈரியகம தம்மஜீவ தேரர், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் தஹம் பஹன அமைப்பின் ஸ்தாபகர் சகோதரர் அன்டன் சால்ஸ் தோமஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஸம் ஸம் நிறுவனத்தின் தலைவர் முப்தி யூஸுப் ஹனிபா அவர்கள் உரை நிகழ்த்தும் போது இத் திட்டத்திற்கான 45 மில்லியன் ரூபாய்களையும் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம்கள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org